விலை ரூபா: 20.00

# தமிழ்நாதம்

Thamil Naatham

இராகம் 01 தாளம் 94 | வள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 13 திங்கட்கிழமை (29.10.2012) | பக்கங்கள்: பதினாறு

டெங்கு ஒழிப்புப் பணியில்



அணி திரள்வோம்

## கனடாவில் சுனாமி தாக்கியது

(கொழும்பு)

கனடாவில் ஆயிரம் மைல்களுக்கு அப்பால் 7.7 ரிச்டர் அளவுகோலில் பூமியதிர்ச்சி ஏற்பட்டத்தையடுத்து தொடர்ந்து ஹவாயிலுள்ள சைன் தீவை சுனாமி நேற்று ஞாயிற்றுக்கிழமை தாக்கியுள்ளது.

சனிக்கிழமை நள்ளிரவு இப்பகுதியில் அவசர எச்சரிகை விடுக்கப்பட்டதுடன், கரையோரத்தை அண்டிய பகுதிகளிலுள்ள மக்களை வெளியேறுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. 02

# தமிழ்க் கூட்டமைப்புக்குள் உட்கட்சி முரண்பாடுகள்!

## இருந்தாலும் பாதிப்பு இல்லை என்கிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன்

(ஆர். சிவரூபன்)

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் உட்கட்சி முரண்பாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தனியொரு கட்சியாகப் பதிவு செய்வதற்குச் சிலர் தயக்கம் காட்டுகிறார்கள் என்றபோதிலும் கூட்டமைப்பின் செயற்பாடுகளை இந்தப் பிரச்சினை பாதிக்காது" என்று ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பைச் சேர்ந்த சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

"தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் அமைப்புத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. அந்த வகையில் எழுந்துள்ள இந்தப் பிரச்சினை கூட்டமைப்பைப் பாதிக்காது" என்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறினார்.

தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எப்., ரெலோ, புளொட் ஆகிய ஐந்து கட்சிகளின் கூட்டமைப்பே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரா சம்பந்தன் தலைமையிலான தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்திலும், தமிழரசுக் கட்சியின் பெயரிலுமே தேர்தல்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு போட்டியிட்டு வருகிறது. தமிழ் 02

# இலங்கையில் இனப்பிரச்சினையே இல்லை என்கிறார் கோதாபய

(கொழும்பு)

இலங்கையில் இனப்பிரச்சினை எதுவும் கிடையாதென்று பாதுகாப்புச் செயலாளர் கோதபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வரலாற்று காலமாகத் தமிழ் மக்கள் சில பிரச்சினைகளை எதிர்நோக்கி வந்த போதிலும் இன முறுகல்கள் கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.


விடுதலைப் புலிகள் எந்தக் காலத்திலும் சமாதானத்தை விரும்பவில்லை எனவும், மாறாக சமாதான பேச்சுவார்த்தைகளைப் பயன்படுத்தி வன்முறைகளில் ஈடுபட்டதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் உரிமைக்காக குரல் கொடுப்பதாக அறிவித்த போதிலும் உண்மையில் தங்களை பலப்படுத்திக் கொள்ளவும், தங்களுக்கு சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ளவுமே முயற்சித்ததாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

இன,மத,மொழி,ஜாதி, பால் அடிப்படையில் இலங்கையில் எவருக்கும் சந்தர்ப்பங்கள் மறுக்கப்படுவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனை புள்ளி விபர 02



காணாமல் போனவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் கலந்து கொண்ட, 22 ஆவது தேசிய நினைவூட்டும் நிகழ்வு, சீதுவை, ரத்தொலுவ சந்தியிலுள்ள நினைவுத் தூபிக்கு அருகில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

## அரசியல் தீர்வே முக்கியம்; அரசியல் கட்சிப் பதிவு முக்கியமில்லை

(கொழும்பு)

**- இரா சம்பந்தன்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஐந்து கட்சிகளில் நான்கு கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்ய வேண்டுமென்று வலியுறுத்தி வருகின்றன. ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப். தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய கட்சிகளின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்யுமாறு வலியுறுத்துகின்றன. இரா சம்பந்தன் தலைமையிலான தமிழரசுக் கட்சி இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் 02

## ஜெனீவா மனித உரிமைக் கூட்டத்தில் இலங்கை பற்றி 99 நாடுகள் பேசும்

(கொழும்பு)

நாளை மறுதினம் ஜெனீவாவில் ஆரம்பமாகவுள்ள உலக பருவ கால மீளாய்வு அமர்வுகளில் சுமார் 99 நாடுகள் இலங்கை தொடர்பாகப் பேசவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சில நாடுகள் முன்கூட்டியே இலங்கை தொடர்பான கேள்விகளை சமர்ப்பித்துள்ளன. மனித உரிமை மீறல்கள், வடமாகாணசபைத் தேர்தல், உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு பரிந்துரைகள் அமுலாக்கம் போன்ற விடயங்கள் குறித்து கேள்விகள் எழுப்பப்படலாம் எதிர்பார்க்கப்படுகின்றது.

அமெரிக்கா, பிரித்தானியா, செக் குடியரசு, கனடா, ஸ்பெய்ன், டென்மார்க் மற்றும் 02

## உயர்தரப் பரீட்சை முடிவுகள் டிசெம்பரில்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சை முடிவுகள் எதிர்வரும் டிசெம்பரில் வெளிவரும் என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக கல்வியலாளர்களின் போராட்டம் காரணமாக பரீட்சை வினாத்தாள்களை திருத்தும் பணி தாமதமடைந்துள்ளதாகவும், தற்சமயம் அவ்விடயம் சுமூகநிலையை அடைந்துள்ள நிலையில் எதிர்வரும் டிசெம்பர் மாதத்தில் பரீட்சை முடிவுகளை வெளியிட முடியுமெனவும் கல்வி அமைச்சர் பந்துல மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நவம்பர் மாதம் 10ஆம் திகதிக்குள் வினாத்தாள்கள் திருத்தப்பட்டு, முடிவுகள் அனைத்தும் கல்வித் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படுமென பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளன பேச்சாளர் தேவக வீரகோன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கை மக்களின் உரிமைகளுக்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும்

### சர்வதேச மன்னிப்புச் சபையின் இந்தியக் கிளை

(புதுடில்லி)

இலங்கை வாழ் மக்களின் உரிமைகளை உறுதி செய்ய இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டுமென சர்வதேச மன்னிப்புச் சபையின் இந்தியக் கிளை கோரியுள்ளது. மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டோருக்குத் தண்டனை விதிக்கப்பட வேண்டுமெனவும் அது சுட்டிக்காட்டியுள்ளது.

குற்றச் செயல்களில் ஈடுபட்டோருக்கு எதிராக விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை அரசாங்கத்தை, இந்தியப் பிரதமர் 02

## புலிகள் மீதான தடையை நீக்குமாறு சத்தியக் கடதாசி சமர்ப்பிப்பு

(சென்னை)

விடுதலைப் புலிகள் மீதான தடையை இந்திய அரசு உடனடியாக நீக்க வேண்டுமெனக் கோரி இந்திய தீர்ப்பாயத்தில் சத்தியக் கடதாசியொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. புலிகளின் சுவிட்ஸர்லாந்தின் இணைப்பாளர் சிவநேசன் எனபவர், சென்னை வழக்குரைஞர் ராதாகிருஸ்ணன் மூலம் இன்று இந்த சத்தியக் கடதாசியை சமர்ப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. 02

# 13ஆவது திருத்தத்தை அரசு ரத்து செய்ய முயன்றால் தமிழ் கட்சிகள் அரசில் இருந்து விலக வேண்டும்

**- ஐ.தோ.கா. செயலாளர் முரளி ரகுநாதன்**

13ஆம் திருத்தச் சட்டத்தை ரத்துச் செய்யும் தீர்மானம் எதனையும் அரசு பாராளுமன்றில் சமர்ப்பித்தால் அரசிற்கு துணை போகின்ற அனைத்து தமிழ் பேசும் தலைமைகளும் அரசில் இருந்து வெளியேறுவார்களா என ஐ.தொ.கா செயலரும் மத்திய மாகாண சபை உறுப்பினருமான முரளி ரகுநாதன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இன்று அரசின் முக்கிய பங்காளி கட்சிகளாக இருக்கும் சில கட்சிகள் 13ம் திருத்தம் குறித்து வெளியிடும் கருத்துக்கள் அரசின் நிலைப்பாடு அல்ல என அமைச்சரவைப் பேச்சாளரும் தகவல் மற்றும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல்ல செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

அப்படியாயின் தொட்டிலையும் ஆட்டி குழந்தையையும் கிள்ளி விடுவதா இந்த அரசின் நோக்கம் என்ற கேள்வியை ஊடகத்துறை அமைச்சரிடம் கேட்க வேண்டியுள்ளது?

தமிழருக்கான அரசியல் தீர்வை பெற்றுக்கொடுக்க இந்த அரசு ஆர்வமாக உள்ளதா? அல்லது 13வது திருத்தச் சட்டத்தை இல்லாதொழித்து தமிழர்களை பலவீனமாக்கும் செயற்பாட்டிற்கு அரசின் பங்காளி கட்சிகளின் உதவியை நாடி மறைமுக செயலிலுக்கு கொடிப்பிடிக்கின்றதா?

இந்த மறைமுக அராஜகங்களுக்கு எதிராக அனைத்து தமிழ் பேசும் தலைமைகளும் அரசிற்கு துணைபோகாமல் தமிழ் பேசும் மக்கள் நலன் கருதி உடனடியாக அரசில் இருந்து வெளியேற வேண்டும் என முரளிரகுநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

# அமெரிக்காவில் பயங்கர சூறாவளி பேர் பலி: 6 கோடி மக்கள் பாதிப்பு

அமெரிக்காவில் நிலைகொண்டுள்ள "சண்டி" சூறாவளியால் இதுவரையில் 60 பேர் பலியானதுடன, 6 கோடி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்கச் செய்திகள் தெரிவிக்கின்றன. இச்சூறாவளியால் பல குடியிருப்புக்கள் சேதமடைந்துள்ளதுடன், மரங்கள் முறிந்து வீடுகளிலும் மின்கம்பங்களிலும் வீழ்ந்துள்ளன. இதனால் அங்கு மின்தடை ஏற்பட்டுள்ளதுடன், போக்குவரத்தும் ஸ்தம்பிதமடைந்துள்ளது.

இதனையடுத்து எதிர்வரும் 6ஆம் திகதி நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள இரு வேட்பாளர்களும் தங்களுடைய தேர்தல் பிரசாரங்கள் மற்றும் தேர்தல் நடவடிக்கைகளுக்கான நிகழ்ச்சி நிரல்களை மாற்றியமைத்துள்ளனர்.

"சண்டி" சூறாவளியால் ஏற்பட்ட சேதங்களை நிவர்த்திசெய்வதற்கு பில்லியன் டொலர்கள் தேவைப்படுவதாக அமெரிக்க தகவல்கள் தெரிவிப்பதுடன், கரீபியன் கடலிலிருந்து மணிக்கு சுமார் 75 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசுவதாகவும் அத்தகவல்கள் தெரிவித்துள்ளன.

அமெரிக்காவை அண்டிய கரீபியன் கடல் பகுதியில் சில நாட்களுக்கு முன்பு சண்டி புயல் உருவானதால், கரீபியன் கடல் பகுதியிலுள்ள ஜமைக்கா, கியூபா நாடுகளில் சூறாவளியுடன் கூடிய கடும் மழை பெய்துவருகிறது.

"சண்டி" சூறாவளி அமெரிக்காவின் புளோரிடா, மேரிலாண்ட் மாகாணங்களை தாக்கலாமென எச்சரிக்கை விடுக்கப்பட்ட நிலையில், இம்மாகாணங்களில் முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும், இச்சூறாவளி இன்னும் சில மாநிலங்களில் தாக்கக்கூடுமென்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளைஇ இச்சூறாவளியால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை எதிர்கொள்ளும் வகையில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா அதிகாரிகளுடன் அவசர சந்திப்பொன்றை மேற்கொண்டு அவசர கால நிலைமைகள் குறித்து ஆராய்ந்துள்ளார்.

## புலிகள் மீதான தடையை...(தொடர்)

தமிழர்களின் உயிர்கள், உடமைகளை பாதுகாப்பதற்காகவே புலிகள் போராடினர் எனவும் புலிகளின் எவ்வித் நடவடிக்கை இந்தியாவில் தற்போது இல்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ள வழக்குறைஞர், புலிகள் மீதான தடையை நீக்குவதற்கான வாதத்தையும் முன்வைத்துள்ளார்.

2010ஆம் மற்றும் 2011ஆம் ஆண்டு காலப்பகுதியில், இந்தியாவில் புலிகளின் நடவடிக்கைகள் தொடர்பில் எவ்வித தகவல்களும் வெளியாகவில்லை.

அதனால் இந்தியாவில் புலிகள் அமைப்பு மீதான தடை நீக்கப்பட வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த சத்தியவோலையை சமர்பித்த போது கேள்வி எழுப்பிய தீர்ப்பாயத்தின் நீதிபதி வி.கே. ஜெய்ன், "சிவநேசன் என்பவரே விடுதலைப் புலிகளின் இணைப்பாளர் என்பதை எவ்வாறு ஏற்க முடியும்?" என வழக்குரைஞரிடம் வினவினார்.

அதற்கு பதிலளித்த வழக்குரைஞர் ராதாகிருஸ்ணன், "சிவநேசனின் கடவுச்சீட்டு மற்றும் ஏனைய தகவல்கள் அவரின் சத்தியக் கடதாசியுடன் இணைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

தமது கட்சிக்காரரான சிவநேசன், இந்தியாவில் வைத்து கைது செய்யப்படமாட்டார் என்று உறுதியளிக்கப்பட்டால் தீர்ப்பாயத்தின் முன் ஆஜராகுவார் என்றும் வழக்குரைஞர் நீதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

அத்துடன், சிவனேசன் என்பவர், இலங்கையில் இருந்து நெதர்லாந்துக்கு இடம்பெயர்ந்தவர்கள் சார்பாக செயற்பட்டு வருபவர் என்றும் இலங்கைத் தமிழர்களின் பாதுகாப்பைக் கோரி ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தில் பொது அக்கறை வழக்கு ஒன்றை தாக்கல் செய்துள்ளார் எனவும் மேற்படி சத்தியக் கடதாசியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த விடயம் தொடர்பில் மத்திய அரசாங்கத்தின் நிலைப்பாட்டை அறிந்து அறிவிக்குமாறு மத்திய அரசாங்கத்தின் சட்டத்தரணி சாந்தியிடம் கேட்டுக்கொண்ட நீதிபதி, தீர்ப்பாயத்தின் அமர்வு மதுரையில் இன்றும் நவம்பர் 3ஆம் திகதி சென்னையிலும் கூடும் என அறிவித்தார்.

## கனடாவில் சுனாமி...(தொடர்)

இப்பூமியதிர்ச்சியைத் தொடர்ந்து முதலாவது அலை 2.5 அடி உயரத்தில் எழுந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சில பகுதிகளில் 3 முதல் 6 அடி உயரத்திற்கு அலை எழுமென முன்னர் கணிக்கப்பட்டதுடன், தங்களது உயிர்களைப் பாதுகாத்துக்கொள்ளுமாறும் பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

## அரசியல் தீர்வே...(தொடர்)

பதிவு செய் யும் விவகாரம் இப்போதை க்கு முன்னுரிமை கொடுக்க வேண்டிய விடயமல்ல" என்று கடந்த வியாழக்கிழமை கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஐந்து கட்சி பிரதிநிதிகளும் சந்தித்த போது திரு. இரா சம்பந்தன் தெரிவித்தார். "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்யும் விடயம் இப்போது முக்கியமானதல்ல தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வு காணும் விடயமே இப்போது முக்கியமானது" என ஆர் சம்பந்தன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பை அரசியல் கட்சியாக பதிவு செய்யும் பிரச்சினை 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவிற்கு வந்தபின்பு முன் வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கையில் இனப்...(தொடர்)

ரீதியில் நிரூபிக்க முடியுமு என அவர் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகங்களில் சகல இனங்களையும் சேர்ந்த மாணவ மாணவியர் கல்வி பயின்று வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். அரசாங் கத்தினால் வழங்கப்படும் சேவை களில் எவருக்கும் ஒடுக்குமுறை கள் மேற்கொள்ளப் படுவதில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.இனங்களுக்கு இடையில் பாரியளவில் முரண்பாடுகள் எதுவும் கிடையாது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். புனர்வாழ்வு அளிக்கப்பட்ட விடு தலைப் புலி உறுப்பினர்கள் சமூ கத்துடன் மீள இணைக்கப்பட்டுள் ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# யாழ் இசை இறுவெட்டு வெளியீட்டு விழா

"யாழ் இசை" இறுவெட்டு வெளியீட்டு விழா நேற்று மு.ப. 11.00 மணியளவில் கலைத்தூது கலையகத்தில் திரு. யோசப் பாலா தலைமையில் இடம்பெற்றது.

மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் வரவேற்புரையை திரு. ஜி. ஜனகன் அவர்கள் நிகழ்த்தினார். தலைமையுரை, பிரதம விருந்தினர் உரையைத் தொடர்ந்து பிரதம விருந்திராக வருகை தந்த டாக்டர். க. சோதிதாசன் யாழ் இலக்கிய ஓவிய தலைவர் அவர்கள் இறுவெட்டை வெளியீட்டு வைக்க முதற் பிரதியை திரு. அ. பரஞ்சோதி (தூ. மாநகர சபை உறுப்பினர்) பெற்றுக் கொண்டார். அடுத்து வெளியீட்டுரையை சாளினி சாள்ஸ் (இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நிகழ்ச்சித் தொகுப்பாளர்) நிகழ்த்தினார். தொடர்ந்து கலைஞர் கௌரவிப்பு இடம்பெற்றது. மதிப்பீட்டுரை, ஏற்புரை என்பவற்றுடன் திரு. பிரான்சிஸ் அருள்நேசனின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவுபெற்றது.

## ஜெனீவா...(தொடர்)

நெதர்லாந்து போன்ற நாடுகள் ஏற்கனவே கேள்விகளை சமர்ப்பித்துள்ளன.

இலங்கை விவகாரம் குறித்த விவாதத்தின் போது ஒவ்வொரு நாட்டுக் கும் தலா ஒரு நிமிடம் 12 வினாடிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

வடக்கில் ஏன் தேர்தல் நடத்தத் தாமதமாகின்றதென அமெரிக்கா கேள்வி எழுப்பியுள்ளது.

சாட்சிகள் மற்றும் பாதிக்கப்பட்டோர் பாதுகாப்பு சட்டங்களை அமுல்பத்துவதில் கால தாமதம் நிலவி வருவதாக அமெரிக்கா சுட்டிக்காட்டியுள்ளது.

சனல்4 வீடியோ, மூதூர் தன்னார்வ தொண்டர் படுகொலை, திருகோணமலை 5 மாணவர்கள் படுகொலை, பொத்துவில் பிரதேசத்தில் பத்து தன்னார்வத் தொண்டர்கள் படுகொலை, ஊடகவியலாளர் பிரகீத் எக்நெலிகொட காணாமல் போன விவகாரம், சண்டே லீடர் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க படுகொலை ஆகியன தொடர்பில் கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன.

இதேவேளை, மெனிக்பாம் முகாம் மூடப்பட்ட போதிலும் இடம்பெயர்ந்த மக்கள் முழுமையாக மீள்குடியேற்றப்படவில்லை என்று கனடா சுட்டிக்காட்டியுள்ளது. சர்வதேச தர நிர்ணயங்களின் அடிப்படையில் இடம்பெயர் மக்கள் மீள்குடியேற்றப்பட்டனரா என்பதில் சந்தேகம் நிலவி வருவதாகக் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட இராணுவ நீதிமன்றின் விசாரணைகள் எந்தளவிற்கு பூர்த்தியாகியுள்ளன என்பது பற்றி பிரித்தானியா கேள்வி எழுப்பியுள்ளது.

## இலங்கை மக்களின்...(தொடர்)

மன்மோகன் சிங் கோர வேண்டுமென வலியுறுத்தியுள்ளது. 50,000 இந்திய பிரஜைகளின் கையொப்பங்களுடன் கூடிய விசேட மகஜர் ஒன்று இந்திய பிரதமரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் உலகப் பருவ கால மீளாய்வு அமர்வுகள் நடைபெறவுள்ளதாகவும் இதனால் இந்தத் தருணத்தில் இலங்கை விவகாரம் தொடர்பில் அழுத்தம் கொடுக்க முடியும் எனவும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

சட்டவிரோத படுகொலைகள், கடத்தல்கள், காணாமல் போதல்கள், சித்திரவதைகள் உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் உரிய விசாரணை நடத்தி, நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத தடைச் சட்டம் இரத்துச் செய்தல், உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு பரிந்துரைகள் அமுல்படுத்தல், பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டோரை விடுதலை செய்தல், குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படாது தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை விடுதலை செய்தல், தேசிய மனித உரிமை செயற்திட்டத்தை அமுல்படுத்தல் உள்ளிட்ட சில விடயங்கள் குறித்து இலங்கை கவனம் செலுத்த வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயங்கள் குறித்து கவனம் செலுத்துவதாக இலங்கை அரசாங்கம் அறிவித்த போதிலும் இதுவரையில் கவனம் செலுத்தப்படவில்லை என சர்வதேச மன்னிப்புச் சபையின் இந்தியக் கிளை சுட்டிக்காட்டியுள்ளது.


## தமிழ்க்...(தொடர்)

தேசியக் கூட்டமைப்பு அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்படாதபடியால் அதன் பெயரில் தேர்தல்களில் போட்டியிட முடியாமல் உள்ளது. ஆகவேதான் தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய நான்கு கட்சிகளும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைப் பதிவுசெய்யுமாறு வலியுறுத்தி கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தனுக்குக் கடந்த வாரம் கடிதமொன்றினை அனுப்பிவைத்தன.

இது தொடர்பாக ஆராயக் கடந்த வியாழக்கிழமை கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஐந்து கட்சித் தலைவர்களும் கூடி ஆராய்ந்தனர். இருந்தும் அபிப்பிராய வித்தியாசம் காரணமாக எந்த முடிவுக்கும் வர முடியாமல் கூட்டம் முடிவுக்கு வந்தது. இதன்பின்னர் கருத்துத் தெரிவித்த சம்பந்தன் எம்.பி. "தமிழ் தேசியக் கூட்டமைப்பைப் பதிவுசெய்வது இப்போதைக்கு முக்கிய பிரச்சினையல்ல என்று கூறினார். இது தொடர்பாகக் கேட்டபோதே சுரேஷ் பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு கூறினார். கூட்டமைப்புக்குள் பிரச்சினை இருக்கத்தான் செய்கின்றது. இதை தீர்ப்பதற்கான கருத்தாடல்கள் நடந்து கொண்டுள்ளன. தமிழ் தேசிய கூட்டமைப்பை தனிக்கட்சியாக பதிவு செய்வது பற்றிய பிரச்சினையே இருக்கின்றன. தமிழ் தேசிய கூட்டமைப்பை தனியொரு கட்சியாக பதிவு செய்ய வேண்டுமென்ற கருத்து இருந்தே வந்துள்ளது. ஆனால், இதிலுள்ள அங்கத்தவ கட்சிகள் சில தயக்கம் காட்டுகின்றன "எது எப்படியிருந்தபோதும் தமிழ் தேசிய கூட்டமைப்பு எப்போதும் தமிழ் மக்களை ஒரே குரலில் பிரதிநிதித்துவம் செய்யும். இது எமது நோக்கத்திற்கு தடையாக இருக்காது. தமிழ் மக்களின் நியாயமான அபிலாஷைகளை பெற்றுக்கொடுக்கும் எமது இலக்கு மாறாது" என்றார்.

# தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த அனைவரும் பாடுபட வேண்டும்

## மன்னார் ஆயர்



அனைவரும் பெருமிதம் கொள்ளக் கூடிய வகையில் இலங்கையை மாற்றியமைக்க வேண்டுமென மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

அண்மையில் மகாத்மா காந்தி நிலையத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நாட்டை அனைவரினதும் நாடாக மாற்றியமைக்கும் முனைப்புக்களுக்கு முக்கிய பங்களிப்பினை வழங்க வேண்டும். அனைத்து இன சமூக மக்களும் இந்த நாட்டை தாய் நாடு என பெருமிதத்துடன் கூறிக் கொள்ளக் கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நாட்டில் பிறந்த அனைவரும் இலங்கையர்களே எனவும், எவராலும் இதனை மாற்ற முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். ஒரே நாட்டில் பல்வேறு இன சமூகங்கள் தங்களது மரபுரிமைகளுடன் வாழக்கூடிய சூழ்நிலையை ஏன் உருவாக்க முடியாது என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டியது மிகவும் அவசியமானது எனவும், அதற்காக அனைவரும் பாடுபட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். கடந்த காலப் பிரச்சினைகள் தொடர்பிலான தெளிவான புரிந்துணர்வு நல்லிணக்கத்தை துரித கதியில் ஏற்படுத்த வழிகோலும் என அவர் தெரிவித்துள்ளார். யுத்த காலத்தில் காணாமற்போன 140000 பேருக்கு என்னவாயிற்று என்பது பற்றி கவனம் செலுத்தப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

# வடமாகாண சபை தேர்தலுக்குத் தயார்




வடக்கில் மாகாணசபைத் தேர்தலை நடாத்தத் தயார் என தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

எந்த நேரத்திலும் வடக்கில் மாகாணசபைத் தேர்தலை நடாத்த தேர்தல் திணைக்களம் தயார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறெனினும், எப்போது தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பது குறித்து அரசாங்கம் இதுவரையில் தமக்கு அறிவிக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். 2013ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்ட போதிலும் இதுவரையில் தேர்தல் தினம் நிர்ணயிக்கப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

# பிரதான சந்தேக நபர் கைது



கொழும்பு தேசிய அரும்பொருட் காட்சியகத்தில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்

. கொழும்பு தேசிய அரும்பொருட் காட்சியகத்தில் கடந்த மார்ச் மாதம் 16ஆம் திகதி புராதன வாள் மற்றும் தங்க நாணயங்கள் உட்பட பல விலைமதிக்க முடியாத பொருட்கள் காணாமல் போயின.

இதனையடுத்து பொலிஸார் மேற்கொண்ட தீவிர விசாரணைக-ளின் போது, தொடர்ச்சியாக கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களும் சந்தேக நபர்களையும் பொலிஸார் கைது செய்து வந்தனர்.

இந்நிலையில், நூதனசாலைக் கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# சட்டவிரோதமாக இந்தியாவில் தங்கியிருந்த இலங்கையர் கைது

## பணம் பறித்த ஆட்டோ ஓட்டுநர்களும் சிக்கினர்

இந்தியாவில் 25 ஆண்டுகளாக சட்டவிரோதமான முறையில் இந்தியாவில் தங்கியிருந்து மீண்டும் இலங்கை செல்ல முயன்ற முதியவரையும், அவரிடம் பணம் பறித்த ஆட்டோ டிரைவர்கள் இருவரையும் பொலிசார் கைது செய்துள்ளனர்.

இலங்கை வடமராச்சி மாவட்டம், துன்னாளை பகுதியை சேர்ந்தவர் மோசஸ் மகேந்திரன், (வயது-68).

இவர் சுற்றுலா விசாவில், 1987இல் சென்னை வந்தார். விசா முடிந்து நாடு திரும்பாமல், 21 ஆண்டுகளாக ஐதராபாத், பெங்களூர், புவனேஸ்வர், டில்லி, ஜம்மு, மும்பை நகரங்களில் வேலை பார்த்து வந்தார். இவரைச் சென்னை பொலிசார் தேடி வந்தனர்.

கடந்த 4 ஆண்டுகளாக புட்டபர்த்தியில் வேலை பார்த்து வந்த இவர், மீண்டும் கள்ளத்தோணி மூலம் இலங்கை செல்ல திட்டமிட்டு, கடந்த 26ஆம் திகதி இராமேஸ்வரம் வந்தார்.

இவரிடமிருந்து, ஸ்ரீராம்நகரைச் சேர்ந்த ஆட்டோ டிரைவர்கள் சுரேஷ், 24, காத்தலிங்கம், 26, மற்றும் ரயில்வே பீடர் ரோடு சீனி, ஆகியோர் 13 ஆயிரம் ரூபாய், இலங்கை பணம் 7 ஆயிரத்தை பறித்துச் சென்றனர்.

மோசஸ் பொலிஸில் தெரிவித்தார். ஆட்டோ டிரைவர்கள் சுரேஷ், காத்தலிங்கம், மோசசை பொலிசார் கைது செய்தனர்.

## மாணவர்கள் மீது துஷ்பிரயோகம்:

# பாடசாலை ஆசிரியர் பொலிஸாரால் கைது

பண்டாரவளை - பூநாகலை பகுதி பாடசாலை ஒன்றின் சிறுவர்கள் சிலரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த ஆசிரியர் கடந்த 26ஆம் திகதி இரவு கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

பூநாகலை பகுதி பாடசாலையொன்றில் கல்வி பயிலும் 6-8ஆம் வகுப்பு ஆண் மாணவர்கள் சிலரைக் குறித்த ஆசிரியர் 2011ஆம் ஆண்டு இறுதியில் இருந்து பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி வந்துள்ளாரென முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதனையடுத்து குறித்த ஆசிரியர் கைது செய்யப்பட்டு நேற்று பண்டாரவளை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். பின்னர் அவரை எதிர்வரும் 31ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# சர்வதேச அழுத்தங்களுக்கு அடிபணியத் தேவையில்லை

## ரோஹித்த போகெல்லாகம



சர்வதேச அழுத்தங்களுக்கு அரசாங்கம் அடிபணியத் தேவையில்லை என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரோஹித்த பொகொல்லாகம தெரிவித்துள்ளார். 13ஆம் திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்வது தொடர்பில் சர்வதேச அழுத்தங்களுக்கு அரசாங்கம் அடிபணிய வேண்டிய அவசியமில்லை என அவர் சுட்டியுள்ளார்.

தேவை ஏற்பட்டால் 13ஆம் திருத்தச் சட்டத்தை அரசாங்கம் இரத்துச் செய்ய வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும், அதற்கு காத்திரமான மாற்றீடு ஒன்றை சமர்ப்பிக்க வேண்டியது மிகவும் அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விவகாரத்தில் 13ஆம் திருத்தச் சட்டம் திருப்திகரமாக அமையாவிட்டால் அடுத்த கட்ட முயற்சிகளை மேற்கொள்வதில் தவறில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# திருகோணமலையில் கடலில் மூழ்கி ஒருவர் உயிரிழப்பு

திருகோணமலை நிலாவெளி பிரதேசத்தில் கடலில் நீராடச் சென்ற கொழும்பு பொரல்லை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக நிலாவெளி காவற்துறையினர் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் 60 வயதான ஒருவரே உயிரிழந்துள்ளார். இவர் பொரல்லை சாந்திபுர பகுதியை சேர்ந்தவர் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். சுற்றுலாப் பயணம் சென்ற நிலையில், இவர் இந்த அனர்த்தத்தில் சிக்கியுள்ளார்.

# சிறந்த அதிபர்களுக்கு நாட்டில் பற்றாக்குறை நிலவுகின்றது

## பாடசாலை கல்வி வீழ்ச்சிக்கு இதுவே காரணம் என்கிறார் அமைச்சர் விமல்

நாட்டை அபிவிருத்தி செய்யும் அதேநேரத்தில் கல்வித் துறையை பாதுகாக்கவும் அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றிய அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், கல்வியின் முக்கியத்துவம் இன்று உணரப்பட்டுள்ளது. என்னதான் கட்டடம் அமைத்து சூழல் வசதிகளை செய்தாலும் சிறந்த ஆசிரியர்கள் இல்லாவிட்டால் பாடசாலை அபிவிருத்தியை எம்மால் காண முடியாது.

இன்று பாடசாலை கல்வியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளமைக்கு காரணம் சிறந்த அதிபர்கள் இல்லாமையாகும். வீழ்ச்சியடைந்த பாடசாலைக்கு சிறந்த அதிபர் சென்றால் அப்பாடசாலை துரித வளர்ச்சியடையும்.

இதேவேளை, பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் வைத்தியர்களை அனுப்பி அரசாங்கத்தை கவிழ்க்க சூழ்ச்சி செய்து வருபவர்கள் அரசியல் யாப்பு, நிறைவேற்று அதிகாரம் கொண்டவர் மற்றும் நீதித்துறைக்கு இடையில் மோதலை ஏற்படுத்த முயற்சித்து வருவதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கா தெரிவித்துள்ளார்.

நீதிமன்றம் மற்றும் அரசாங்கத்துக்கு இடையில் பாரிய மோதலை ஏற்படுத்த சூழ்ச்சியாளர்கள் முயற்சிப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எந்தவகையான சூழ்ச்சிகளை செய்தாலும் தற்போதைய அரசாங்கத்தைக் கவிழ்க்க முடியாது என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். உடுநுவர பகுதியில் நிகழ்வில் உரையாற்றிய உயர் கல்வி அமைச்சர் இவ்வாறு கூறினார்.

## இன்றைய இராசி பலன் (29.10.2012)

**நந்தன வருடம் ஐப்பசித் திங்கள் 13ஆம் நாள் திங்கட்கிழமை**

நட்சத்திரம் : அச்சுவினி பின்னிரவு 3.23 வரை அதன் பின் பரணி
திதி : பூரணை பின்னிரவு 1.43 வரை. அதன் பின் பிரதமை
சுபநேரம் : 12.03 - 1.33
இராகுகாலம் : 7.33 - 9.03
(இந்த நேரங்கள் இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்)

**மேடம்** : வரவு குறைவு, குடும்ப சஞ்சலம், குறைகேட்டல்
**இடபம்** : பணப்புழக்கம், நற்காரிய செய்கை, உறவினர் உதவி
**மிதுனம்** : தொழில் விருத்தி, பணவரவு, நண்பர்கள் உதவி
**கடகம்** : வீண்மனஸ்தாபம், பிரயாணக் கஷ்டம், அயலவர் தொல்லை
**சிங்கம்** : காரிய தாமதம், தொழில் மாற்றம், மருத்துவச் செலவு
**கன்னி** : மனமகிழ்ச்சி, காரிய சித்தி, தொழில் உற்சாகம்
**துலாம்** : தொழில் முன்னேற்றம், கடன்சுமை தீரும், எதிர்ப்புகள் சீராகும்
**விருச்சிகம்** : மனக்கவலை, தேகசுகக் குறைவு, வீண்குறை கேட்டல்
**தனுசு** : சமவரவு, தொழில் போட்டி, பொறுமை நன்று
**மகரம்** : தொழில் மேன்மை, கொடுக்கல் வாங்கல் நன்று, மன உற்சாகம்
**கும்பம்** : எதிர்பாராம வரவு, ஏமாற்றம், நம்பிக்கையின்மை
**மீனம்** : காரிய பலிதம், பிரயாணம், இனசனக் கொண்டாட்டம்

- ஜோதிடர் பால.இரத்தினசேகர்

# கூடங்குளம் அணு உலைக்கு எதிராக யாழ்ப்பாணத்திலும் போராட்டம்

தமிழகத்திலுள்ள கூடங்குளம் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் அணு உலையை உடனடியாக நிறுத்துமாறு கோரி மக்கள் போராட்ட இயக்கம் கடந்த வெள்ளிக்கிழமை யாழ். நகர்ப் பகுதியில் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்து விழிப்புணர்வு நடவடிக்கையை முன்னெடுத்திருந்தது.

இந்தியாவின் தென் பிராந்தியத்தில் அமைக்கப்பட்டுவரும் இந்த அணு உலையில் வெடிப்புக்களோ, கசிவோ ஏற்படும் பட்சத்தில் அதன் கதிர் வீச்சினால் இலங்கைக்கும் பாரிய ஆபத்து ஏற்பட வாய்ப்புக்கள் இருப்பதனால் அதை தடுத்து நிறுத்துமாறு வலியுறுத்தியே இந்த துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

இந்தியாவின் அணு உலையில் விபத்து ஏற்பட்டால் வடமாகாணம் முழுமையாகவும், புத்தளம், திருகோணமலை போன்ற மாவட்டங்களுடன் வேறு சில மாவட்டங்களும் பாதிப்படையும். அத்துடன், திடீர் மரணங்கள் உட்பட புற்று நோய் மற்றும் உயிர்க்கொல்லி நோய்களையும் ஏற்படுத்தலாம். எதிர்காலத்தில் பிறக்கும் குழந்தைகளும் அங்கவீனர்களாக பிறக்கும் சாத்தியங்கள் அதிகமாக உருவாகும் குறித்த துண்டுப் பிரசுரங்களின் மூலம் பொது மக்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

எனவே, கூடங்குளம் அணு உலைக்கு எதிராக இந்திய மக்கள் போராடி வரும் இச்சந்தர்ப்பத்தில் இலங்கையர் ஆகிய நாமும் போராட வேண்டும். எமது சூழலை பாதுகாத்துக் கொள்ளவும், மீன்பிடித் தொழிலை பாதுகாத்துக் கொள்ளவும், உயிர்களை பாதுகாத்துக் கொள்ளவும், ஒன்று சேருவோம்.

எதிர்காலத்தில் ஏற்படும் அழிவை நிறுத்துமாறு இந்திய, இலங்கை அரசாங்கத்தினை வற்புறுத்துவோம்.

ஒன்றிணைந்து போராடுவோம் அதில் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அமெரிக்காவில் போலிக் கடன் அட்டை மோசடி, இலங்கையர் இருவர் கைது

போலியான வங்கிக் கடன் அட்டைகளைப் பயன்படுத்தி பணம் பெற்று வந்த இரண்டு இலங்கைத் தமிழர்கள் அமெரிக்காவில் கைது செய்யப்பட்டனர். நியூ யோர்க்கில் இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றதாக அமெரிக்க ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

கனடா, ஒன்றாரியோ மாகாணத்தை சேர்ந்த இவர்கள் இருவரும் தன்னியக்க அட்டைக் கருவி மையத்துக்குச் சென்று அங்கு பல தன்னியக்க அட்டைகளைப் பயன்படுத்தி பணத்தை பெற்றுள்ளனர்.

இதனைக் கண்காணித்த நியூ யோர்க் பொலிஸ் அதிகாரி ஒருவர் இருவரையும் கைது செய்தார். இதன்போது அவர்கள் இருவரிடமும் 257 போலி தன்னியக்க கடன் அட்டைகள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

அத்துடன் 55 ஆயிரத்து 689 அமரிக்க டொலர்களும் அவர்களிடம் இருந்து கைப்பற்றப்படடுள்ளது.

பல காலங்களாக இந்த நடவடிக்கையில் ஈடுபட்டு வந்திருக்கலாம் என்று நம்பப்படும் இவர்கள் 28 வயதான சிவரூபன் ஞானபண்டிதன், 24 வயதான ராகவன் பதமசேனன் என்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

# இளம் தலைமுறைக்கு சந்தர்ப்பம் வழங்கவே ராஜினாமா செய்தேன்

## எஸ்.எம்.கிருஷ்ணா

"எமது இளைஞர்களுக்கு அமைச்சரவையில் சந்தர்ப்பம் வழங்கவே எனது அமைச்சுப் பதவியினை ராஜினாமா செய்தேன்" என்று பதிவியை ராஜினாமா செய்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா தெரிவித்துள்ளார்.

அவரைத் தொடர்ந்து தகவல் ஒளிபரப்புத்துறை அமைச்சர் அம்பிகா சோனி, சுபோத்காந்த் சகாய் நபி, சமூக நீதித்துறை அமைச்சர் முகுல் வாஷ்னிக் ஆகிய மூவரும் தங்களது அமைச்சுப் பதவிகளை ராஜினாமா செய்வதாக சோனியா காந்தியிடம் கடிதம் கையளித்துள்ளனர்.

இந்நிலையில் பதவியை ராஜினாமா செய்த எஸ்.எம்.கிருஷ்ணா, நேற்று இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கை சந்தித்த பின்னர் தனது ராஜினாமா குறித்து ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவித்தார்.



அங்கு உரையாற்றிய அவர் கூறுகையில்,

"இன்றைய இளைஞர்கள் முக்கிய பொறுப்புகளைக் கையேற்க வேண்டிய தருணம் இது. எமது இளம் தலைமுறையினரான இளைஞர்களுக்கு அமைச்சரவையில் சந்தர்ப்பம் வழங்கவே எனது அமைச்சுப் பதவியினை ராஜினாமா செய்தேன்.

இந்த முடிவை நானாகத்தான் எடுத்தேன். இதில் என் மனைவியின் பங்களிப்பு அதிகம். இப்போது நான் சுதந்திரமாக இருப்பதாக உணர்கிறேன். கடந்த 3 ஆண்டுகளாக முக்கிய பிரச்சினைகளை கையாள நேர்ந்தது.

நான் வெளிவிவகார அமைச்சர் பதவியில் இருந்த காலகட்டத்தில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நல்ல நட்புறவு ஏற்பட்டது. மாநில அரசியலிலும் இளைஞர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படும்.

இளைஞர்கள்தான் மாநில தலைமையை ஏற்பார்கள். கட்சித் தலைமைக்கும், தொண்டர்களுக்கும் உறுதுணையாக இருப்பேன்" என்றார்.

# செல்வச் சந்நிதியில் தமிழ் திரைப்படப் பாணியில் திருமணம்

திருமணத்திற்காக வருகை தந்த மணமகள் காதலனுடன் ஓடிய சம்பவம் செல்வச்சந்நிதி ஆலயத்தில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் நேற்று முன்தினம் மட்டும் சுமார் 36 திருமண சடங்கு இடம்பெற்றுள்ளது.

இதில் 20 ஆவது திருமணத்திற்கு என குறித்த மணமகனும், மணமகளும் வந்துள்ளனர்.

திருமணம் நடைபெறவிருந்த ஒரு சில நிமிடங்களுக்கு முன்னர் குறித்த மணமகள் தனது நீண்ட நாள் காதலனை அழைத்து அவருடன் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளனர்.

குறித்த இச் சம்பவம் தமிழ் சினிமாவில் வருவது போன்று மோட்டார் சைக்கிளில் வந்த குழுவினலால் இந்த இடத்தை ஒரு கலக்கு கலக்கி மணமகளை கூட்டிச் சென்றுள்ளனர்.

அவர்களை, அங்கிருந்த சில[illegible] பின்தொடர்ந்த போதும் அவர்க[illegible] அங்கிருந்து ஓடி மறைந்து விட்டனர் என்று சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

மணமகள் வருவாள் என்ற நம்பிக்கையில் சில மணிநேரம் காத்திருந்த மணமகன் தனது மச்சாளை மணம் முடித்துக் கொண்டு வீடு திரும்பியுள்ளார்.

# யாழ்.பொலிசாரின் நடமாடும் சேவை

யாழ். பொலிஸ் நிலையமும் கொழும்பு கிராண்ட் சேர்கிள் லயன் கழகமும் இணைந்து யாழ். நகரில் மாபெரும் நடமாடும் சேவை ஒன்றினை நேற்று சனிக்கிழமை நடாத்தினர்.

யாழ். ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில், யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தலைமையில் இந்த நடமாடும் சேவை நடைபெற்றது.

அதேவேளை, கொழும்பு கிராண்ட் சேர்கில் லயன்ஸ் கழ கம் மற்றும் யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் உட்பட பொலிஸ் அதிகாரிகள் சிவில் பாதுகாப்புக் குழுவினரும் இணைந்து வறிய குடும்பத்தினை சேர்ந்த வயோதிபர் ஒருவருக்கு சக்கர நாற்காலி வழங்கினர்.

யாழ். 512 படைப்பிரின் இராணுவத்தினர் 50 பேர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு இரத்ததானம் வழங்கி வைத்தனர்.

அத்துடன், கண் பரிசோதனை மேற்கொண்டு 1000 கண்ணாடிகளும் வழங்கி வைக்கப்பட்டதுடன்,அடையாள அட்டைகள், சாரதி அனுமதிப்பத்திரம், சிறு குற்ற விசாரணைகளும் பொதுமக்களுக்கான முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டன.

இந்நிகழ்வில், சிரேஸ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி சில்வா, யாழ்.பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி சமன் சிகேரா, உதவிப் பொலிஸ் பொறுப்பதிகாரி குணசேகர, கொழும்பு கிராண்ட் சேர்கிள் லயன்ஸ் கழக தலைவர் பிரசாட் விக்கிரமரட்ன, கழக நிகழ்ச்சி திட்ட இணைப்பாளர் பா.ரமேஷ் கழக பொருளாளர் ஆர். சுதாகரன்,

கழக இயக்குனர் துஷன ஆரியவத்தன உட்பட கழக உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# குப்பிளான் கௌரியம்மாள் ஆலய சிறப்பு மலர் வெளியீடு இன்று

குப்பிளான் கன்னிமார் கௌரியம்பாள் ஆலய கும்பாபிஷேக சிறப்பு மலர் வெளியீட்டுவிழா இன்று 29ஆம் திகதி திங்கட் கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு பரிபாலன சபைத் தலைவர் சோ. பரமநாதன் தலைமையில் ஆலய அபிராமி மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

கும்பாபிஷேக சிறப்பு மலர் வெளியீட்டு விழாவில் தேசிய கல்வி நிறுவகர் ஓய்வு பெற்ற பணிப்பாளர் கலாநிதி. உ. நவரத்தினம் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் எம். சண்முகலிங்கம், யாழ் பல்கலைக் கழகப் பேராசிரியர் க. தேவராஜா, வேலணை பிரதேச செயலாளர் திருமதி. சதீஸன் மஞ்சுளாதேவி மற்றும் வலி தெற்கு சுன்னாகம் பிரதேச சபைத் தலைவர் தி. பிரகாஷ் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

கௌரவ விருந்தினர்களாக மொரட்டுவ பல்கலைக்கழக ஓய்வு பெற்ற பேராசிரியர் க. சுப்பிரமணியன், தென்மராட்சி கல்வி வலய உதவி கல்விப் பணிப்பாளர் ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி மற்றும் சிவத்திரு சிவ சண்முகவடிவேல் ஆகியோர் கலந்துகொள்ள உள்ளார்கள்.

சிறப்பு மலரின் வெளியீட்டு உரையை தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் ஆறு.திருமுருகன் உரை நிகழ்த்துவார். மதிப்பீட்டு உரையினை இந்துசமய கலாச்சார திணைக்கள முன்னாள் உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் நிகழ்த்தவுள்ளார்.

# பிரதம நீதியரசரை பணி நீக்கம் செய்ய அரசு சூழ்ச்சி என்கிறார் ஜே.வி.பி.எம்.பி.


பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவை பணி நீக்கம் செய்ய அரசாங்கம் சூழ்ச்சித் திட்டங்களை வகுத்து வருவதாக ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக உச்ச நீதிமன்றினால் வழங்கப்பட்ட தீர்ப்புக்கள் அரசாங்கத்திற்கு சாதகமாக அமையவில்லை. இதன் காரணமாக பிரதம நீதியரசரை பணி நீக்கம் அரசாங்கம் முயற்சித்து வருகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அழுத்தங்கள் மற்றும் அச்சுறுத்தல்களைப் பிரயோகித்து பிரதம நீதியரசரை ஆளும் கட்சியின் பக்கம் சாய்த்து கொள்ளல் அல்லது அழுத்தங்களின் ஊடாக பணி நீக்கம் செய்வது ஆகிய இரண்டு வழிகளில் சூழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இந்த சூழ்ச்சித் திட்டம் தோல்வியடைந்தால் நம்பிக்கையில்லா பிரேரணை மூலம் பிரதம நீதியரசரை பணி நீக்கம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. என்றும் அனுர குமார திசநாயக்க எம்.பி. கூறினார்.

நீதி நேர்மையாக செயற்படும் எந்தவொரு நிறுவனமும் பணிகளைச் செவ்வனே மேற்கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை என்றும் அனுரகுமார திஸாநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.



# செல்வச்சந்நிதியில் பேருந்து விபத்து: அதீத வேகத்தால் விபரீதம்: மூவர் காயம்!

யாழ். தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெற்ற திருமணச் சடங்கிற்குச் சென்றவர்களை ஏற்றிச் சென்ற பேருந்து வேகக் கட்டுப்பாட்டை இழந்து யாருக்கரு பகுதியில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்துச் சம்பவத்தில் 3 பேர் படுகாயங்களுக்கு உள்ளாக்கப்பட்ட நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொடிகாமம் இயற்றாலைப் பகுதியைச் சேரந்த கிருஷ்ணபிள்ளை இந்திரகுமார் (வயது 31), லோகநாதன் சசிக்குமார் (வயது 35), கணபத்திப்பிள்ளை சுசீலன் (வயது 35) என்பவர்களே மேற்படி விபத்துச் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் ஆவர்.


மேற்படி விபத்துச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவது,

தெண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் நடைபெற்ற திருமணச் சடங்கில் கலந்து கொண்டு விட்டு குறித்த பேருந்தில் சுமார் 60 பேர் அங்கிருந்து கொடிகாமம் நோக்கிப் புறப்பட்டுள்ளனர்.

இதன் போது பேருந்தின் அதீத வேகத்தினால் பேருந்து தடம் புரண்டு வீதியை விட்டு விலகி விபத்துக்காள்ளாகியுள்ளது என்று மேலும் தெரியவந்துள்ளது.



## மின்னல் தாக்கத்தினால் இதுவரை 44 பேர் உயிரிழப்பு: பலர் பாதிப்பு



இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதிக்குள் மின்னல் தாக்குதலின் காரணமாக 44 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை நாட்டின் பல பாகங்களிலும், மின்னல் தாக்குதலுக்கு இலக்கான பலர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருவதாகவும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த மாதத்தில் மட்டும் மின்னல் தாக்குதலின் காரணமாக ஒன்பது பேர் உயிரிழந்துள்ளனர்.

ஏப்ரல் மாதத்திலேயே மின்னலின் காரணமாக அதிக உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளன. இம்மாதத்தில் 20 பேர் உயிரிழந்துள்ளனர்.

எனவே மழைகாலங்களில் மக்கள் தமக்கான பாதுகாப்பு குறித்து அவதானத்துடன் செயற்பட வேண்டும் என அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

இதேவேளை,

மத்திய வங்காள விரிகுடாவில் தாழமுக்கம் அதிகரித்துள்ளதாக வளிமண்டளவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த தாழமுக்கமானது இன்று நாட்டின் காலநிலையில் தாக்கத்தை ஏற்படுத்தும் என திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அதனால் சுழல் காற்று குறித்து அவதானமாக இருக்க வேண்டுமென நாட்டின் கிழக்கு ஆழ்கடல் பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டுள்ள மீனவர்களிடம் வளிமண்டலவியல் திணைக்களம் கேட்டுக் கொண்டுள்ளது.

இதேவேளை, இன்று (28) மாலை அல்லது இரவு வேளைகளில் மத்திய மலைநாட்டின் சில பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

## பிரதேச சபை உறுப்பினர் அநுராதபுரத்தில் கைது

அநுராதபுரம் - மத்திய நுவரகம் பலாத பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவர நேற்றுமுன்தினம் (27) 10.20 அளவில் காலை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் - பெரிம்மியான் குளம் அசோக்க வித் தியாலயத்திற்கு அருகில் உள்ள புராதன வனத்தில் அநாவசிய கட்டடங்களை அமைத்தமை தொடர்பில் இவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

புராதன வனத்திற்குள் உள்நுழைந்து புராதன இடங்களை அழித்து அங்கு சட்டவிரோத கட்டம் அமைத் ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட பிரதேச சபை உறுப்பினர் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்தவராவார்.

குறித்த நபரை நேற்றுமுன்தினம் அநுராதபுரம் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தபட்டார்.

## கள்ள நோட்டு: ஒருவர் கைது

மொனராகலை - வெல்லவாய பகுதியில் போலி நாணயத் தாள்களுடன் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படை ஹம்பாந்தோட்டை முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரிடம் இருந்து 100 ரூபா போலி நாணயத் தாள்கள் இரண்டும் கடதாசியில் சுற்றப்பட்ட நிலையில் 1000 ரூபா நாணயத் தாள்கள் சிலவும் கைப்பற்றப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளுக் கென சந்தேக நபர் மொனராகலை பொலிஸ் நிலையத்தில் ஒப்ப டைக்கப்பட்டுள்ளார்.

## கிணற்றில் விழுந்து தாய், மகன் பலி!

அஹங்கம பிரதேசத்தில் பெண் மற்றும் குழந்தை ஆகியோர் கிணற்றில் விழுந்து உயிரிழந்துள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் (27) பகல் இடம்பெற்றதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

குறித்த பெண் தனது குழந்தையுடன் கிணற்றடியில் ஆடை சலவை செய்து கொண்டிருந்த போது குழந்தை தவறி கிணற்றில் விழுந்துள்ளது.

குழந்தையை காப்பாற்ற தாயும் கிணற்றில் குதித்துள்ளார்.

அதன்போது இருவரும் உயிரிழந்துள்ளனர்.

39 வயது தாயும் அவருடைய 4 வயது ஆண் குழந்தையுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

## காலியில் வெள்ளம்

காலி மற்றும் கராப்பிட்டிய நகரங் களுக்கு உட்பிரவேசிக்கும் பிரதான வீதிகள் பல நீரில் மூழ்கியுள்ளன.

வெக்வெல்ல, பத்தேககம, அம்பலன்வத்த, மார்க்கவல ஆகிய வீதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

கடந்த 3 நாட்களாக இப் பகுதிகளில் தொடர்ச்சியாகப் பெய்த அடை மழை காரணமாக இப்பிரதேசங்களிற்குள் வெள்ள நீர் புகுந்துள்ளது.

இதேவேளை நாட்டில் திடீரென ஏற்பட்டிருக்கும் காலநிலை மாற்றம் காரணமாக பல பாகங்களிலும் தொடர்ந்து அடைமழை பெய்து வருகின்றது. குறிப்பாக வடக்கு, கிழக்கு மற்றும் வடகிழக்கு மலையகம் மற்றும் தென்மாகாணங்களில் பெய்துவரும் அடைமழையால் பாரிய வெள்ளப்பெருக்கும் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக மலையகத்தில் சில பகுதிகளில் மண்சரிவு ஏற்படும் அபாயம் உள்ளதென அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளதுடன் மக்களை அவதானமாக இருக்குமாறும் அந்நிலையம் பொது மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

## புதுக்குடியிருப்பில் குண்டு வெடிப்பு: சிறுமி பரிதாபமாக உயிரிழப்பு ; வீட்டினுள் இருந்த சகோதரி காயம்

முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் ஆனந்தபுரம் என்னுமிடத்தில் குண்டொன்று வெடித்ததில் பத்து வயது சிறுமி உயிரிழந்துள்ளார். மற்றுமொரு பெண் காயமடைந்துள்ளதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

ஆனந்தபுரம் 5 ஆம் வட்டாரத்தில் உள்ள பச்சை புல்மோட்டை என்னுமிடத்தில் இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடைபெற்றிருப்பதாக அந்தக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் கூறினர்.

இந்தப் பகுதியில் மீள்குடியேறியுள்ள ஒரு குடும்பத்தைச் சேர்ந்த சகோதரன் தனது காணியில் மண்டிக்கிடந்த புல்லை வெட்டிச் சுத்தம் செய்வதில் ஈடுபட்டிருந்த போது, அவருக்குத் தண்ணீர் கொண்டு வருவதற்காகச் சென்ற அவரது சகோதரியாகிய ஜோசப் நிக்கலஸ் நிஷாந்தினி என்ற சிறுமியே இந்த குண்டு வெடிப்பில் சிக்கியுள்ளார்.

இதில் படுகாயமடைந்து முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போது அவர் மரணடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வெடிப்புச் சம்பவத் தின் போது வீட்டில் சமை ய லில் ஈடுபட்டிருந்த 28 வயதான அவரது மற்று மொரு சகோதரி, சிதறிச் சென்ற குண்டின் பாகம் ஒன்று தாக்கியதில் காயமடைந்து மாஞ்சோலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக அயலவரான பெண் ஒருவர் தெரிவித்தார்.

வெடிப்புச் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு விரைந்த இராணுவத்தினர், உயிரிழந்த சிறுமி மண்ணில் கொத்திய அடையாளத்துடன் கிடந்த கத்தி ஒன்றைக் கண்டெடுத்துள் ளதுடன், இந்தக் கத்தியினால் பொருள் ஒன்றை கொத்திய போதே குறித்த குண்டு வெடித்திருக்க வேண்டும் என்று ஊகம் தெரிவித்திருப்பதாக அயலவர்கள் கூறுகின்றனர்.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள பல கிராமங்களில் பற்றைகள் மற்றும் புற்களை வெட்டிச் சுத்தம் செய்யும்போது பொது மக்களால் கண்டெடுக்கப்படுகின்ற பல வகையான வெடிப்பொருட்களை இராணுவத்தினர் பாதுகாப்பாக அகற்றுவதாக அங்குள்ள மக்கள் கூறிவருகின்றனர். ஒரு சிறுமியை பலி கொண்டுள்ள இந்தச் சம்பவம் வெடிப்பொருட்கள் தொடர்பான மக்களின் அச்ச உணர்வை மேலும் அதிகரித்திருப்பதாக அந்தப் பிரதேச மக்கள் கூறினர்.

தமிழ்நாதம்
Thamil Naatham
ஒக்டோபர் மாதம் 29ஆம் திகதி திங்கட்கிழமை

## தமிழ்க் கூட்டமைப்பின் உள் முரண்பாடுகள் உடைவுக்கு வழிவகுக்கலாம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்யுமாறு கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் நான்கு கட்சிகள் கோரி வருகின்றன. தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப் ஆகிய நான்கு கட்சிகளே கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்யுமாறு கோரி வருகின்றன. கூட்டமைப்பின் முக்கிய கட்சியான இலங்கை தமிழரசுக் கட்சி ஏனைய நான்கு கட்சிகளின் கோரிக்கையைத் தட்டிக்கழித்து வருகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் பிரதான இடத்தையும், தலைமைப் பதவியையும் தன்னகத்தே கொண்டிருப்பது இலங்கை தமிழரசுக் கட்சியாகும். அதன் தலைவரான திருமலை மாவட்ட எம்.பி. திரு. ஆர். சம்பந்தனே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராகவும் இருந்து வருகிறார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்யுமாறு கோரி மேலே கூறப்பட்ட நான்கு கட்சிகளும் கூட்டமைப்பின் தலைவர் ஆர். சம்பந்தனுக்கு பகிரங்கமாகவே ஒரு நீண்ட கடிதத்தை அனுப்பி வைத்திருந்தனர். இதுபற்றி ஆராய்வதற்காக நடைபெறவிருந்த முதலாவது கூட்டம் இடம்பெறாமலே போய்விட்டது. கடந்த வியாழக்கிழமை மீண்டும் சந்திப்பு இடம்பெற்றிருக்கிறது. ஆனால் முடிவேதும் எடுக்கப்படாமலேயே கூட்டம் முடிவுக்கு வந்திருக்கிறது.

"தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வு காண்பதே இப்போது உள்ள முக்கிய பிரச்சினை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்வது ஒன்றும் முக்கியமான பிரச்சினையல்ல" என்று கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் திட்டவட்டமாகவே தெரிவித்திருக்கிறார்.

இதன்மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கிடையில் நிலவிவரும் உள் முரண்பாடு இப்போது சந்திக்கு வந்து நிற்கிறது. இந்தக் கூட்டமைப்பில் கடைசியாக இணைந்து கொண்ட கட்சி வீ. ஆனந்தசங்கரியின் தமிழர் விடுதலைக் கூட்டணியாகும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதய சூரியன் சின்னத்திலும், கூட்டணியின் பெயரிலும் தேர்தலில் போட்டியிடுவதற்கு திரு. ஆனந்த சங்கரி மறுத்துவந்த காலம் ஒன்றிருக்கிறது. இதனால்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் தமிழரசுக் கட்சியின் சின்னத்திலும், தமிழரசுக் கட்சியின் பெயரிலும் போட்டியிட்டார்கள். கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்யுமாறு எழுந்த கோரிக்கை பாரிய உள் முரண்பாடுகளுக்கு வழிவகுக்கக்கூடிய சூழ்நிலையை இப்போது ஏற்படுத்தியிருக்கிறது.

அண்மையில் தமிழரசுக் கட்சித் தலைவர் ஆர். சம்பந்தனுக்கும், ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் முக்கியஸ்தர் சுரேஷ் பிரேமச்சந்திரனுக்கும் இடையில் வாதப் பிரதிவாதங்கள் எழுந்தமை தெரிந்ததே. முரண்பாடான கருத்துகளையும், முரண்பட்ட நிலைப்பாடுகளையும் கொண்ட ஐந்து கட்சிகளின் சங்கமமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, திரு. இரா. சம்பந்தன் தலைமையிலான குழுவினர், புலிகளின் அழிவுவரை புலிகளையே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்று படம் காட்டிக் கொண்டிருந்தவர்கள்.

ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப். ஆகிய இயக்கங்கள் முன்னாள் ஆயுதக் குழுக்களாகும். புலிகளால் வேட்டையாடப்பட்டு தடை-செய்யப்பட்டவை இந்தத் தமிழீழ ஆயுதக் குழுக்கள். புலிகளுக்கும் இந்தியப் படைக்குமிடையில் இலங்கையின் வடக்கு கிழக்கில் மோதல்கள் வெடித்தபோது இந்தியப் படையோடு இணைந்து செயலாற்றின இந்தக் குழுக்கள். புலிகளைத் தேடி அழிப்பதற்கு இந்தியப் படைக்கு உடந்தையாகவும், உதவியாகவும் இருந்தவையே இந்த முன்னாள் ஆயுதப் போராட்டக் குழுக்களாகும். தமிழர் விடுதலைக் கூட்டணிச் சங்கரியாரின் கதைகள் மிகவும் அலாதியானவை. கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதைதான் அவருடையது. தமிழர் விடுதலைக் கூட்டணி செயலிழந்து, செல்வாக்கு இழந்து வெறும் 'லேபல்' அமைப்பு என்ற நிலைக்கு வந்தது. அப்போது கூட்டணித் தலைவர் சங்கரியார், புலி இயக்கத்தலைவர் பிரபாகரனுக்கு புத்தி மதி கூறிக் கடிதங்களை எழுதுவதையே தமது தொழிலாகக் கொண்டிருந்தார். பிரபாகரன் அந்தக் கடிதத்தை வாசித்திருப்பார் என்பது சந்தேகமே.

ஆனால் பிரபாகரனுக்கு சங்கரியார் எழுதிய கடிதங்கள் ஒருசில பத்திரிகைகளில் இடம்பிடிக்கும். இதுவே அவரது அரசியல் செயற்பாடாக விளங்கியது. இன்னும் சொல்வதானால் புலிகளைத் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்று வாழ்த்தி வரவேற்ற சம்பந்தன் கம்பனியினருக்கு சங்கரி எழுதிய கடிதங்களாகவே பிரபாகரனுக்கு அவர் எழுதிய கடிதங்களைப் பார்க்க முடியும். சந்தர்ப்பவாத தமிழ் தலைமைகள் பாராளுமன்றம் செல்வதற்காக தங்களுக்குள் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் ஒரு சாம்பார் கூட்டே இதுவாகும். உட்கட்சி முரண்பாடுகளை ஜனநாயக வழிமுறைகள் மூலம் தீர்க்க வக்கற்ற முறையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்றும் இருக்கிறது.

தமிழ் மக்களின் உடனடிப் பிரச்சினைகள், நீண்டகாலப் பிரச்சினைகள் என்று நிறையவே இருக்கின்றன. தங்களுக்குள் ஒரு பொது வேலைத் திட்டத்தின் அடிப்படையில் இந்தக் கட்சிகள் ஐக்கியப்படுவதனால் மட்டுமே ஒரு காத்திரமான தலைமையை தமிழ் மக்களுக்குக் கொடுக்கமுடியும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்ய வேண்டும் என்ற கோரிக்கை கடந்த பத்து வருடங்களாக முன்வைக்கப்பட்டு வருகிறது. சுருங்கக் கூறுவதானால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் மேலாண்மை வகிக்கும் தமிழரசுக் கட்சியின் ஆதிக்கத்தை தகர்க்க ஏனைய நான்கு கட்சிகளும் ஒன்றித்து நிற்கின்றன. எதிர்காலத்தில் உடையப் போகும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு வைக்கப்பட்டிருக்கும் முதல் வேட்டு இது.

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
ஆசிரியர் பீட தொலைபேசி- 021-2219567 / பக்ஸ் 021-2219505,
விளம்பரம்/விநியோகம் : 021-2219506
e-mail: tnaatham@yahoo.com

# தேசிய வாசிப்பு மாதத்தில் நேசிப்போம் வாசிப்பை




**"மனிதர்கள் கல்வி கற்க வேண்டும் ஏனெனில் அவர்கள் மனிதர்கள்"** என்கின்ற ரஷ்யா பழமொழிக்கேற்ப எம்மை துலங்க வைப்பது அறிவுசார் கல்வி. அக்கல்விக்கு அடிப்படையாக அமைவது தேடலின் ஊடாக வாசிப்பே என்பது ஆய்வறிந்த உண்மை. "வாசிப்பினால் மனிதன் பூரணமடைகின்றான்" என்பது ஆன்றோர் வாக்கு. ஆண்டுதோறும் ஒக்டோபர் மாதம் முழுமைக்குமான (1-30) வாசிப்பு மாதம் கொண்டாடப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு தொனிப்பொருளில் வாசிப்பு மாதம் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு "அறிவினால் நிரம்பிய சமுதாயம் ஒன்றை உருவாக்குவோம்" என்ற தொனிப் பொருளில் கொண்டாடப்படுகிறது. 2004ம் ஆண்டு தொடக்கம் இலங்கை தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையானது இம் மாதத்தினை வாசிப்பு மாதமாக பிரகடனப்படுத்தி நாடெங்கிலும் உள்ள பொதுசன நூலகங்கள் ஊடாக சமூகத்தில் வாசிப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தி வருவதும் பாடசாலை மாணவர்களிடையே தேடலினூடாக வாசிப்பின் அவசியத்தை கருத்திற்கொண்டு கவிதை, கட்டுரை, பேச்சு, சித்திரம், பொது அறிவு போட்டிகளை பொதுநூலகங்கள் ஊடாக நடத்தியும் பரிசில்கள் வழங்கியும் சமூகத்தில் நடமாடும் சேவை, நூல்களின் கண்காட்சி, கருத்தரங்குகள், நூல்களை இனங்கண்டு தேவைகருதி தேடலுக்கும் நூல்கள் பாகுபடுத்தப்பட்டிருப்பதும் (சிறுவர் பகுதி, முதியோர் பகுதி) அனைத்து செயற்பாடுகளையும் ஊக்குவிக்கும் முகமாக பொதுநூலகங்களுக்கு தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையால் விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது. பொதுநூலகங்கள் நூல்கள், சஞ்சிகைகள், தினசரிகள் என்பவற்றை முறையாக சேகரித்து களஞ்சியப்படுத்தப்பட்டும், காட்சிக்கு விடப்பட்டும் நுகரப்பட்டும் அறிவுக்களஞ்சியங்களாக விளங்கும் இப் பொது நூலகங்கள் ஒரு மனிதனின் முறைசார்ந்த கல்வியின் வளர்ச்சிக்கு இணைந்து அறிவை வளர்க்கும் அறிவுக் களஞ்சியமாக செயற்பட்டு வருகின்றன.

பொது நூலகங்களானது வயது, பால், இன, மத, சமூக வேறுபாடுகளின்றி ஒரு மனிதனின் கருவில் இருந்து கல்லறை போகும் மட்டுக்கும் அவனை ஒரு முழுமனிதனாக்குகின்றது. ஒருவன் அறிவாளியாக செயற்கற்கரிய செய்த சான்றோனாக இருந்தால் அவன் மறைந்த பின்பும் கூட அவனது படைப்புக்களை பேணிப்பாதுகாத்து மிளிரவைப்பது பொதுநூலகங்களே. அந்த வகையில் ஒரு பொதுநூலகமானது அறிவுப் பொக்கிஷமாக மிளிர்கின்றது. எனவே மனிதன் வாசிக்க வாசிக்க மேல் ஓங்குகின்றான். இதனையே வள்ளுவப் பெருந்தகை " தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு கற்றனைத் தூறும் அறிவு என்கின்றார்" எனவே நூல்களைத் தேடி வாசிப்பை நேசித்து கற்க வேண்டியவற்றை கசடு அறக் கற்று அறிவு படைத்தவர்களாக உயர உறுதுணையாக நிற்பது பொதுநூலகங்களே.



அறிவுசார் நூல்களை வாசிப்பதன் நோக்கம் கற்றோரை சான்றோர் ஆக்குவதற்கே ஆகும்.

இந்த வகையில் வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் பொது நூலகங்கள் மக்களிடையே வாசிப்பைத் தூண்டும் திறவுகோல்களாக உள்ளன. உள்ளூராட்சி மறுசீரமைப்பின் செயற்பாட்டுக்கு அமைய நூலகத்தை நோக்கி வர முடியாத வாசகர்களை நோக்கி தனது சேவையினை விஸ்தரித்து வருகின்றன. அந்த வகையில் உடுவில் பொது நூலகமானது இரு தடவைகள் வீழ்ச்சி கண்ட போதும் மீண்டும் எழுந்து நின்று மக்களுக்கான சேவையினை வழங்கி வருகின்றது. நூலகங்களில் பொதுவாக பத்திரிகைப் பகுதி, சஞ்சிகைப் பகுதி, உடன் உதவும் பகுதி, இரவல் வழங்கும் சேவை, நிழற்படப்பிரதியாக்கல் சேவை, ஒட்டுப் புத்தக சேவை, சஞ்சிகைகளின் தொகுப்பு சேவை போன்ற சேவைகளைக் கொண்டு உடுவில் பொது நூலகமானது பொதுமக்கள் போக்குவரத்திற்கு இடையூறின்றி பயன்படுத்தும் இடத்தில் இருப்பதும், பாடசாலைகள், பல்கலைக்கழகம், கல்வித்திணைக்களம் என்பவற்றிற்கு நடுவே அமையப் பெற்றிருப்பது ஓர் சிறப்பம்சமாகும். பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்களுக்கு பெரிதும் பயன் உடையதாகவும் ஏறத்தாழ 11,000 நூல்களைக் கொண்டும் சஞ்சிகை தொகுப்புக்களையும் ஒட்டுப் புத்தகங்கள் ஊடாகவும் தேடல்களுக்கான தகவல்களையும் வழங்கி வருகின்றது. அத்தோடு வலிகாமம் தெற்கு பிரதேசசபை நூலகங்கள் பிரதேச வாசகர் வட்டம் ஊடாக இணைந்து உள்ளூர் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் முகமாக வெள்ளிமலை காலாண்டு சஞ்சிகையினை வெளியிட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது இந்த வகையில் இந்த வாசிப்பு மாதத்தில் எதை வாசிப்பது, எப்படி வாசிப்பது, எப்போது வாசிப்பது, வாசித்தவற்றை எவ்வாறு களஞ்சியப்படுத்துவது, அதனை எவ்வாறு மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வது போன்ற செயற்பாடுகளின் மத்தியில் வாசிப்பினால் புதுப்புது விடயங்களை அறிவதும் அறிந்தவற்றை உள்வாங்கி தெளிவு பெறவும் தெளிந்தவற்றை நமது வாழ்வில் பயன்படுத்தும் போது மனித வாழ்வு மெருகேறுகின்றது. முன்னைய சூழலில் கேட்டல், ஓதுதல், சிந்தித்தல், ஞானம் பெறல் என்ற வகையில் அறிவுப்பெருக்கம் பிரவாகித்தது.


இன்றைய உலகம் கல்வி, பொருளாதாரம், விஞ்ஞானம், தகவல் தொழில் நுட்பம் என பல முகப்பட்ட தேடல்களைக் கொண்ட நூல்களும் பல்கிப் பெருகி விட்டன. அறிவியல் யுகம், தகவல் யுகம் என்று விருத்தியடைந்து செல்லும் இன் நாளில் இலகுவில் கிடைக்கக் கூடிய வகையிலும் அனைவரும் அனுகும் வகையிலும் புத்தகங்கள் தேடலுக்கான விடயங்களை சிறைப்பிடித்து பொது நூலகங்கள் ஊடாக வளங்குகின்றன. மாணவர்களுக்கான உலகியல் கல்வி வளர்ச்சிக்கும் தகவல் சீர்திருத்தங்களுக்கு மத்தியில் தேடல், தொடுதல், வெளிப்படுத்தல் என்பன வாசிப்பிற்கு இன்றியமையாதது ஆகும்.

எனவே இந்த வாசிப்பு மாதத்தில், வாசிப்பு வாரத்தில் அல்லது புத்தக தினத்தில் மட்டும் அல்லாமல் எப்போதும் அதி உன்னத நூல்கள் பலவற்றை நூலகத்தை நாடிச்சென்று வாசிப்போம் என உறுதி பூணுவோம்.

*திருமதி.இ.கருணாநிதி*
*நூலகர்,*
*உடுவில் பொது நூலகம்,*
*வலிகாமம் தெற்கு*
*பிரதேசசபை, சுன்னாகம்.*

# இளையராஜாவை துரோகியாக்க முயலும் சட்டாம்பிள்ளைகள்

- சுப வீரபாண்டியன்



இசைஞானி இளையராஜாவைத் தமிழினத் துரோகியாகக் காட்டும் முயற்சியில் இன்று சிலர் ஈடுபட்டுள்ளனர். வரும் நவம்பர் 3ஆம் நாள், கனடாவில் இளையராஜாவின் இசை நிகழ்ச்சி நடைபெற உள்ளது. நவம்பர் 27, மாவீரர் நாள் என்பது நாம் அனைவரும் அறிந்த செய்தி. மாவீரர் நாள் நினைவு கூரப்படும் கார்த்திகை மாதத்திலும், தமிழீழ மக்கள் பல்லாயிரக்கணக்கில் அழிக்கப்பட்ட வைகாசி (மே) மாதத்திலும் உலகெங்கும் உள்ள தமிழர் எவரும் எவ்விதமான கொண்டாட்டங்களிலும் ஈடுபடக் கூடாது என்று புதிதாய் ஒரு விதியை தமிழ்நாட்டில் இன்று சிலர் அறிவித்துள்ளனர்.

அதனையொட்டிக் கனடாவில் வாழும் புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்களில் ஒரு சாரார், இளையராஜாவின் இசை நிகழ்ச்சியைப் புறக்கணிக்குமாறு மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளனர். 1982 நவம்பர் 27 அன்று, வீரச்சாவடைந்த போராளி சங்கரின் நினைவாக, ஒவ்வொரு ஆண்டும் அந்நாளை மாவீரர் நாளாக நினைவுகூரும்படி, விடுதலைப்புலிகள் அமைப்பு 1989ஆம் ஆண்டு கேட்டுக் கொண்டது. அப்போதிருந்து ஒவ்வோர் ஆண்டும் உலகம் முழுவதும் அந்நாளில் மாவீரர் நாள் நினைவு எழுச்சிகள் நடைபெற்று வருகின்றன. ஆனால் அந் நிகழ்ச்சி நடைபெறும் மாதம் முழுவதும் எவ்விதமான கொண்டாட்டங்களிலும் யாரும் ஈடுபடக் கூடாது என்று, புலிகள் அமைப்போ, அமைப்பின் தலைவர் பிரபாகரனோ ஒரு நாளும் எந்த அறிவிப்பையும் வெளியிட்டதில்லை. சென்ற ஆண்டு வரை யில் அப்படி எந்த ஒரு "கொண்டாட்டத் தடையும்" நடைமுறை யில் இல்லை. அப்படியானால், இப்போது இப்படி ஒரு புதிய சட்டத்தை உருவாக்கும் சட்டாம் பிள்ளைகள் யார், எப்போதிருந்து இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது என்பன போன்ற வினாக்கள் நம்முள் எழுகின்றன.

ஆண்டு முழுவதும் போராளிகளையும், பொதுமக்களையும் அந்த ஈழ மண் இழந்திருந்தாலும், இயக்கத்தின் முதல் பலி நடைபெற்ற நாளை ஓர் அடையாளமாக மட்டுமே புலிக்ள் இயக்கம் அறிவித்தது. மாவீரர்கள் இறந்த நாளில் எல்லாம் கொண்டாட்டங்கள் கூடாது என்றால், ஆண்டின் எந்த ஒரு நாளிலும் நாம் எந்த மகிழ்வையும் வெளிக்காட்ட இயலாது. அங்கே மாவீரர்கள் சாகாத நாளுமில்லை, மாவீரர்கள் இல்லாத வீடுமில்லை. ஆதலால், அடையாளமாகத்தான் சிலவற்றை நாம் செய்ய முடியும். அதுதான் நடைமுறை இயல்பு. அதனைப் புலிகள் அமைப்பும், தலைமையும் தெளிவாக அறிந்திருந் தனர்.

ஆனால், இந்த உண்மையைப் புரிந்து கொள்ளாமலோ, புறந் தள்ளியோ இரண்டு மாதங்களுக்கு எந்தக் கொண்டாட்ட மும் கூடாது என்று சிலர் இன்று கூறுகின்ற னர்.

இரண்டு மாதங்கள் எந்தத் தமிழர் வீட்டிலும், திருமண நிகழ்வுகளோ, மகிழ்வான விழாக்களோ நடைபெறக் கூடாது என்று சட்டம் கொண்டு வருவார்களா என்றும் தெரியவில்லை. இவ்வளவு வேண்டாம் இளையராஜாவின் இசை நிகழ்ச்சி முடிந்து, பத்து நாள்களுக்குப் பிறகு வரவிருக்கும் தீபாவளியைத் தமிழ்நாட்டுத் தமிழர்களோ, தமிழ் ஈழத் தமிழர்களோ கொண்டாடக்கூடாது என்று இவர்களால் அறிவிக்க முடி யுமா? பகுத்தறிவின் அடிப்படையில் இல்லாவிட்டாலும், இன உணர்வின் அடிப்படையிலாவது தீபாவளியை இந்தப் புதிய நண்பர்கள் தடுத்து நிறுத்தி விடுவார்களா? இவையெல் லாம் நடைமுறையில் நடைபெறக் கூடியதுதானா என்பதைச் சிந்திக்க வேண்டும்.

1988ஆம் ஆண்டு, "ஈழ மக்களைக் கொல்லாதே, இந்திய ராணுவமே திரும்பி வா" என்ற கோரிக்கையை முன்வைத்து, "ஈழத்தமிழர் உரிமைப் பாதுகாப்புக் கூட்டமைப்பு" கையெழுத்து இயக்கம் ஒன்றை நடத்தியது. பல்வேறு துறைகளைச் சார்ந்த புகழ்பெற்ற 300 பேர் அவ்வறிக்கையில் கையொப்பமிட்டனர். நீதியரசர் வி.ஆர்.கிருஷ்ணய்யர், முரசொலி மாறன், சுரதா, வைரமுத்து, மு.மேத்தா, சுந்தரராமசாமி, அசோகமித்திரன், ஞாநி, பாலுமகேந்திரா, கலைப்புலி தாணு உள்ளிட்ட பலர் அன்று கையொப்பமிட்டனர். அந்த வரிசையில் ஒருவராய், இளையராஜாவும் கையெழுத்திட்டிருந்தார் என்பதைப் புதிதாய்ப் புறப்பட்டிருக்கும் ஈழ ஆதரவாளர்கள் அறிவார்களா என்று தெரியவில்லை.

எல்லோரையும் அடித்துத் துரத்துவதும், துரோகிகளாகக் காட்ட முயல்வதும், நாம் முன்னெடுக்கும் கோரிக்கையின் வலிமையைக் குறைக்கும்.

தாங்கள் மட்டுமே ஈழ ஆதரவாளர்கள் என்று காட்டிக்கொள்ள முயலும் சிலரின் மலிவான உத்திதான் இது.

# ஹட்டனில் புதிய பண்பாட்டுத் தளம் அங்குரார்ப்பண நிகழ்வில் கேட்டவைகள்

புதிய பண்பாட்டுத்தளம் (புதிய பண்பாட்டுக்கான வெகுஜன அமைப்பு) ஒன்று ஹட்டனில் ஒக்டோபர் மாதம் 13ம் திகதி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

ஒக்டோபர் புரட்சியினதும் , எழுச்சியினதும் ஒரு வடிவமாக ஆரம்பமான இந்நிகழ்வு , லெனின் மதிவானம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மலையகம் மற்றும் யாழ்ப்பாணம், வவுனியா, கொழும்பு, மன்னார், மட்டக்களப்பு போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த பல்வேறு கட்சிகளினதும் கலை இலக்கிய அமைப்புகளினதும் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். மலையகத்தின் மூத்த சமூக செயற்பாட்டாளர் சாந்திகுமார், இலங்கையின் மூத்த இடதுசாரிச் செயற்பாட்டாளர்களான நீர்வை பொன்னையன், சுப்பையா போன்றோரும் கலந்துகொண்டு தமது வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

முதலில் வாழ்த்துரையை சாந்திகுமார் வழங்கினார். எண்பதுகளில் மலையக இளைஞர்களை அணிதிரட்டி கருத்தியல் தேடல்களுக்கு வழிசமைத்ததோடு, "தீர்த்தக்கரை" சஞ்சிகை வாயிலாக முற்போக்குக் கலை இலக்கிய இதழை வெளியிடுவதிலும் பங்களிப்பு நல்கியவர். அவர் தனது உரையில் மாறுபடும் காலச் சூழலில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் அதன் பேறாக மூன்று சவால்களை நாம் சந்திக்கிறோம், இன அடையாளங்கள் முன்னிலைக்கு வந்துள்ளது, அறிவும் வணிகமும் ஒவ்வொருவரையும் அந்நியப்படுத்துவதாய் அமையும் சூழல் வலுவேற்றப்படுகிறது, தலைமையற்று மலையகம் அலைவுறும் நிலையேற்பட்டுள்ளது எனக் கூறி இத்தகைய நெருக்கடிமிக்க சூழலில் மிக அவசியமான அமைப்பாக புதிய பண்பாட்டுத் தளம் தோன்றியுள்ள வகையில் இது காத்திரமிக்க பங்களிப்பை நல்கும் என எதிர்பார்க்க இயலும் என்றதோடு தனது வாழ்த்துகளையும் தெரிவித்தார்.

அடுத்து கே.சுப்பையா தனது வாழ்த்தினைத் தெரிவித்தார். தீண்டாமை ஒழிப்பு வெகுஜன அமைப்பிலும் கொம்யூனிஸ்ட் கட்சியிலும் முன்னணிப் போராளியாகப் போரடிய மூத்த தோழரான அவர் தனது உரையில், பல்வேறு போராட்டங்களில் வேறுபட்ட அமைப்புகளில் போராடியவர்களும் பல பிரதேசங்களையும் சேர்ந்தவர்களும் இணைந்து பொது நோக்கம் ஒன்றின் அடிப்படையில் இத்தகைய அமைப்பை உருவாக்கியுள்ளீர்கள் இதன் செயற்பாடுகள் காத்திரமாக அமைய வாழ்த்துகிறேன் என்றார். மூத்த இடதுசாரிப் போராளியும் தொழிற்சங்கவாதியும் முற்போக்குப் படைப்பாளியுமான நீர்வைப் பொன்னையன் தனது ஆதரவைத் தெரிவிக்கக் கலந்து கொண்டிருந்தார் தொண்டையில் கடும் நோய்த்தாக்குதல் காரணமாக உரையாற்ற இயலவில்லை என்ற செய்தியைக் கூறித் தலைவர் தனது தலைமையுரையை வழங்கினார்.

அடுத்து அங்குரார்ப்பண உரையை ந.இரவீந்திரன் ஆற்றினார். முன்முடிவுகளோடு அவற்றைப் பிறரில் திணிப்பதாக அல்லாமல் மக்கள் விடுதலைக்கு அவசியமான பண்பாட்டுத் தளத்தில் செயலாற்ற ஒருகளம் கண்டடையப்பட்டுள்ளது. முதலில் சிங்களப் பேரினவாதத்தினை அடையாளங்கண்ட நடேசையரும் மீனாட்சியம்மாளும் இனவாதத்துக்கு இடமளிக்காமலே சிங்கள முற்போக்கு சக்திகளோடு ஐக்கியப்பட்டு பேரினவாதத்துக்கு எதிராகப் போராடியிருந்தனர் இளஞ்செழியனும் இதேவகையில் மலையகத்தில் போராடும் போது அந்தப் போராட்டத்தை வடக்கு-கிழக்குக்கும் எடுத்துச் சென்றார். இது இலங்கையிலேயே மலையகம்தான் மிகப் பெரும்பான்மைத் தொழிலாளர்களை உடைய சமூகம் என்பதன் வெளிப்பாடு. இந்தப் படிப்பினையை எல்லோரும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்பதாலேயே இந்த மலையக மண்ணில் இப்புதிய பண்பாட்டுத் தளம் என்கிற வெகுஜன அமைப்பை அங்குரார்ப்பணம் செய்கிறோம் என்றார் இரவீந்திரன்.

கவிஞர் முரளீதரன் தனது கருத்துரையில் ஒரு நிகழ்ச்சித்திட்டம் இல்லாமல் இந்த அமைப்பு தொடக்கப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது. மார்க்சியம் பற்றியே பேசப்பட்டது. அதனை ஏற்காதவர்கள் இதில் சேர்ந்து இயங்க முடியாதா? புதிய பண்பாடு என்றால் என்ன? இப்போது இருக்கும் பண்பாடு நிராகரிக்கப்பட வேண்டுமா? என்னிடம் கேள்விகளையே எழுப்பியிருக்கிறீர்கள். இவற்றுக்கான பதில் தெளிவானால் பலரும் சேர்ந்து இயங்குவதில் தடை இருக்காது. கூட்டுத்தலைமை உடையதாக புதிய பண்பாட்டுத் தளம் அமையப்போகிறது என்றால் பொறுப்பேற்க எவரும் இல்லாத நிலை ஏற்படலாம். கோ.நடேசய்யர் போன்ற முன்மாதிரிகள் எமக்கு வேண்டும் என்ற கவிஞர் முரளீதரன், இன்றைய ஆசிரியர்கள் குறித்தும் கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

கலைஞர் ஹெலன் வஞ்சிக்கப்பட்ட வரலாற்றையுடைய மலையக மக்கள் இன்றும் நாட்கூலி முறைக்கு ஆட்படுத்தும் சதிகளைச் சந்திப்பவர்கள் என்றார். வளமான நாட்டார் வழக்காற்றியலையுடைய மலையகம் "கூடைக்குள் தேசம்" முதல் கவிஞர் முத்துவேல் என்கிற வளம் வரை கொண்டுள்ளது. இங்கு ஒரு புதிய பண்பாட்டுத் தளம் தோற்றம் பெற்றுள்ளமை மகிழ்வைத் தருகிறது.

இன்று ஆஸ்பத்திரி புது நோயை உருவாக்குகிறது் பஸ்ஸில் ஏறினால் கொண்டக்ரரின் கைதியாகிவிடுகிறோம் கச்சேரிக்குப் போனால் திசை தெரியாமல் அலைக்களிக்கப்படுகிறோம் பொலீஸ்நிலையம் பற்றிப் பேசவேண்டாம் எங்கும் அறம் கேள்விக்குள்ளாகியுள்ளது என்றார். நிலம்-பொலீஸ் அதிகாரம் பற்றிப் பேசுகிறோம், குடியிருக்க நிலமே இல்லாமல் பல்லாயிரம் மக்கள் உள்ளமை பற்றி எவருக்கும் அக்கறை இல்லை. மலையக மக்களின் மாதச் சம்பளம் ஏமாற்றப்படுகிறது. பல்கலைக் கழகப் போராட்டம் திசை தெரியாமலே முன்னெடுக்கப்படுகிறது. தமிழ்த் தேசியப் போராட்டம் முழுக்க முழுக்க ஆண்களின் போராட்டமாயே அமைந்தது. பங்கெடுத்த பெண்கள் இன்று சமூகத்தில் மிக மோசமான இழிவுகளைச் சந்தித்துக்கின்றனர். இந்தச் சூழலில் பெட்டிக்கடைகள் போல அமைப்புகள் பெருகியுள்ளன. அவற்றை செயலாற்றி ஒன்றிணைக்க இதுபோன்ற முன்முடிவில்லாமல் திறந்த மனதோடு உரையாடல் நிகழ்த்த ஏற்ற அமைப்புத் தொடங்கப்பட்டமை வரவேற்புக்குரியதாகும் உரையாடலுக்கான இடைவெளி ஜனநாயக வகைப்பட்டதாக அமையவேண்டும் என்றார் சிறீதரன்.

RIO+20
CRESCER, INCLUIR, PROTEGER

# ரியோ +20 மாநாடு

## சுற்றுச் சூழலியத்தின் அரசியல்

**கடந்த** ஜூன் மாதம் பிரேசிலின் ரியோ டி ஜெனீ ரோ நகரில் - முந்தைய 1992ஆம் ஆண்டின் ரியோ பூமி மாநாடு நடந்து இருபது ஆண்டுகள் நிறைவடையும் நிலையில் - நிலையான வளர்ச்சி குறித்த ஐ.நா. மாநாடு ஊடகப் பரபரப்பு ஏதுமின்றியும் ஆரவாரமற்றும் நிகழ்ந்து முடிந்துள்ளது. முந்தைய மாநாட்டின்போது பங்கேற்ற நாடுகளுக்கிருந்த பொறுப்புணர்வும் பேரவாவும் உறுதியான தீர்மானங்கள் பலவற்றை நிறைவேற்ற வைத்து உலகளவில் சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வையும் விவாதங்களையும் தூண்டின. ஆனால் இப்போதைய மாநாடு உறுதியான முடிவுகள் எவையுமின்றி நிறைவடைந்துள்ளதை இன்றைய உலகளாவிய பிரச்சினைகளின் - குறிப்பாக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் நிலைகுலைந்த பொருளாதாரங்களின் - பின்னணியில் புரிந்து கொள்ளும்போது ஆச்சரியம் எதுவும் ஏற்படவில்லை.

சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வு, சமூக வளர்ச்சி குறித்த விவாதங்கள் 1960களின் இறுதியில் தொடங்கி 70களில் உலகளவில் நடந்தன. விளைவாக 1972இல் ஸ்டாக்ஹோமில் மனிதச் சுற்றுச்சூழல் மாநாடு நடைபெற்றது. 1983இல் வெளியான பிரண்ட்லேண்ட் அறிக்கை வறுமையும் நாடுகளுக்கிடையிலான ஏற்றத் தாழ்வுகளுமே இன்றைய சுற்றுச் சூழல் பிரச்சினைகளுக்குக் காரணமாக இருக்கின்றன எனக் கருதியது. பருவநிலை மாறுபாடு குறித்து ஆராயும் அரசாங்கங்களுக்கிடையிலான குழுவின் (IPCC) முதல் அறிவியல் பூர்வமான அறிக்கை 1990இல் வெளியாயிற்று. இவற்றின் விளைவாகவே "ரியோ பூமி உச்சி மாநாடு" என்றழைக்கப்படும் வரலாற்றுச் சிறப்புமிக்க சுற்றுச்சூழல் மற்றும் வளர்ச்சி குறித்த ஐ.நா. மாநாடு 1992ஆம் ஆண்டு ரியோவில் நிகழ்ந்தது. அது தொடர்பாக ஊடகங்களில் வெளியான செய்திகள் இன்றும் பசுமையாக நினைவில் உள்ளன.

1992இன் மாநாட்டில் பங்கேற்ற சுமார் 120 நாடுகளின் ஒப்புதலோடு "ரியோ பிரகடனம்' அதை நடைமுறைப்படுத்துவதற்கான "செயல்திட்டம் - 21", பருவநிலை மாறுபாடு மற்றும் பல்லுயிர்மை குறித்த இரண்டு உடன்படிக்கைகள் ஆகியவை அமெரிக்காவின் தடையையும் மீறி நிறைவேற்றப்பட்டன. சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதுடன் நிலையான வளர்ச்சியை உலகளாவிய ஒத்துழைப்புடன் அடைவதே இவற்றின் அடிப்படை நோக்கம். ரியோ மாநாட்டின் தீர்மானங்கள் பூமி சொர்க்கபுரியாக மாறுவது போன்ற கற்பனைகளை வளர்த்தன.

முந்தைய மாநாட்டின் தொடர்ச்சியாக ஐ. நா. புதிய அமைப்புகளை உருவாக்கியது. நிலையான வளர்ச்சிக்கான ஆணையம், பருவநிலை மாறுபாடுமீதான ஐ. நா. கூட்டமைப்பு ஆகியவற்றை முக்கியமாகக் குறிப்பிடலாம்.

இவற்றில் பருவநிலை மாறுபாடு குறித்த கூட்டமைப்பின் வருடாந்திர மாநாடுகள் (COP) மட்டுமே குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அளவிற்குத் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன. கூட்டமைப்பின் உறுப்பு நாடுகள் பங்கேற்கும் பருவநிலை மாறுபாடு தொடர்பான மாநாடுகள் பசுமைக்குடில் வாயுக்களின் வெளியேற்றத்தைக் குறைப்பதற்கான இலக்குகள் குறித்து விவாதிப்பவையாக மட்டுமே நடந்தேறிவருவதால் நிலையான வளர்ச்சிக்கான ஆக்கபூர்வமான விவாதங்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டன.

புவி வெப்பமடைதல் குறித்து அறிவியல்பூர்வமாக ஆராய்வதற்கென ஐ. நா. அமைத்த மிறிசிசி இன் ஆய்வறிக்கைகளின்படி, இயற்கையாகப் புவிவெப்பமடைதலை மேலும் தீவிரப்படுத்தக்கூடிய மானிட உற்பத்தியிலான பசுமைக்குடில் வாயுக்கள் வளிமண்டலத்தில் மிக வேகமாக அதிகரித்து வருகின்றன. இவற்றில் பெரும் பங்கு (75 சதவீதம்) வகிக்கும் கார்பன்டை ஆக்ஸைடின் திரட்சி வளிமண்டலத்தில் 19ஆம் நூற்றாண்டின் தொழில்புரட்சிக்கு முன்பு 280 ppm ஆக (பத்து இலட்சத்தில் 280 பங்குகள்) இருந்த அளவு 2005இல் 329 ppmஆக உயர்ந்துள்ளது. இதன் அளவு 450 ppm என அதிகரிக்கும்பட்சத்தில் புவிவெப்பமடைதல் மேலும் 2 டிகிரி செல்சியஸ் அதிகரிக்கும். இதனால் பனித்துருவங்கள் உருகிக் கடல்மட்டம் உயரும். புவி வெப்பம் மேலும் உயர்ந்தால் தாங்க முடியாத பேரழிவுகளை உலகம் எதிர்கொள்ள நேரிடும். இதைத் தவிர்க்க 1990ஆம் ஆண்டில் வெளியேற்றப்பட்ட கார்பன்டை ஆக்ஸைடின் அளவில் 2020ஆம் ஆண்டிற்குள் 20 சதவீதமும் 2050க்குள் 90 சதவீதமும் குறைக்கப்பட வேண்டும்.

இவ்வாய்வறிக்கைகளின் பின்னணியில் ரியோ மாநாட்டின் உறுப்பு நாடுகள் தமது பசுமைக்குடில் வாயுக்களின் வெளியேற்றத்தைக் குறைப்பதென 1995ஆம் ஆண்டின் பெர்லின் மாநாட்டில் ஒப்புக்கொண்டன. பிறகு 1997இல் ஜப்பானின் கியோட்டோ நகரில் நடந்த மாநாட்டில் (COP - 3) அமெரிக்கா முன் மொழிந்த பலவீனப்படுத்தும் அம்சங்களுடன் உயிரற்ற கியோட்டோ ஒப்பந்தம் நிறைவேறியது.

வளிமண்டலத்தில் தற்போது பசுமைக்குடில் வாயுக்களின் திரட்சி அதிகமாக இருப்பதற்குக் காரணமாக உள்ள வளர்ந்த நாடுகளைப் பட்டியலிட்டு அவற்றுக்கு வேறுபடுத்தப்பட்ட பொறுப்புகளைக் கியோட்டோ ஒப்பந்தம் அளித்தது. அதாவது 1990ஆம் ஆண்டின் கார்பன் வெளியேற்றத்தில் 5 சதவீதத்தை 2008 - 12ஆம் ஆண்டிற்குள் குறைக்க வேண்டும். பொருளாதார வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு வளரும் நாடுகளுக்கு இதில் விலக்கு அளிக்கப்பட்டது. இருப்பினும் வளர்ந்த நாடுகள் இந்நிர்ப்பந்தத்திலிருந்து "தப்பிப்பதற்கான 'வழிமுறைகளை" ஒப்பந்தத்தில் சேர்ப்பதற்கு அமெரிக்கா கடும் முயற்சிகளை மேற்கொண்டு வெற்றியும் பெற்றது.


"தப்பிப்பதற்கான வழிமுறைகளின்" அடிப்படையில் வளர்ந்த நாடுகள் தமது கார்பன் வெளியேற்றத்தை நேரடியாகக் குறைப்பதற்குப் பதிலாக வளர்ந்த, வளரும் நாடுகளில் கார்பன் குறைப்புத் திட்டங்களில் முதலீடு, கார்பன் வர்த்தகம் ஆகியவற்றின் மூலம் ஈடுசெய்ய முனைந்தன.

2001இல் கியோட்டோ ஒப்பந்தத்திலிருந்து வெளியேறுவதாக அறிவித்த அமெரிக்கா தன்னார்வத்துடன் தனித்தும் செயல்படுவதாகக் கூறியது. வளரும் நாடுகளும் கார்பன் குறைப்பிற்கான பொறுப்புகளை வளர்ந்த நாடுகளுக்கு நிகராக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் தன் நாட்டின் ஏராளமான பாதுகாக்கப்பட்ட வனங் களை கார்பன் உறிஞ்சிகளாகக் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும் எனவும் அமெரிக்கா இன்றுவரை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இதன் விளைவாக அமெரிக்காவின் கார்பன் வெளியேற்றம் 2005இல் 16.3 சதவீதம் உயர்ந்தது.

தொடக்கத்தில் அதிக ஆர்வத்துடன் செயல்பட்ட ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரிட்டன்இ பிரான்ஸ், ஜெர்மனி, ஸ்வீடன் ஆகிய நாடுகளும் கார்பன் வெளியேற்றக் குறைப்பில் நிர்ணயிக்கப்பட்ட தமது இலக்குகளை அடையவில்லை. தற்போது அமெரிக்காவின் நிலைப்பாட்டையே ஆதரிக்கின்றன. கார்பன் வர்த்தகத்தில் ஈடுபடுவதன் மூலம் கார்போரேட்டுகள் கார்பனை அதிக அளவு வெளியேற்றும் திட்டங்களிலும் தொடர்ந்து தடையின்றி முதலீடு செய்துவருகின்றன. குறைக்கப்பட வேண்டிய கார்பன் வெளியேற்றத்தை வாங்கவும் விற்கவுமான பண்டமாக மாற்றப்பட்டதன் மூலம் வளிமண்டலச் சந்தைக்கான முதலீட்டு உத்திமுறைகள் பெருகின.

இவ்விதமாகச் சுற்றுச்சூழல் மற்றும் நிலையான வளர்ச்சிக்கான முயற்சிகள் திசைமாறி உலகமய முதலீட்டியத்தின் வர்த்தக விதிகளுக்கு உட்பட்டதாக மாறியதற்கும் அதே காலகட்டத்தில் நிகழ்ந்த உலகின் அரசியல் பொருளாதார நிலைமையின் மாற்றத்திற்கும் இடையே நேரடி உறவுகள் இருந்தன.

வளிமண
சமீபத்
சு
வளர்
இம்முரண
20



1992ஆம் ஆண்டு ரியோ மாநாடு நடந்தேறிய காலகட்டம் பலவகைகளில் குறிப்பிடத்தக்கது. ஒன்று, மேற்கத்திய நாடுகளின் நவீன நாகரிகம் குறித்த பின்நவீனத்துவம்வரையிலான மேற்கத்தியத் தத்துவங்களின் விமர்சனங்கள், சுற்றுச்சூழல் குறித்த விவாதங்கள், புவி வெப்பமடைதல் அதிகரித்து வருவதை உறுதிப்படுத்தும் ஆய்வறிக்கைகள் ஆகியவை உலகின் பொது அரங்குகளில் இடம்பிடித்தன.

அடுத்து, மூலதனத் திரட்சியின் விளைவுகளான சமூக அவலங்களைத் தணிக்கக் கூடியனவாக அமைந்த சமூக நல அரசுகளின் பிடியிலிருந்து விடுபடவும் முதலீட்டியத்தின் தீராத உலகமய விரிவாக்கத்தைச் செயல்படுத்தவும் மறுவுருவாக்கம் கொண்ட புதிய தாராளமயக் கோட்பாடுகளைப் பொருளாதாரத் தேக்கமடைந்து வறுமையுற்றிருந்த மூன்றாம் உலக நாடுகள்மீதும் சிதைவுண்ட அதிகாரத்துவ சோசலிச நாடுகள்மீதும்




"பொருளாதார வளர்ச்சி"க்கென வளர்ந்த நாடுகள் திணிக்கத் தொடங்கிய காலம். இக்காலகட்டத்தின் குரலாகவும் உலகமயமாக்கலுக்கான கருத்தாடலாகவும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு, வறுமை ஒழிப்பு, நிலையான வளர்ச்சி, உலகநாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய பூமி மாநாட்டின் தீர்மானங்கள் வெளிப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

இக்காலகட்டத்தின் மாற்றங்களில் முதன்மையானதாகக் குறிப்பிடப்பட வேண்டியது அதிகரித்துவரும் கார்போரேட் மூலதனத்தின் ஆதிக்கம். உலகமயமாக்கப்பட்ட பொருளாதாரத்தில் அந்நிய நேரடி முதலீடுகளின் வடிவத்தில் வளரும் நாடுகளின் மனித வளத்தையும் இயற்கைச் செல்வங்களையும் கொள்ளையடிக்கும் பன்னாட்டுக் கார்போரேட் நிறுவனங்களில் பெரும்பான்மை வளர்ந்த நாடுகளைச் சேர்ந்தவை. 1990இல் உலகின் மொத்த உற்பத்தியில் 0.5 சதவீதமாக இருந்த அதன் பங்கு 2000ஆம் ஆண்டில் 4 சதவீதமாக அதிகரித்து மேலும் உயர்ந்து வருகிறது. உலக வர்த்தகத்தில் மூன்றில் இரண்டு பங்கு கார்போரேட்டுகளுடையது. உலகின் மொத்தச் சொத்தில் 25 சதவீதம் 300 கார்போரேட்டுகளுக்கு மட்டுமே சொந்தமாக உள்ளது. கடந்த முப்பது ஆண்டுகளில், கார்போரேட்டுகளின் மொத்த உற்பத்தி மதிப்பில் ஊதியமாகக் கொடுக்கப்படுவதன் பங்கு 30 சதவீதத்திலிருந்து 11 சதவீதமாகக் குறைந்தும் லாபத்தின் பங்கு 23 சதவீதத்திலிருந்து 56 சதவீதமாக உயர்ந்துமுள்ளது.

கார்போரேட்டுகளின் நிதி, உற்பத்தி, நிர்வாகம, நுகர்வு ஆகியவை தேசம் கடந்தவையாக இருப்பதால் அவற்றின் கார்பன் வெளியேற்றமும் பணவீக்கம், விலை உயர்வு ஆகியவற்றைப் போலவே தேசிய அரசுகளின் எல்லைக்கும் கட்டுப்பாட்டிற்கும் அப்பாற்பட்டனவாகவே உள்ளன. தேசிய அரசுகள் மட்டுமின்றித் தேசியப் பொருளாதாரங்களும் கேள்விக்குள்ளாகி உள்ளன. தேசிய அளவிலான சமூகத்திற்கும் அதன் பொருளாதாரத்திற்கும் இடையிலான சமநிலையும் குலைகிறது. மேலும் தேசிய அரசுகளின் கொள்கைகளையும் செயல்பாடுகளையும் தீர்மானிப்பதாகவும் அதன் நீட்சியாக ஜனநாயக அமைப்புகளை வணிக மயமாக்கக்கூடியதாகவும் கார்போரேட்டுகளின் அதிகாரம் ஓங்கிவருவதை ஊழல் குறித்த விசாரணைகள் வெளிப்படுத்தியுள்ளன. இதைப் போலவே அமெரிக்காவின் ஆட்சியாளர்களுக்கும் கார்போரேட்டுகளுக்கும் இடையிலான நெருக்கமான உறவு அதன் அயலுறவுக் கொள்கையை எவ்விதம் பாதித்துவருகிறது.

இரண்டாம் மாற்றம், வளரும் நாடுகளின் எழுச்சி. வளர்ந்த நாடுகளின் நிதி மூலதனத்தையும் தொழிற்சாலைகளையும் உலகமயமாக்கம் வளரும் நாடுகளுக்கு இடம்பெயரச் செய்துள்ளது. இதன் விளைவாக வளர்ந்த நாடுகளில் பெரும்பான்மையோர் வேலைவாய்ப்புகளை இழந்தும் கார்போரேட்டுகளின் பங்குதாரர்களும் செழித்தும் ஏற்றத்தாழ்வுகள் அதிகரித்து அதன் பொருளாதாரங்கள் வீழ்ச்சியடைகின்றன.

பருவநிலை மாறுபாடு உடன்டிக்கைகளில் மாசுபடுத்தாத தொழில் நுட்பங்களையும் நிதி உதவியையும் வளரும் நாடுகளுக்கு வழங்க ஒப்புக்கொண்ட வளர்ந்த நாடுகள் இன்றுவரை ஏமாற்றிவருகின்றன.

இதற்கு மாறாக வளரும் நாடுகளில் குறிப்பாகச் சீனா, இந்தியா, பிரேசில், தென்னாப்ரிக்கா, ரஷ்யா உள்ளிட்ட டீசுஜஊளு நாடுகள், இந்தோனேசியா, மெக்ஸிகோ நாடுகள் சமூகவளர்ச்சி அடிப்படையில் வீழ்ச்சியடைந்தும் மொத்த உள்நாட்டு உற்பத்தி (புனீ) அடிப்படையில் வளர்ச்சியடைந்தும் வருகின்றன.

இவ்வளர்ச்சியின் நீட்சியாகச் சீனா 19ஆம் நூற்றாண்டு ஏகாதிபத்தியங்களின் சகல அம்சங்களோடு வல்லரசாக மாறிவருகிறது. பாகிஸ்தான், இலங்கை உள்ளிட்ட ஆசிய நாடுகளிலும் ஆப்பிரிக்க நாடுகள் சிலவற்றிலும் உள்கட்டமைப்பு வளர்ச்சிக்கான முதலீடுகள் என்னும் போர்வையில் அவற்றின் பொருளாதாரத்திலும் சமூக உறவுகளிலும் ஆதிக்கம் செலுத்திவருகிறது.

உலகளவிலான ராணுவ மேலாதிக்கத்தைக் கொண்ட வளர்ந்த நாடுகளின் பொருளாதாரங்கள் வீழ்ச்சியடைவதும் பலவீனமான ராணுவக் கட்டமைப்புகளைக் கொண்ட வளரும் நாடுகளின் நிஞிறி வளர்ச்சியடைவதும் "பனிப்போரு"க்கு இணையான புதிய புவி அரசியலைத் தோற்றுவித்துள்ளன.

இவ்விரு மாற்றங்களினூடாகக் கார்பன் வெளியேற்றத்தின் ஒட்டு மொத்த அளவு அதிகரித்தது மட்டுமின்றிக் கியோட்டோ ஒப்பந்தம் தோல்வியும் அடைந்தது. வளரும் நாடுகளில் கார்போரேட் தொழிற்சாலைகளும் சுரங்க நிறுவனங்களும் பெருகியதுடன் உள்கட்டமைப்பு வசதிகளும் விரிவடைந்தன. இவற்றிற்கான ஆற்றல் தேவையை ஈடுசெய்வதற்கான மின் உற்பத்தி நிலையங்களும் பெட்ரோலியச் சுத்திகரிப்பு நிறுவனங்களும் அதிகரித்தன. வளர்ந்த நாடுகளில் நடைமுறையில் இருந்துவந்த "புதை படிவ எரிபொருள் அடிப்படையிலான முதலீட்டிய வளர்ச்சிப் பாதை" வளரும் நாடுகளுக்கும் விரிவடைந்துள்ளது.

இன்று அமெரிக்கா, ஜப்பானை அடுத்துப் பெட்ரோலியத்தை அதிகளவு இறக்குமதி செய்யும் நாடு சீனா. இந்நாடுகளின் நிஞிறி வளர்ச்சியோடு கார்பன் வெளியேற்றமும் உயர்ந்தது. வளரும் நாடுகளின் கார்பன் வெளியேற்றம் வளர்ந்த நாடுகளின் அளவை 2015இல் எட்டிவிடும் என மிறிசிசிஇன் 2007ஆம் ஆண்டின் அறிக்கை கூறுகிறது. இவ்வளர்ச்சி நீடித்தால் 2015ஆம் ஆண்டில் கியோட்டோ ஒப்பந்தத்தின்படி 5 சதவீதம் குறைப்பதற்கு மாறாக 37 சதவீதம் உயரும் என ஆய்வாளர்கள் எச்சரிக்கின்றனர். இதனடிப்படையில்தான் வளரும் நாடுகளும் சமமான பொறுப்புகளை ஏற்க வேண்டும் என வளர்ந்த நாடுகள் வற்புறுத்துகின்றன.

இருப்பினும் தங்கள் நாடுகளில் மக்கள் தொகைப் பெருக்கத்தின் விளைவாக வாழ்வாதாரத்திற்கான போட்டி அதிகமாகவும் தனிநபர் விகித அடிப்படையில் கார்பன் வெளியேற்றம் குறைவாகவும் உள்ளதாலும் பொதுவான வளிமண்டலத்தில் கார்பன் திரட்சி அடைந்த்தற்கான தங்கள் பங்கு சமீபத்தியது என்பதாலும் வளரும் நாடுகள் வளர்ந்த நாடுகளின் - குறிப்பாக அமெரிக்காவின் - கோரிக்கையைச் சுற்றுச்சூழலிய ஏகாதிபத்தியம் என விமர்சிக்கின்றன.

வளர்ந்த நாடுகளுக்கும் வளரும் நாடுகளுக்கும் இடையிலான இம்முரண்பாடுகள் 2007இன் பாலி மாநாட்டில் வெளிப்படத் தொடங்கி 2009இன் கோபன்ஹேகன் மாநாட்டில் உச்சமடைந்து இன்றுவரை தொடர்கின்றன. ஜகோபன்ஹேகன் உச்சி மாநாடு: மாபெரும் வரலாற்று முரண்நகை.

கியோட்டோ ஒப்பந்தத்தின் முதல்கட்டக் கால அளவு (2008 - 12) முடியும் நிலையில் இரண்டாம் கட்டத்திற்கான புதிய ஒப்பந்தத்தை நிறைவேற்ற வேண்டிய சூழலில் கடந்த ஆண்டு டிசம்பரில் தென்னாப்ரிக்காவின் டர்பனில் கூடிய பருவநிலை மாறுபாடுகளின் 17ஆம் மாநாடு முற்றிவரும் முரண்பாடுகளால் எவ்வித ஒப்பந்தமும் கைகூடாமல், 2015ஆம் ஆண்டிற்குள் "அனைத்து நாடுகளையும் சட்டபூர்வமாகக் கட்டுப்படுத்தக்கூடிய' புதிய ஒப்பந்தத்தை நிறைவேற்றுவது எனவும் அதை 2020இலிருந்து செயல்படுத்துவதெனவும் தீர்மானித்து முடிவடைந்தது.

IPCC,ன் அறிக்கைகளின்படி 2020க்குள் 1990இன் அளவில் 20 சதவீதம் கார்பன் வெளியேற்றம் குறைக்கப்பட வேண்டும் என்பதற்கு மாறாக ஏற்கனவே 37 சதவீதம் உயர்ந்துவிட்ட இன்றைய நிலையில் புதிய ஒப்பந்ததிற்கான காலநீட்டிப்பானது புவிவெப்பமடைதலை 2020க்குள் 2ழஊ க்கும் குறைவாகக் கட்டுப்படுத்துவது என்பது இயலாததாகிவிடும். பின்வரும் ஆண்டுகளில் 4ழஊ ஆக உயரும்பட்சத்தில் பேரழிவுகளின் மூலம் உலகின் மக்கள்தொகையில் பத்தில் ஒரு பகுதியினரே மிஞ்சுவர் என அறிவியலறிஞர்கள் சிலர் எச்சரிக்கின்றனர் (Durban: Road to Nowhere, Praful Bidwai, EPW, December 31, 2011).

தொடக்கத்திலிருந்தே கியோட்டோ ஒப்பந்தம் தோல்வி அடைந்துவருவது எந்த மாநாட்டிலும் மறுபரிசீலிக்கப்படவில்லை தொடர்ந்து கார்பன் வெளியேற்றம் அதிகரிப்பது குறித்தும் விவாதிக்கப்படவில்லை. கார்போரேட்டுகளின் ஆதிக்கத்தையோ புதைபடிவ எரிபொருள் அடிப்படையிலான வளர்ச்சியையோ சுற்றுச் சூழலுடனும் சமுகநீதியுடனும் இணக்கமற்றதாக இயங்கிவரும் முதலீட்டியத்தையோ அதற்குத் துணைபோகும் தேசிய அரசுகளையோ கேள்விக்குட்படுத்தவில்லை.

முதல் ரியோ மாநாட்டின்போதே இவ்வித விமர்சனங்கள் எழுந்தன. வுாந நுஉழடழபளைவ பத்திரிகையின் ஆசிரியர்கள் தொகுத்த W}ose Common Future (1993)இன் விமர்சனங்கள் ஐ. நா. மாநாடுகளில் எதிரொலிக்கவில்லை.

இதன் பின்னணியில்தான் கடந்த ஜூனில் நிலையான வளர்ச்சிக்கான ஐ. நா. மாநாடு ரியோவில் கூடியது. 1992க்குப் பிறகு ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறையென இது நான்காவதாக நடைபெறும் ரியோ +20 மாநாடு. இதுவும் எது குறித்தும் விவாதிக்காமல் முந்தைய மாநாட்டின் தீர்மானங்களையே பல்லவியாக "நாம் விரும்பும் எதிர்காலம்" என்னும் தலைப்பில் தீர்மானத்தை நிறைவேற்றி நினைவு அஞ்சலி செலுத்துவதாக அமைந்துவிட்டது.

கார்பன் டை ஆக்ஸைடின் வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்தினாலே சுற்றுச்சூழல் காப்பாற்றப்பட்டுவிடும் என்பதாகவே இம்மாநாடுகள் நடந்து வருகின்றன.


அதாவது கார்பன் வெளியேற்றத்திற்கு அப்பாற்பட்ட அரசியல் பொருளாதாரக் காரணங்களாலும் சுற்றுச்சூழல் பேரழிவுக்கு உள்ளாவதை இம்மாநாடுகள் மறைத்துவருகின்றன.

(நன்றி இணையம்)

ண்டலத்தில் கார்பன் திரட்சி அடைந்ததற்கான தங்கள் பங்கு
தியது என்பதாலும் வளரும் நாடுகள் வளர்ந்த நாடுகளின்
- குறிப்பாக அமெரிக்காவின் - கோரிக்கையைச்
ற்றுச்சூழலிய ஏகாதிபத்தியம் என விமர்சிக்கின்றன.
ந்த நாடுகளுக்கும் வளரும் நாடுகளுக்கும் இடையிலான
ண்பாடுகள் 2007இன் பாலி மாநாட்டில் வெளிப்படத் தொடங்கி
009இன் கோபன்ஹேகன் மாநாட்டில் உச்சமடைந்து
இன்றுவரை தொடர்கின்றன. ஜகோபன்ஹேகன்
உச்சி மாநாடு: மாபெரும் வரலாற்று முரண்நகை.

# இலங்கைக்கு 500 கடல்மைல் தொலைவில் தாழமுக்கம்!

## வடக்கு, கிழக்கு மீனவர்களுக்கு எச்சரிக்கை



வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கடும் காற்றுடன் கூடிய மழை பெய்வதற்கான சாத்தியக்கூறுகள் தென்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மத்திய வங்காள விரிகுடாவில் ஏற்பட்டிருந்த குறைந்த தாழமுக்கமானது தற்போது வலுவடைந்து தாழமுக்கமாக மாறியுள்ளதாக திணைக்களத்தின் கடமைநேர வானிலை நிபுணர் எஸ்.வசந்தகுமார் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நாட்டில் ஏற்பட்டுள்ள மழையுடன் கூடிய வானிலையை அடுத்து காலி நகரின் பல பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

காலி சங்கமித்த பாடசாலைக்கு அருகிலுள்ள வீதி நீரில் மூழ்கியுள்ளமையினால் போக்குவரத்து நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிபில தெரிவித்துள்ளார்.

கராபிட்டி பகுதியின் பல இடங்கள் நீரில் மூழ்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிடுகிறார்.

யாழ்.குடாநாடு மற்றும் கிழக்கு கடற்பரப்பில் 600 கடல் மைல் தொலைவில் வங்காள விரிகுடாவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை திடீர் தாழமுக்கம் ஏற்பட்டுள்ளது. இதனால் காலநிலையில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

காலநிலை மாற்றத்தினால் காற்றின் வேகம் அதிகரித்திருக்மென்றும் கடல் அலைகளின் வேகம் அதிகரித்திருக்குமென்றும் அத்திணைக்களம் தெரிவித்துள்ளது.


எனவே வடக்கு, கிழக்கு மற்றும் வடகிழக்கைச் சேர்ந்த மீனவர்கள் கடலுக்குச் செல்வதைத் தவிர்க்குமாறும் அத்திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. அத்துடன், மேற்குறிப்பிட்ட 3 மாகாணங்களிலும் இடியுடன் கூடிய மழை பெய்யுமென்றும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதேவேளை, வங்காள விரிகுடாவில் தாழமுக்கம் ஏற்பட்டுள்ளதால் நாட்டின் காலநிலையில் மாற்றம் ஏற்படுமென வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

தாழமுக்கம் காரணமாக நாட்டின் பல பாகங்களிலும் பலத்த காற்று வீசக்கூடுமெனவும் குறிப்பாக கிழக்கு கடற்கரைப் பகுதியில் இது அதிகமாக இருக்குமெனவும் எனவே, கிழக்கு கடல் பகுதியில் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களை எச்சரிக்கையுடன் செயற்படுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் கேட்டுள்ளது.

இதேவேளை, இரவு வேளைகளில் நாட்டின் சில பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்பதால் பொதுமக்களை அவதானமாக இருக்குமாறும் திணைக்களம் கேட்டுள்ளது.

# பாண் விலை அதிகரிக்கும்



கோதுமை மாவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதையடுத்து பாணின் விலையும் அதிகரிக்க கூடும் என பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்தார்.

கோதுமை மாவின் விலை நேற்று வெள்ளிக்கிழமை முதல் அமுலுக்கு வரும் வகையில் அதிகரிக்கப்பட்டது. இதனடிப்படையில் பிறீமா நிறுவனம் ஒரு கிலோ கிராம் கோதுமை மாவின் விலையை 6 ரூபாவாலும் செரண்டிப் நிறுவனம் ஒரு கிலோ கோதுடை மாவின் விலையை 4 ரூபாவினாலும் அதிகரித்துள்ளது.

இதனையடுத்தே பாணின் விலையும் அதிகரிக்கப்படும் எனவும் ஏனைய பேக்கரி பொருட்களின் விலையும் அதிகரிக்கப்படும் எனவும் என்.கே.ஜயவர்தன தெரிவித்தார்.

# சிறுவர், இளைஞர் உரிமைகள்: பாதுகாக்க பாராளுமன்றத்தில் விரைவில் சட்டமூலம்

சிறுவர் மற்றும் இளைஞர், யுவதிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் புதிய சட்ட மூலமொன்று நாடாளுமன்றத்தில் முன் வைக்கப்படும். நீதி அமைச்சு இதற்கான நடவடிக்கை எடுத்துள்ளது.

சிறுவர்களுக்கு போதுமான சட்டபூர்வ பாதுகாப்பை வழங்கும் நோக்கில் இந்த சட்ட மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. நீதி அமைச்சும் சிறுவர் அபிவிருத்தி அமைச்சும் ஒன்றிணைந்து தயாரிக்கும் இச்சட்ட மூலம் விரைவில் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படுமென நீதி அமைச்சின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

பிரிட்டன் ஆட்சிக்காலத்தில் 14 வயதுக்கு குறைந்தவர்களை சிறுவர்களாக கணிக்கும் வகையிலான சட்ட மூலத்தில் 18 வயதுக்கு குறைந்தவர்களை சிறுவர்களாக கணிக்கும் வகையில் இச்சட்ட மூலம் அமையும் எனவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

# சிறுவன் மீது பாலியல் துஷ்பிரயோகம்: குற்றவாளிக்கு 7 வருட கடூழியச் சிறை

சிறுவன் ஒருவனை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாக பழுகாமம், காந்திபுரம் என்னும் இடத்தைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் குற்றவாளிக்கு ஏழு வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 4 ஆம் திகதி அன்றைய தினம் பாடசாலைக்குச் செல்லாமல் இருந்த சிறுவனை கடத்திச் சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக மேற்படி நபருக்கு எதிராக மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு மேல் நீதிமன்ற நீதிபதி திருமதி கனகா சிவபாதசுந்தரம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

துஷ்பிரயோகத்துக்கு உட்பட்ட 10 வயதுச் சிறுவன் தனது சாட்சியத்தில் கூறியதாவது, சம்பவதினம் நான் பக்கத்து வீடடுக்குச் சென்று விளையாடிக் கொண்டிருந்தேன். அப்போது குறித்த நபர் காசு கொடுத்து சாராயம் வாங்கி வரச் சொன்னார். அதற்கு நான் போத்தல் கேட்ட போது பக்கத்து குடிலில் இருக்கிறது எடுத்து வா என்று சொன்னார். நான் போத்தல் எடுக்கப் போன போது பின்னால் வந்த எதிரி என் மீது பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டார். நான் கத்திய போது எனக்கு அடித்தார். பின்னர் இந்தச் சம்பவத்தை வெளியே யாரிடமும் கூற வேண்டாம் என்றும் சொன்னால் எல்லோரையும் வெட்டி சுடுகாட்டில் புதைத்து விடுவேன் என்றும் பயமுறுத்தினார். இதனால் பயத்தில் நான் உடனே தயாரிடம் கூறவில்லை. இவ்வாறு அவர் தனது சாட்சியத்தில் கூறினார்.

# கட்டார் விபத்தில் இலங்கையர் உயிரிழப்பு

கட்டாரில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் இலங்கையர் ஒருவர் பலியானதுடன், மற்றுமொரு இலங்கையர் காயமடைந்துள்ளார்.

திருகோணமலை, மூதூரின் நடுத்தீவைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான சம்மூன் மஹீப் (வயது 42) என்பவரே இவ்வாறு பலியாகியுள்ளார்.

காயமடைந்தவர் கட்டாரிலுள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவரின் ஜனாஸா நல்லடக்கம் கட்டாரில் இடம்பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுவதாக உறவினர்கள் தெரிவித்தனர்.

# ஆதரவு கோருகிறார் அமைச்சர் விமல்



13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை இரத்துச் செய்ய ஒத்துழைப்பு வழங்கும்படி அமைச்சர் விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி ஐ.தே. கட்சி உட்பட அனைத்துக்கட்சிகளுக்கும் பதிவுத்தபாலில் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது.

தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கும் இக்கடிதம் அனுப்பி வைக்கப்படவில்லை என்று அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் பியசிரி விஜேநாயக தெரிவித்துள்ளார்.

# கிருலப்பனையில் தொடர்மாடி வீடு

கிருலப்பனையின் மஹிந்தபுர என்ற இடத்தில் 560 வீடுகள் கொண்ட தொடர்மாடி வீடமைப்புத் திட்டமொன்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக அரசாங்கம் முதல்கட்டமாக 6,699 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

ஜனாதிபதியின் மஹிந்த சிந்தனையின் கீழ் ஜனசெவன 10 இலட்சம் வீடுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் கொழும்பு வாழ் மத்திய தர வகுப்பினர்களுக்காக இந்த வீடமைப்புத் திட்டம் நிர்மாணிப்படவுள்ளது. இதன் மூலம் மத்தியதர வகுப்பினர் நன்மையடைவர்.

# கடத்தப்பட்ட படகில் இருந்தவர்கள் இலங்கைக்கே திருப்பி அனுப்பப்பட்டனர்

இலங்கையில் இருந்து கடத்திச் செல்லப்பட்டதாக கூறப்படும் ஒரு படகில் அவுஸ்திரேலியா நோக்கி வந்தவர்கள் 14 பேர் அவுஸ்திரேலிய அதிகாரிகளால் வழிமறிக்கப்பட்டு விமானம் மூலம் இலங்கைக்கே திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

செஜன் என்ற பெயர் கொண்ட இந்தப் படகு, அவுஸ்திரேலியா அருகிலுள்ள கோகோஸ் தீவுகளுக்கு வட மேற்கே கடந்த வியாழன் இரவு அவுஸ்திரேலிய அதிகாரிகளிடம் சிக்கியது.

இந்தப் படகு கடந்த ஒக்டோபர் 14ஆம் திகதி இலங்கை கடற்பரப்பில் இருந்து கடத்திச் செல்லப்பட்டதாக இலங்கை பொலிசார் ஏற்கனவே குற்றம்சாட்டியிருந்தனர்.

இந்தப் படகை கடத்திச் சென்றபோது, ஒருவரை கொல்ல முயற்சி நடந்தது என்றும், பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன என்றும் இலங்கையின் பொலிசார் கூறியிருந்தனர்.

ஒருவரின் கழுத்தை அறுத்துவிட்டு, மற்றவர்களை கட்டிப் போட்டுவிட்டு படகு கடத்திக் கொண்டுசெல்லப்பட்டதாக புகார் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு படகை கடத்திச் சென்றவர்கள் மீது கைது ஆணை பிறப்பித்திருந்த இலங்கை பொலிஸார் இன்டர்போலின் உதவியை நாடியிருந்தனர்.


இப்படி ஒரு படகு அவுஸ்திரேலியா நோக்கி வரும் என இலங்கை பொலிசார் அவுஸ்திரேலிய அதிகாரிகளுக்கும் தகவல் கொடுத்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், இப்படகில் கோகோஸ் தீவுகள் அருகே வந்தவர்கள் அவுஸ்திரேலியாவிடம் இருந்து பாதுகாப்பு கோரவும் இல்லை, அவுஸ்திரேலியாவுக்கு இருக்கக்கூடிய சர்வதேச கடப்பாடுகளை தொடும் விதமான பிரச்சினை எதனையும் அவர்கள் எழுப்பவும் இல்லை என்று அவுஸ்திரேலிய குடிவரவுத்துறை கூறுகிறது.

ஆகவேதான் குற்றவியல் நடவடிக்கைகளை எதிர்கொள்ளும் நோக்கில், இலங்கைக்கே அவர்களை திருப்பி அனுப்பியது பொருத்தமான செயல்தான் என அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் கிறிஸ் பொவென் சிட்னியில் செய்தியாளர்களிடம் கூறினார்.

படகில் வந்த 15 பேரில் ஒருவர் மட்டும் இன்னும் திருப்பி அனுப்பப்படவில்லை என்றும் இன்னும் ஒரு சில நாட்களில் அவர் திருப்பி அனுப்பப்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தவிர திருப்பி அனுப்பப்பட்டவர்களில் மூன்று பேர் சிறார் என்றும், ஒருவர் ஏற்கனவே அவுஸ்திரேலியாவில் தஞ்சம் கோர முயன்று திருப்பி அனுப்பப்பட்டவர் என்றும் அமைச்சர் பொவென் குறிப்பிட்டார். இவர் சில வாரங்கள் முன் நாடு திரும்ப ஒப்புக்கொண்டு இலங்கைக்கு திரும்பிப் போனவர் என்றும், ஆனால் இவர் இப்படகில் மீண்டும் வந்திருந்தார் என்றும் கூறப்படுகிறது.





# எழுத்து சரிபார்ப்பு எதற்காக?

நம்மில் பலருக்கு இந்த Word Verification என்றாலே பிடிக்காது. காரணம் தேவையில்லாமல் நேரம் வீணாகிறது அல்லது ஒவ்வரு எழுத்தாக பார்த்து பார்த்து டைப் பண்ண வேண்டியிருக்கிறதே என்று கூறுவார்கள். இந்த பயன்பாடு எதற்காக இருக்கிறது என்று என்றாவது யோசித்துப் பார்த்ததுண்டா?

இலவச வெப் மெயில் சேவை வழங்கும் யாகூ, கூகில் போன்ற நிறுவனங்களின் இணைய தளங்களுாடாக மின்னஞ்சல் முகவரியொன்றை உருவாக்கும் போது நம்மைப் பற்றிய விவரங்ளையும் கேட்கிறர்கள். அங்கு ஓரிடத்தில் அர்தமற்ற ஓர் ஆங்கிலச் சொலலை இமேஜ் போமட்டில் தோன்றச் செய்வார்கள. அல்லது வலைப் பதிவுகளில் பின்னூட்டம் இடும் போது இத்தனை காண்பிப்பார்கள்.

அந்தச் சொல்லில் காணப்படும் எழுத்துக்களை அவதானித்து அதன் கீழுள்ள டெக்ஸ்ட் பொக்ஸில் டைப் செய்யச் சொல்வார்கள். இதனை Word Verification (சொல் சரிபார்ப்பு) என்பார்கள். எதற்கு இந்த நடைமுறை? உங்கள் கண் பார்வையை சோதிக்கிறார்களா? அதுதான் இல்லை. இது இலவச இமெயில் சேவை வழங்கும் நிறுவனங்கள் மேற்கொள்ளும் ஒரு பாதுகாப்பு நடவடிக்கையே.




இந்தப் பாதுகாப்பு முன்னேற்பாடு மட்டும் இல்லையானால் கணினி மெயில் சேர்வரே திணறிப் போகும் அளவுக்கு தன்னியக்க முறையில் ஒரே மணித்தியாலத்தில் பல்லாயிரக் கணக்கான மின்ன்ஞ்சல் முகவரிகளை உருவாக்குமாறு அதற்கென விசேட மென்பொருள்களை வடிவமைத்து விடுவார்கள். அத்தோடு ஸ்பாம் எனும் வேண்டாத குப்பை அஞ்சல்களையும் கருத்துக்களையும் அனுப்ப அவர்களுக்கு வாய்ப்பாப் போய் விடும்.

இலவசமாக வழங்கும் சேவையை தவறாக பயன்படுத்துவதை தடுக்கவே இந்த பாதுகாப்பு ஒழுங்கு.

ஒரு மனிதரால் மட்டுமே இமேஜ் போமட்டிலுள்ள எழுத துக்களைக் கண்டறிந்து டைப் செய்ய முடியும். இதன் காரணமாக தன்னியக்க ஸ்பாம் மெயில்களையும் கருத்துக்களையும் தவிர்க்க முடியும் என்பதனாலேயே அந்த எழுத்துக்களை டெக்ஸ்ட் போமட்டில் அல்லாமல் இமேஜ் போமட்டில் தோன்றச் செய்கிற்ர்கள்.

# கணினி வேகம் அதிகரிக்க செய்ய வேண்டியது



நமது கணிணி சில சமயம் நாம் துவங்கும் சமயம் ஆமை வேகத்தில் துவங்கும். சிலர் கணிணியை ஆன் செய்துவிட்டு டீ சாப்பிட்டுவர சென்றுவிடுவர். அவர்கள் டீ சாப்பிட்டு வருவதற்கும் கணிணி ஆன் ஆகி இருப்பதற்கும் நேரம் சரியாக இருக்கும். கணிணி அவ்வாறு மெதுவாக இயங்க என்ன காரணம்.?

சில சாப்ட்வேர்களை நாம் இன்ஸ்டால் செய்யும் போது அந்த மென்பொருள்களின் ஐகான்கள் டெக்ஸ்டாப்பில் உள்ள டாஸ்க்பாரின் வலது பக்க மூலையில் அமர்ந்துவிடும். இவ்வாறு தேவையில்லாத மென்பொருள்கள் நமது கம் யூட்டர் பூட் ஆகும் போது விண்டோஸ் ஆப்பரேட்டிங் சிஸ்டத்தோடு லோடு ஆவதால் கணிணி பூட் ஆவதற்கு அதிக நேரம் எடுத்துக்கொள்ளும். இதனை எவ்வாறு தவிர்க்கலாம் என இப்போது காணலாம்.

முதலில் டெஸ்க்டாப்பிலுள்ள ஸ்டார்ட் பட்டனை கிளிக் செய்து ரன் ஆபஷனை தேர்வு செய்யுங்கள். அதில் msconfig என தட்டச்சு செய்து ஓ.கே. கொடுங்கள்.




இப்போது உங்களுக்கு கீழ்கண்ட விண்டோ ஓப்பன் ஆகும். இதில் ஆறாவது காலத்தில் உள்ள Startup கிளிக் செய்யுங்கள்.

உங்களுக்கு கீழ்கண்ட விண்டோ ஓப்பன் ஆகும். இப்போது வரும் Startup விண்டோவில் உங்களுக்கு எந்த மென்பொருள் விண்டோ ஆப்பரேட்டிங் சிஸ்டம் லோடு ஆக வேண்டுமோ அதை மட்டும் வைத்துக்கொண்டு மற்றதை Disenable செய்து விடுங்கள்.

Apply செய்து ஓ.கே. கொடுங்கள்.

# குரல் அடிப்படையிலமைந்த புதிய தொலைபேசி BlackBerry 10



செப்பேசி உலகில் பல மாற்றங்களை நாம் சந்தித்து வருகிறோம். புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய வித்தியாசமான, பயன்மிக்க பல Android இயங்குதளங்களை அடிப்படையில் அமைந்த பல புதிய செல்பேசிகளை நாம் கண்டு வருகிறோம். அந்த வகையில் டீடயஉமடிநசசல நிறுவனம் தனது Blackberry 10 Mobile அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த Blackberry 10 பதிப்பு மொபைலில் குரல் அடிப்படையிலான பயன்பாடு அமைக்கப்பட்டுள்ளது. அதாவது நம்முடைய பேச்சை உணர்ந்து அதற்கு தகுந்தாற் போல் இந்த செல்பேசி செயல்படும். நமது பேச்சின் வழியாக கட்டளைகளை இடும்போது அதைப் புரிந்துக்கொண்டு இந்த செல்பேசி செயலபடும். இந்த தொழில்நுட்பத்திற்கு பேச்சுணரி பயன்படுகிறது.

Apple Mobile களில் உள்ள Audio வைப்போன்றதொரு ஒலி நயத்துடன் கூடிய ஆடியோ அமைப்பும் இதில் அமைந்திருப்பது சிறப்பு.

# IP Address என்றால் என்ன?

172 . 16 . 254 . 1

10101100.00010000.11111110.00000001

ஒரு கணினி வலையமைப்பில் அல்லது இணையத்தில் இணைத் திருக்கும் ஒவ்வொரு கணினியும் ஒரு இலக்கத்தைக் கொண்டிருக்கும். அந்த இலக்கத்தை வைத்தே ஒவ்வொரு கணினியும் இனங் காணப்படுகின்றன இதனையே ( IP Address ) ஐபி முகவரி எனப்படுகிறது. இங்கு ஜீ என்பது Internet protocol எனபதைக் குறிக்கிறது.


அந்த இலக்கம் ஒரு வலையமைப்பில் அந்த குறிப்பிட்ட ஒரு கணினியை மட்டுமே குறித்து நிற்கும். இன்னொரு கணினிக்கு அதே இலக்கம் வழங்கப் பட மாட்டது.. இதனை ஆங்கிலத்தில் uniqueness எனப்படுகிறது.

இணையத்தில் இணையும் ஒவ்வொரு முறையும் எமது கணினிக்கு இந்த ஐபி முகவரியை இணைய சேவை வழங்கும் நிறுவனம் வழங்குகிறது.. இது ஒரு தற்காலிகமான ஐபி முகவரியே. அடுத்த முறை இணையத்தில் இணையும் போது வேறொரு ஐபி முகவரியே நமக்குக் கிடைக்கும், இதனை டைனமிக் ஐபி முகவரி (Dynamic) எனப்படும். அதேவேளை இணையத்தில் நிரந்தரமாக இணைந்துள்ள சேர்வர் கணினிகள் ஒரு நிலையான (Static) ஐபி முகவரியைக் கொண்டிருக்கும்.

ஒரு ஐபி முகவரி 216.27.61.137 எனும் வடிவத்தில் இருக்கும். இது நான்கு பகுதிகளைக் கொண்டிருக்கும். ஒரு புள்ளி கொண்டு இந்த நான்கு பகுதிகளும் பிரிக்கப்படிருக்கும். ஒவ்வொரு பகுதியும் 0 முதல் 255 வரையிலான ஒரு இலக்கமாக இருக்கும்.

ஐபி முகவரிகள் நமது வசதிக்காக தசம் எண்களினாலேயே குறிக்கப்படுவது வழக்கம். எனினும் கணினி இந்த இலக்கங்களை பைனரி வடிவத்திலேயே புரிந்து கொள்கிறது, மேலுள்ள ஐபி முகவரி 11011000.00011011.00111101.10001001 எனும் பைனரி வடிவைப் பெறும். ஐபி முகவரியிலுள்ளா இந்த நான்கு பிரிவுகளையும் ஒரு ஒக்டட் (Octets) எனப்படும்.

பைனரி எண் வடிவில் ஒவ்வொரு இலக்கமும் 8 இடங்களைக் கொண்டிருப்பதால் இவ்வாறு அழைக்கப்படுகின்றன. இவ்வாறு ஒவ்வொரு எட்டு இலக்கங்களினதும் கூட்டுத் தொகையாக 32 எனும் இலக் கம் கிடைக்கிறது. இதனாலேயே ஐபி முகவரிகள் 32 பிட் எண் எனக் கருதப்படுகின்றன. இந்த ஒவ்வொரு எட்டு இலக் கமும் 0 அல்லது 1 எனும் இரு வேறு நிலைகளைக் கொண் டிருக்க முடியுமாதலால் எட்டு இலக்கங்கள் கொண்ட ஒவ் வொரு ஒக்டட் கொண்டும் 28 = 256 வெவ்வேறான சேர்மானங்களை உருவாக்கலாம். எனவே ஒவ்வொரு ஒக்டட்டும் 0 முதல் 255 வரையிலான இலக் கங்களைக் கொண்டிருக்க முடியும். இவ்வாறு நான்கு ஒக்டட் சேரும் போது 232 அல்லது 4,294,967, 296 வெவ்வேறான் சேர்மானங்களை அல்லது இலக் கங்களைக் உருவாக் கலாம். அதாவாது இந்த முறையினை உபயோகித்து உலகிலுள்ள 4.3 பில்லியன் கணினிகளுக்கு வெவ் வேறான ஐபி முகவரிகளை வழங்கி விடலாம்.




# நம் கணினி வேகமாக இயங்க வேண்டுமா?

நம் கணினி மெதுவாக இயங்குவதற்கு முக்கிய காரணம்.நாம் கணினியில் பதிந்திருக்கும் ஹார்டுவர்கள், மென்பொருட்களை அப்டேட் செய்யாமல் தொடர்ச்சியாக பயன்படுத்துவது தான்.அந்த மென்பொருட்கள் அப்டேட் எச்சரிக்கையை கணினியின் திரையில் காட்டினாலும் நாம் அதை ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ளாமல் தொடர்ந்து கணினியை பயன்படுத்துவோம். அப்படி பயன்படுத்தும் போது ஒரு முக்கியமான வேலைகளை செய்யும் நேரங்களில் கணினி மக்கர் செய்யும். அப்போது தான் நாம் யோசிப்போம்.அப்படி வந்த பிறகு யோசிப்பதை விட அவ்வப்போது அப்டேட் செய்தால் இந்த பிரச்ச னையே தேவையில்லை.

அதற்கு இரண்டு இலவச மென்பொருட்கள் உள்ளன. அதை நம் கணினியில் நிறுவி விட்டு இயக்கினால் எந்தெந்த ஹார்டுவர்கள், மென்பொருட்களை அப்டேட் செய்ய வேண்டும் என்று காட்டி கொடுக்கும் உடனே நாம் அப்டேட் செய்து விட வேண்டியது தான். இதை நாம் அவ்வப்போது செய்யும் போது கணினி இயங்கும் வேகம் சிறப்பாக இருக்கும்.

மென்பொருட்களை அப்டேட் செய்யும் மென்பொருளின் தரவிறக்க முகவரி : http://www.filehippo.com/update-checker/FHSetup.exe, ஹார்டுவர்களை அப்டேட் செய்யும் மென்பொருளின் தரவிறக்க முகவரி : http://www.radar-sync.com/downloaditem.aspx?locid=654684

தனது பயனாளர்கள் இலகுவான முறையில் பயன்படுத்தக்கூடியவாறு, தன்னுடைய சேவைகளை ஊாசழஅந Web Store-லும் கூகுள் அறிமுகப்படுத்தி உள்ளது.



# Chrome Web Store-லும் கூகுளின் சேவை

கூகுள் நிறுவனமானது அண்மையில் அறிமுகப்படுத்திய Chrome OS மற்றும் Chromebook note-books ஆகியவற்றில் பயன்படுத்தக்கூடியவாறு Google Drive> Document> Spreadsheet மற்றும் Presentation போன்றவற்றிற்கான யீடஉையவழைெகளை Chrome Web Store- இலும் அறிமுகப்படுத்தியுள்ளது.

இப்புதிய வசதி மூலம் புதிய Document-களை உருவாக்கி கொள்ளவும முடியும்.

எதிரிகள் தங்களைச் சுற்றி வளைத்துக்கொண்டு விடப் போகிறார்களே என்று பயந்து ஃப்ரடெரிக் தன் ஆட்கள் கலைந்துவிடலாம் என்று உத்தரவிட்டான். எல்லோரும் ஓடி விடுவதுதான் நல்லது என்றான். அடுத்த நிமிடமே கோழை மனிதர்கள் விழுந்தடித்துக்கொண்டு தலைதெறிக்க ஓடினார்கள். வயல் கோடிவரையில் அவர்களைத் துரத்திக் கொண்டு ஓடின விலங்குகள். முள்வேலிகளைத் தாண்டிக் குதிக்க மனிதர்கள் முயன்று கொண்டிருந்தபோது நாலு உதை கொடுத்து அவர்களை வழியனுப்பிவிட்டு வந்தன விலங்குகள்.

மிருகங்கள் யுத்தத்தில் வெற்றி பெற்றுவிட்டன. ஆனால் அவற்றின் உடலெல்லாம் ரத்தம் வழிந்தோடிக் கொண்டிருந்தது. மிகவும் களைப் படைந்துவிட்டன. நொண்டி நொண்டிக் கொண்டே அவை பண்ணை வீட்டு முன் முற்றத்திற்கு வந்தன. யுத்த களத்தில் இறந்து கிடந்த தங்கள் தோழர்களைப் பார்த்தும் கண்ணீர் விட்டன. காற்றாடிக் கட்டிடம் நின்ற இடத்தில் துயரம் நிறைந்த உள்ளத்துடன் சிறிதுநேரம் மௌ-




னமாக நின்றன. சொல்வதற்கு எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை.

ஆமாம்! காற்றாடிக் கட்டிடம் போய்விட்டது. அது இருந்த இடமே தெரியாமற் போய்விட்டது. அவர்கள் பாடுபட்டதின் சின்னமே தெரியாமற் போய்விட்டது. அத்திபாரம் கூடப் பெயர்ந்துவிட்டது. இந்தத் தடவை பழைய கற்களைக் கூட காணமுடியவில்லை. மீண்டும் கட்டிடத்தை எழுப்ப மறுபடியும் அவற்றை உபயோகப்படுத்த முடியாது. நூறு இருநூறு அடி தூரத்திற்கு கற்கள் நெரிந்துபோய் பொடிப்பொடியாகி உதிர்ந்து கிடந்தன.

காற்றாடி யந்திரக் கட்டிடம் என்று ஒன்று அங்கிருந்த அறிகுறியே தெரியவில்லை. பண்ணைக் கட்டிடங்களை அணுகியபோது யுத்தத்தின் போது எங்கேயோ மாயமாக மறைந்து, யார் கண்ணிலும் படாமற்போய்விட்ட ஸ்க்வீலர் விலங்குகளை எதிர்கொண்டழைக்க குதித்துக் குதித்து ஓடி வந்தது. அதன் முகத்திலே மகிழ்ச்சியும் ஆனந்தமும் தாண்டவமாடின. பண்ணைக் கொடிமர மூலையிலிருந்து வேட்டுச் சப்தம் மிருகங்கள் காதில் விழுந்தது.

எதற்காக வெடி வைக்கிறார்கள்? என்று கேட்டது பாக்ஸர். "நமது வெற்றியைக் கொண்டாடுவதற்காக?" என்றது ஸ்க்வீலர் பன்றி.

என்ன வெற்றி? என்று கேட்டது பாக்ஸர். அதன் முழங்கால்களிலிருந்து ரத் தம் ஒழுகிக்கொண்டிருந்தது. அதன் லாடங்களில் ஒன்று பெயர்ந்து விட் டது. கால் குளம்பு ஒன்று உடைந்து வலித்தது. பின்னங்கால்களில் அரை டஜன் குண்டுத் துணுக்குகள் வேறு புகுந்துகொண்டு தொல்லைகள் தந்தன.


தோழரே! என்ன வெற்றியா?

எதிரிகளை நமது மண்ணிலிருந்து விரட்டி ஓட்டவில்லையா நாம்? விலங்குப் பண்ணையின் மண் புனிதமானது அல்லவா?

காற்றாடி யந்திர அஸ்திவாரத்தையே தகர்த்துவிட்டார்களே அவர்கள். இரண்டு வருடங்கள் கஷ்டப்பட்டோமே அதை நிர்மாணிக்க?, என்று பாக்ஸர் சொன்னது.

(நாளை)


## எலக்ரோ காடியோ கிராப் (ECG)




இருதயத் தசைகளில் மின் செயல்பாட்டை பதிவு செய்யும் நுட்பமான கருவி. சகஜ நிலையிலுள்ள இருதயத் தசைகளில் அடிப்பு குறிப்பிட்ட அளவிலும் உருவிலும் இருக்கும். நோய் காரணமாகத் தசைகள் சரியாக இயங்காதபோது இதில் மாற்றம் தெரியும். இதைக் கொண்டு இருதயம் ஏன் சரியாகத் துடிக்கவில்லை என்பதைத் தெரிந்து கொள்ள முடியும்.

ECG பதிவு செய்யும் கருவியின் முனையில் எலக்டோட்கள் உள்ள பல வயர்கள் இருக்கும். எலக்டோட்களை சருமத்தில் பதிய வைப்பார்கள். இருதயத்தைச் சுற்றி நான்கு இடங்களில் மின் செயல்பாட்டில் உள்ள நுண்ணிய மாற்றங்களை அவை உணரும். இந்த மின் துடிப்புகள் பெரிதுபடுத்தப்பட்டு நகரும். பேனா போன்ற கருவியால் வரைபடமாக காகிதத்தில் பதிவாகும். சில கருவிகள் இதைக் காந்த நாடாவில் பதிவு செய்கின்றன. இந்த வரைபடத்தைக் கொண்டு இதயத்தின் நிலையை மருத்துவர்கள் அறிந்துகொள்கிறார்கள்.

## எலக்ட்ரோ என்கியாலோ கிராப் (EEG)



மூளையிலுள்ள நரம்பு செல்களிலிருந்து வரும் மின் துடிப்புகளைப் பதிவு செய்யும் கருவி. மூளையின் மின் செயல்பாட்டை இது காட்டுகிறது. சாதாரண EEG, 10 முதல் 12 ஹெர்ட்ஸ் அலை வேகம் கொண்டதாக இருக்கும். இவை ஆல்ஃபா அலைகள் எனப்படும். ஒருவர் ஓய்வாக இருக்கும்போது ஆல்ஃபா அலைகள் சகஜமான அளவில் இருக்கும். மனதை ஒருமுகப்படுத்திச் சிந்திக்கும்போது குறையும். தூங்கும்போதும் நினைவிழந்திருக்கும் போதும் மேலும் குறையும். மூளையிலுள்ள நரம்பு செல்களில் இந்த அலைகள் தோன்றுகின்றன. தலையில் அடிபட்டு இந்த நரம்பு செல்கள் பாதிக்கப்பட்டால் EEG மாறிவிடும். போதிய பிராண வாயு கிடைக்காத போதும் இப்படி ஏற்படும். மூளைக் கட்டிகள் இருக்கும் இடத்தையறிய இந்த தொழில்நுட்ப முறை உதவுகிறது.



# தமிழர்களின் 12 வகை உணவுப் பழக்கம்




உணவு விஷயத்தில் தமிழர்களின் ரசனையே தனி.. முற் காலத்திலிருந்தே நம்மிடம் 12 வகையான உனவுப் பழக்கங்கள் இருந்திருக்கின்றன.

1 . அருந்துதல் -- மிகக் கொஞ்சமாக சாப்பிடுவது.
2 . உண்ணல் -- பசி தீர சாப்பிடுவது.
3 . உறிஞ்சுதல் -- நீர் கலந்த உணவை ஈர்த்து உண்ணுதல்.
4 . குடித்தல் -- நீரான உணவை பசி நீங்க உறிஞ்சி உட்கொள்ளுதல்.
5 . தின்னல் -- பண்டங்களை மெதுவாக கடித்துச் சாப்பிடுதல்.
6 . துய்த்தல் -- உணவை ரசித்து மகிழய்ந்து உண்ணுதல்.
7 . நக்கல் -- நாக்கினால் துழாவித் துழாவி உட்கொள்ளுதல்.
8 . பருகல் -- நீர் கலந்த பண்டத்தை கொஞ்சம் குடிப்பது.
9 . மாந்தல் -- ரொம்பப் பசியால் மடமடவென்று உட்கொள்ளுதல்.
10 .கடித்தல் -- கடினமான உனவுப் பொருளை கடித்தே உண்ணுதல்.
11. விழுங்கல் -- வாயில் வைத்து அரைக்காமல் அப்படியே உள்ளே தள்ளுவது.
12. முழுங்கல் -- முழுவதையும் ஒரே வாயில் போட்டு உண்பது.



# சிறுவர் அமுதம்

## வண்ணத்துப் பூச்சி



வண்ண, வண்ண பூச்சி
வண்ணத்துப் பூச்சி
அழகழகாய் நிறங்கள்
பல பலவாய் சித்திரங்கள்
மேனியெல்லாம்
வரைந்து
என்னை மயக்கும்
வண்ணத்துப் பூச்சி
எங்கள் வீட்டு றோசாவில்
வந்தமரும்,
நான் பிடிக்கப் போனால்
சட்டென்று பறக்கும்
பார்க்க பார்க்க அழகு
எனக்கு
பிடித்து வைக்க ஆசை

## புதிர்க் கணக்கு

புதிர்க் கணக்குல எத்தனை பெரிய எண்ணையும் 5ஆல் ஒரே வரியில் வகுக்க முடியும்.

**உதாரணம்:** 123456789 என்ற எண்ணை தேர்வு செய்துள்ளீர்கள் என்று வைத்துக்கொள்வோம். இப்போ இந்த எண்ணை 5ஆல் வகுக்க வேண்டும். என்ன. செய்வது?

தேர்வு செய்த எண்னை 2 ஆல் பெருக்க வேண்டும். 123456789 x 2 = 246913578 என்று வரும். கடைசி இலக்க எண்ணுக்கு முன்னர் தசம குறியீடு போட வேண்டும்..

**விடை. 24691357.8.**

இதே போல் எந்த எண்ணாக இருந்தாலும் 2 ஆல் பெருக்கி வரும் விடையின் கடைசி எண்ணுக்கு முன்னர் தசம குறியீடு (புள்ளி) போட வேண்டும்.

சுடோக்கு எண் 82 விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 8 | 3 | 2 | 5 | 4 | 1 | 7 | 9 |
| 9 | 2 | 7 | 8 | 3 | 1 | 4 | 6 | 5 |
| 4 | 5 | 1 | 9 | 6 | 7 | 2 | 8 | 3 |
| 5 | 4 | 8 | 3 | 1 | 9 | 7 | 2 | 6 |
| 3 | 7 | 9 | 6 | 2 | 8 | 5 | 1 | 4 |
| 1 | 6 | 2 | 4 | 7 | 5 | 3 | 9 | 8 |
| 7 | 3 | 4 | 1 | 9 | 6 | 8 | 5 | 2 |
| 2 | 1 | 6 | 5 | 8 | 3 | 9 | 4 | 7 |
| 8 | 9 | 5 | 7 | 4 | 2 | 6 | 3 | 1 |

சுடோக்கு எண் 83

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 9 | | | | | | 4 |
| | | 1 | 3 | | 6 | | | |
| 6 | | 7 | | 5 | | | | 1 |
| 1 | | 6 | 2 | | | | 4 | |
| 5 | | | | | | | | 7 |
| | 4 | | | | 5 | 3 | | 6 |
| 3 | | | | 8 | | 4 | | 9 |
| | | | 5 | | 7 | 8 | | |
| 7 | | | | | | 5 | | |

# தொழில் நுட்பவியல் கல்லூரிகளின்/ தொழில் நுட்பக் கல்லூரிகளின் பெயர்ப்பட்டியல்

தொடர் தொழில்நுட்பவியல் கல்லூரிகள்/ விலாசம் மாவட்டம்
இல. தொழில்நுட்பக் கல்லூரிகள்

1. இலங்கை தொழில் நுட்பவியல் கல்லூரி ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10. கொழும்பு
2. காலி தொழில் நுட்பவியல் கல்லூரி களுவெல்ல, காலி காலி
3. கண்டி தொழில் நுட்பவியல் கல்லூரி அறுப்பொல, கண்டி கண்டி
4. யாழ்ப்பாணம் தொழில் நுட்பவியல் கல்லூரி பிறவுண் வீதி, யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம்
5. பதுளை தொழில் நுட்பவியல் கல்லூரி கிறீன்லண்ட்டிரைவ், பதுளை பதுளை
6. அநுராதபுரம் தொழில் நுட்பவியல் கல்லூரி புதிய நகரம், அநுராதபுரம் அநுராதபுரம்
7. குருநாகல் தொழில் நுட்பவியல் கல்லூரி புத்தளம் வீதி, குருநாகல் குருநாகல்
8. அம்பாறை ஹாடி தொழில் நுட்பவியல் இங்கினியாகல வீதி, அம்பாறை அம்பாறை கல்லூரி
9. இரத்தினபுரி தொழில் நுட்பவியல் கல்லூரி பாம் தோட்டம், கொழும்பு வீதி, இரத்தினபுரி

**இரத்தினபுரி**

10. கேகாலை தொழில் நுட்பக் கல்லூரி கச்சேரி வீதி, கேகாலை கேகாலை
11. இரத்மலானை தொழில் நுட்பக் கல்லூரி காலி வீதி, இரத்மலானை கொழும்பு
12. மாத்தறை தொழில் நுட்பக் கல்லூரி மெத்தவத்தை, மாத்தறை மாத்தறை
13. சம்மாந்துறை தொழில் நுட்பக் கல்லூரி அம்பாறை வீதி, சம்மாந்துறை அம்பாறை
14. களுத்துறை தொழில் நுட்பக் கல்லூரி களமுல்ல, களுத்துறை களுத்துறை
15. வறக்காப்பொலை தொழில் நுட்பக் கல்லூரி அம்பகல வீதி, வறக்காப்பொல கேகாலை
16. குளியாப்பிட்டிய தொழில் நுட்பக் கல்லூரி பன்னலவீதி, குளியாப்பிட்டிய குருநாகல்
17. பாத்ததும்பறை தொழில் நுட்பக் கல்லூரி நவயாலதென்ன, கடுகஸ்தொட்ட கண்டி
18. நுவரெலியா தொழில் நுட்பக் கல்லூரி ஜயதிலக்க மாவத்தை, நுவரெலியா நுவரெலியா
19. ஹோமாகம தொழில் நுட்பக் கல்லூரி கொடகம, ஹோமாகம கொழும்பு
20. பெலியத்தை தொழில் நுட்பக் கல்லூரி புவக்தண்டவ, பெலியத்த ஹம்பாந்தோட்டை
21. ஹசலக தொழில் நுட்பக் கல்லூரி யோத எல வீதி, ஹசலக கண்டி
22. தம்புள்ளை தொழில் நுட்பக் கல்லூரி மாத்தளை வீதி, தம்புள்ள மாத்தளை
23. பலப்பிட்டிய தொழில் நுட்பக் கல்லூரி வந்ததுவ புகையிரத நிலைய வீதி, காலி

**பலப்பிட்டிய**

24. வாரியப்பொல தொழில் நுட்பக் கல்லூரி சிலாபம் வீதி, வாரியப்பொலை குருநாகல்
25. மட்டக்களப்பு தொழில் நுட்பக் கல்லூரி மஞ்சந்தொடுவாய், மட்டக்களப்பு மட்டக்களப்பு
26. பண்டாரவளை தொழில் நுட்பக் கல்லூரி வேவதென்ன, பண்டாரவளை பதுளை
27. மொனராகலை தொழில் நுட்பக் கல்லூரி சிறிகல, மொனராகலை மொனராகலை
28. கம்பஹா தொழில் நுட்பக் கல்லூரி வெரலவத்தை, யக்கலை கம்பஹா
29. திருகோணமலை தொழில் நுட்பக் கல்லூரி மிஹிந்தபுரம், திருகோணமலை திருகோணமலை
30. தெஹியத்தகண்டிய தொழில் நுட்பக் கல்லூரி மஹாவானவெல, தெஹியத்தகண்டிய அம்பாறை
31. மாத்தளை தொழில் நுட்பக் கல்லூரி எம். சீ. வீதி, மாத்தளை மாத்தளை
32. வீரவில தொழில் நுட்பக் கல்லூரி புதிய நகரம், வீரவிலை ஹம்பாந்தோட்டை
33. மெதகம தொழில் நுட்பக் கல்லூரி மெதகம மொனராகலை
34. பொலன்னறுவை தொழில் நுட்பக் கல்லூரி வித்தியாபுரம், பொலன்னறுவை பொலன்னறுவை
35. எம்பிலிப்பிட்டிய தொழில் நுட்பக் கல்லூரி புதிய நகரம், எம்பிலிப்பிட்டிய இரத்தினபுரி
36. வவுனியா தொழில் நுட்பக் கல்லூரி மன்னார் வீதி, வவுனியா வவுனியா
37. அக்கறைப்பற்று தொழில் நுட்பக் கல்லூரி *கீழே குறிப்பிடப்பட்டுள்ள குறிப்கை அம்பாறைபார்க்க
38. ஆணமடுவ தொழில் நுட்பக் கல்லூரி கம்முதா பூமி, தம்மண்ணகம, புத்தளம் ஆணமடுவ

* அக்கரைப்பற்று தொழில்நுட்பக் கல்லூரிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை “அதிபர், சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரி, அம்பாறை வீதி, சம்மாந்துறை”” என்ற விலாசத்துக்கு அனுப்புக.

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

இளைஞர் அலுவல்கள், திறன்கள் அபிவிருத்தி அமைச்சு
தொழில்நுட்பக் கல்வி பயிற்சி திணைக்களம்
தொழில்நுட்பவியல் கல்லூரிகளில்/ தொழில்நுட்பக் கல்லூரிகளில் நடத்தப்படும் கற்கைநெறிகளுக்கு மாணவர்களை அனுமதித்தல் - கல்வியாண்டு 2013
(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)
(விண்ணப்பங்கள் குறிப்பிட்ட தொழில்நுட்பக் கல்லூரியின்/ தொழில்நுட்பவியல் கல்லூரியின் பணிப்பாளர்/ அதிபருக்கு அனுப்பப்படல் வேண்டும். தொழில்நுட்பவியல் கல்லூரிகளின்/ தொழில்நுட்பக் கல்லூரிகளின்

**முகவரிகள்**

தொழில்நுட்பவியல் கல்லூரிகளின்/ தொழில்நுட்பக் கல்லூரிகளின் பெயர்ப்பட்டியலில் உள்ளன.)
(ஒவ்வொரு கற்கை நெறிக்கும் வெவ்வேறாக விண்ணப்பித்தல் வேண்டும்.)

1. தொழில்நுட்பவியல் கல்லூரி/ தொழில்நுட்பக் கல்லூரியின் பெயர் :..............................
2. விண்ணப்பிக்கும் கற்கைநெறியின் பெயர் :.............................. (முழு நேரம் பகல்/ மாலை/ பகுதி நேரம்)
போதனா மொழி :.............................. குறியீட்டு இல. :..............................
3. முதலெழுத்துக்களுடன் விண்ணப்பதாரியின் பெயர் :..............................
4. முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் :..............................
5. நிரந்தர முகவரி :..............................
6. தொலைபேசி இல. :.............................. மின்-அஞ்சல் முகவரி :..............................
7. தேசிய அடையாள அட்டை இலக்கம் :..............................
8. மாவட்டம் :.............................. தேர்தல் தொகுதி :..............................
கிராம அலுவலர் பிரிவு :..............................
9. பிறந்த திகதி :..............................
2013.01.01 ஆந் திகதியன்று வயது :..............................
வருடங்கள் :.............................., மாதங்கள் :.............................., நாட்கள் :..............................
10. ஆண்/ பெண் :..............................
11. கல்வித் தகைமைகள் :
(அ) க.பொ. த. (சா/ த) பெறுபேறுகள் (இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல்) :-
சுட்டிலக்கம் வருடம் பாடங்கள் தரம்
(ஆ) க. பொ. த. (உ/ த) பெறுபேறுகள் (ஒரே தடவையில்) :-
சுட்டிலக்கம் வருடம் பாடங்கள் தரம்
(இ) க. பொ. த. (உ/ த) பரீட்சைக்குத் தோற்றிய தடவைகள் :----.
(ஈ) விண்ணபதாரர் மேலே (அ) வில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைக் கொண்டிராவிடின் சித்தியடைந்த உயர் தரம்/ ஆண்டு
தரம் :.............................. வருடம் :..............................
12. மாலை நேர மற்றும் பகுதி நேர கற்கை நெறிகளுக்கு மட்டும்.-
தொழில் ஒரு தகைமையாகவுள்ள பயிற்சிநெறிகளுக்கு மட்டும் இப்பகுதி பூர்த்தி செய்யப்பட வேண்டும்.
12.1 விண்ணப்பதாரரின் பெயர் :..............................
‘12.2 தற்போது வகிக்கும் பதவி மற்றும் அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :-----.
சுயதொழில் புரிபவராயின் வேலையின் தன்மை :..............................
12.3 வேலை செய்யும் இடமும் அதன் முகவரியும் :..............................
12.4 ஊழியர் சேமலாப நிதி இலக்கம் (EPF) :..............................
ஊழியர் நம்பிக்கை நிதிய இலக்கம் (ETF):..............................
மேலே குறிப்பிடப்பட்ட விண்ணப்பதாரர் எனது நிறுவனத்தில்/ அலுவலகத்தில் தொழில் புரிபவர் என நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.
12.5 தொழில் தருநரின் பெயர் :..............................
12.6 பதவி :..............................
12.7 கையொப்பம் :...................... அலுவலக முத்திரை :......................
12.8 திகதி :..............................
13. விண்ணப்பதாரரின் உறுதியுரை :
இப்படிவத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கு உட்பட்ட வரையில் உண்மையானவை என்றும் விண்ணப்பித்துள்ள பயிற்சி நெறிக்கு வேண்டிய தகைமைகள் எனக்கு உண்டு என்றும் இத்தால் உறுதியுரைக்கிறேன். மேலும் தொழில்நுட்பக் கல்லூரிக்கு / தொழில்நுட்பவியல் கல்லூரிக்கு மாணவர்களைத் தெரிவு செய்யும் திட்டத்திற்கு இணங்குவேன் என்றும் தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினது முடிவே இறுதியானது எனவும் ஏற்றுக்கொள்கின்றேன்.

**விண்ணப்பதாரியின் கையொப்பம்**

திகதி :..............................
ரூபா 10 பெறுமதியான முத்திரையை ஒட்டி அதன்மேல் கையொப்பமிட்டு பெறுமதி நீக்கம் செய்யவும்.
தொழில்நுட்பவியல் கல்லூரிகளில்ஃ தொழில்நுட்பக் கல்லூரிகளில் நடாத்தப்படும் கற்கை நெறிகளின்

# 13 ஆவது திருத்தத்தை இரத்து செய்ய அணி திரளும் அரச கட்சிகள்

13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை இரத்துச் செய்வதற்கு அரசியல் அங்கம் வகிக்கும் கட்சிகள் அணி திரளுகின்றன. தேசிய சுதந்திர முன்னணி இந்த நடவடிக்கைக்கு தலைமை தாங்கி களத்தில் இறங்கியுள்ளது.

எதிர்வரும் 31 ஆம் திகதி நடைபெறவுள்ள அமைச்சரவை கூட்டத்தில் 13 ஆவது அரசியல் அமைப்பு திருத்தத்தை ரத்து செய்யும் ஆலோசனையை முன்னெடுக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதை அமைச்சர் தினேஸ் குணவர்தன உறுதிப்படத் தெரிவித்தார்.

தேசிய சுதந்திரம் முன்னணி, ஜாதிக ஹெல உறுமய, மக்கள் ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகள் 13 ஆவது அரசியல் அமைப்பு திருத்தத்தை ரத்துச் செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருப்பதுடன் இதற்கு வலுச் சேர்க்கும் விதத்தில் இதே கருத்தைக்கொண்டுள்ள ஏனைய கட்சிகள் அமைப்புக்களை ஒன்றிணைத்துக் கொள்ளவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

# கிராம மட்டத்தில் அதிகாரப் பகிர்வு மேற்கொள்ளப்பட வேண்டும்

## திஸ்ஸ விதாரண

கிராம மட்டத்தில் அதிகாரப் பகிர்வு மேற்கொள்ளப்பட வேண்டுமென சிரேஸ்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

மஹிந்த சிந்தனையின் அடிப்படையில் மாகாணசபை முறைமை அமுல்படுத்துவது மட்டுமன்றி வடக்கில் மாகாணசபை நிறுவப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

13ஆம் திருத்தச் சட்டத்தில் சில குறைபாடுகள் காணப்படுவதனை ஏற்றுக் கொள்கின்றோம்.

அவற்றைத் திருத்திக் கொண்டு காத்திரமான ஓர் அதிகாரப் பகிர்வினை மேற்கொள்ள வேண்டும். 1983ஆம் ஆண்டில் தேசியப் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு சில ஆயுதக் குழுக்கள் உருவாகியிருந்தன.

1987ஆம் ஆண்டு மாகாணசபை முறைமை அறிமுகம் செய்யப்பட்டதனைத் தொடர்ந்து பல ஆயுதக் குழுக்கள் அரசியல் நீரோட்டத்தில் இணைந்து கொண்டன.

எஞ்சியுள்ள விடுதலைப் புலிகள் தமிழ் மக்களை பிழையாக வழிநடத்த 13ஆம் திருத்தச் சட்டத்தைப் பயன்படுத்திக்கொள்ளக் கூடும்.

13ஆம் திருத்தச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டுமென ஒன்றிரண்டு கட்சிகள் கோரிய போதிலும் அரசர்ங்கத்தின் நிலைப்பாடு அதுவல்ல.பாதுகாப்புச் செயலாளர் 13ஆம் திருத்தச் சட்ட மூலம் தொடர்பில் வெளியிட்ட கருத்துக்கள் தொடர் பில் எதனையும் கூற விரும்ப வில்லை.

தனிப்பட்ட நபர்களின் கருத்துக்களுக்கு பதிலளிக்கப் போவதில்லை. அரசாங்கம் என்ற ரீதியில் 13ம் திருத்தச் சட்டம் தொடர்பிலான நிலைப்பாடு மாறுபட்டே காணப்படுகின்றது. ஜனாதிபதியுடன் ஆளும் கட்சி உறுப்பினர்கள் இணைந்து எடுக் கும் தீர்மானங்களே அரசாங்கத் தீர்மானங்களாக கருதப்பட வேண்டும்.

வடக்கில் மாகாணசபைத் தேர்தல் நடத்தி மாகாணசபை ஆட்சியை நிறுவ வேண்டும்.

இதனையே ஜனநாயக அரசியலாகக் கருதப்பட வேண்டுமென திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

# மன்னார் நீதிமன்றத் தாக்குதல்: 6 பேர் தொடர்ந்தும் விளக்கமறியலில்

மன்னார் நீதிமன்றத் தாக்குதல் தொடர்பாக கைது செய்யப்பட்ட 43 பேரில் முதல்தடவையாக 6 பேர் மேல் நீதிமன்றத்தாலும் 11 பேர் மன்னார் மாவட்ட நீதிமன்றத்தாலும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். மிகுதி 26 பேரின் வழக்கு விசாரணைகள் இன்று மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்ற போது 6 பேரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. 26 பேரின் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது இதில் 20 பேருக்கும் தலா ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப்பிணையிலும் பத்தாயிரம் ரூபா ரொக்கப்பிணையிலும் விடுவித்ததுடன் இவர்களை வாரத்தில் ஒரு முறை மன்னார் மாவட்ட பொலிஸ் நிலையத்திற்கு சென்று கையொப்பமிடுமாறும் உத்தரவிட்டார். எஞ்சிய ஆறு பேரையும் எதிர்வரும் நவம்பர் மாதம் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிடப்பட்டது. இந்த வழக்கு விசாரணை எதிர்வரும் நவம்பர் மாதம் 15ஆம் திகதி மீண்டும் எடுத்துக்கொள்ளப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவை தாக்கியது சாண்டி புயல் 6 கோடி பேர் பாதிப்பு – தேர்தல் பிரசாரம் ரத்து

அமெரிக்காவுக்கு அண்மையில் கரிபியன் கடல் பகுதியில் சில நாட்களுக்கு முன்பு ஹரிகேன் சாண்டி புயல் உருவானது. இதனால் கரிபியன் கடல் பகுதியில் உள்ள ஜமைக்கா, கியூபா நாடுகளில் சூறாவளியுடன் பலத்த மழை பெய்து வருகிறது.

இந்த புயலுக்கு இந்த இரு நாடுகளிலும் 60 பேர் பலியானார்கள். சாண்டி புயலானது மேலும் தீவிரம் அடைந்து அமெரிக்காவின் கிழக்கு கடற்கரை பகுதி நோக்கி நகர்ந்து வந்தது. அமெரிக்காவின் புளோரிடா, மேரிலாண்ட், மாகாணங்களை தாக்கும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இதையடுத்து இந்த மாகாணங்களில் முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

நேற்று அமெரிக்காவை சாண்டி புயல் தாக்கியது. அப்போது சூறாவளி காற்றுடன் பலத்த மழை பெய்தது. தொடர்ந்து 4 நாட்களுக்கு மழை நீடிக்கும் என்றும் வானிலை மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்த புயலால் அமெரிக்காவின் கிழக்கு கடற்கரை பகுதியில் வசிக்கும் 6 கோடி மக்கள் பாதிக்கப்பட்டு உள்ளனர். வாகன போக்குவரத்து நிறுத்தப்பட்டு உள்ளது. மக்கள் வீடுகளில் முடங்கி கிடக்கிறார்கள். இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.



அமெரிக்காவில் வரும் நவம்பர் மாதம் 6ம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடைபெற உள்ளது. சாண்டி புயல் காரணமாக ஜனாதிபதி தேர்தல் இறுதிக்கட்ட பிரசாரம் பாதிக்கப்பட்டுள்ளது. ஒபாமா இன்று புளோரிடா மாகாணத்தில் பிரசாரம் செய்வதாக இருந்தது.

புயல் எச்சரிக்கையால் அவர் பிரசாரத்தை ரத்து செய்தார். அவர் முன்னாள் ஜனாதிபதி பில்கிளிண்டனுடன் இணைந்து பிரசாரம் செய்வதாக இருந்தார். அந்த பிரசார கூட்டமும் ரத்து செய்யப்பட்டுள்ளது.

இதேபோல் குடியரசு கட்சி வேட்பாளர் மிட்ரோம்னியின் இன்றைய வெர்ஜினியா மாகாண தேர்தல் பிரசார சுற்றுப் பயணமும் ரத்து செய்யப்பட்டது.

இந்த புயல் காரணமாக அமெரிக்காவின் 12 மாநிலங்களில் கன மழை பெய்யும் என்று அறிவிக்கப்பட்டுள்ளதால் இந்த மாநிலங்களில் தேசிய பாதுகாப்பு படையைச் சேர்ந்த 61 ஆயிரம் வீரர்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

# உலக பார்வை

## இத்தாலிய முன்னாள் பிரதமர் ஆட்சியின் போது வரி மோசடி : நான்கு ஆண்டுகள் சிறை



இத்தாலியில் பிரதமராக இருந்த சில்வியோ பெர்லுஸ்கோனி (76), அதிகார துஷ்பிரயோகம் செய்து மோசடியில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டு எழுந்தது. மேலும், இத்தாலியில் பொருளாதார நெருக்கடி ஏற்பட காரணமாக இருந்ததாகவும், தான் சொந்தமாக நடத்தி வரும் மீடியாக்களுக்கு சாதகமாக செயல்பட்டதாகவும் பரபரப்பு புகார் எழுந்தது. இதையடுத்து பெர்லுஸ்கோனி பிரதமர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார். இவர் மீது பல்வேறு பிரிவுகளின் வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கு மிலன் நீதிமன்றத்தில் தொடர்ந்து நடந்து வந்தது.

பெர்லுஸ்கோனி மீதான வழக்குகளை விசாரித்த நீதிமன்றம், இவருக்கு 4 ஆண்டு சிறை தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. அத்துடன், 5 ஆண்டுகள் தேர்தலில் போட்டியிடவும் தடை விதித்தது. இத்தாலி சிறைகளில் நெரிசலை குறைக்கும் நடவடிக்கையாக, கடந்த 2006ம் ஆண்டு குற்றவாளிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கவும், அதன் மூலம் தண்டனை காலத்தை குறைக்கவும் புதிய சட்டம் கொண்டு வரப்பட்டது.

அந்த சட்டத்தின்படி, பெர்லுஸ்கோனிக்கு விதிக்கப்பட்ட 4 ஆண்டு சிறை தண்டனையை ஓராண்டாக நீதிமன்றம் குறைத்து உத்தரவிட்டது.


இந்த தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்யப்படும் என்று பெர்லுஸ்கோனியின் வக்கீல் தெரிவித்துள்ளனர்.

# விமானத்திலிருந்து இறக்கப்பட்டார் கிரிக்கெட் வீரர் இம்ரான்கான்

பாகிஸ்தான் முன்னாள் கிரிக்கெட் வீரர் இம்ரான்கான் தற்போது தெக்ரிக்-இ-இன்சாப் என்ற அரசியல் கட்சியை நடத்தி வருகிறார். அக்கட்சியின் தலைவராக உள்ள இவர், கனடா தலைநகர் டொரண்டோவில் இருந்து நியூயார்க் நகருக்கு விமானத்தில் புறப்பட்டார்.

தனது கட்சி வளர்ச்சி நிதி திரட்ட லாங் ஐலண்ட் சிட்டி நகரில் நடைபெறும் விருந்து மற்றும் சொற்பொழிவில் பங்கேற்க திட்டமிட்டிருந்தார். டொரண்டோவில், நியூயார்க் விமானத்தில் ஏறி அமர்ந்து இருந்த அவரை விமான நிலைய அதிகாரிகள் திடீரென கீழே இறக்கினர். பின்னர் அமெரிக்கா குடியுரிமை அதிகாரிகளிடம் அவரை அழைத்து சென்றனர். அங்கு அவரிடம் அமெரிக்க அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தினார்கள்.

பாகிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகளின் ஆதிக்கம் மிகுந்த வசிகிஸ்தானில் அமெரிக்கா ஆளில்லா விமானங்கள் மூலம் ஏவுகணை தாக்குதல் நடத்தி வருகிறது.



இதற்கு இம்ரான்கான் எதிர்ப்பு தெரிவித்து வருகிறார். அது குறித்து அவரிடம் அமெரிக்க குடியுரிமை அதிகாரிகள் துருவி துருவி விசாரணை நடத்தினார்கள்.


தீவிரவாதிகள் மீதான அமெரிக்காவின் தாக்குதலை எதிர்ப்பது ஏன்? நீங்கள் தலிபான்களை ஆதரிக்கிறீர்களா? என்பன போன்ற சரமாரி கேள்விகளை கேட்டனர். இத்தகவலை இம்ரான் கான் தனது டுவிட்டர் இணைய தளத்தில் தெரிவித்துள்ளார். அதில், பாகிஸ்தானில் அமெரிக்கா தன்னிச்சையாக தாக்குதல் நடத்துவதை ஒரு போதும் ஏற்க முடியாது.

அது மிகப் பெரிய குற்றம், மேலும் பாகிஸ்தானின் இறையாண்மைக்கு எதிரானது என்றும் எனவே அமெரிக்காவின் தாக்குதலை தொடர்ந்து எதிர்ப்பேன் எனவும் தெரிவித்துள்ளார்.



கனடாவில் வருடாந்தம் பனிச்சறுக்கு போட்டி நடைபெற்று வருகிறது. 2012ஆம் நடைபெற்ற போட்டி நிகழ்வொன்றில் ஒரு ஜோடி பனிச்சறுக்கு நடனம் இடம்பெற்றபோது, ஒரு காட்சியினை மேலே காண்கிறீர்கள்.

## பாகிஸ்தானுக்கு மலாலா வருவாள் : தந்தை ஜியாவுதீன் உறுதி!



பாகிஸ்தானில் தீவிரவாதிகளால் சுடப்பட்ட மலாலா மீண்டும் நாடு திரும்புவாள் என்று அவளது தந்தை திட்டவட்டமாக கூறினார். பாகிஸ்தானின் ஸ்வாத் பள்ளத்தாக்கு பகுதியில் வசிப்பவள் மலாலா (14). தலிபான் தீவிரவாதிகளின் ஆதிக்கம் நிறைந்த இந்த பகுதியில், பெண்கள் பள்ளிக்கு செல்ல கூடாது, பொது இடங்களுக்கு ஆண்கள் துணை இல்லாமல் செல்ல கூடாது, உடல் முழுக்க மறைக்கும் உடை அணிய வேண்டும் என்பது உள்பட பல நிபந்தனைகளை விதித்தனர். இதை எதிர்த்து தனது 11வது வயதில் இன்டர்நெட்டில் பல கட்டுரைகளை மலாலா எழுதினாள். பிபிசியிலும் உரை நிகழ்த்தினாள்.

இதனால் ஆத்திரம் அடைந்த தலிபான் தீவிரவாதிகள், கடந்த 9ம் தேதி மலாலா மீது சரமாரியாக துப்பாக்கிச் சூடு நடத்தினர். தற்போது சிறுமிக்கு இங்கிலாந்து மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது. மலாலா மீது துப்பாக்கி சூடு நடத்திய 2 தீவிரவாதிகளில் ஒருவர் அட்டாவுல்லா.

இவரை 2009ம் ஆண்டே பாகிஸ்தான் ராணுவத்தினர் கைது செய்து, ஆதாரங்கள் இன்மையால் பின்னர் விடுவித்திருந்தனர்.

# சவுதியில் சாத்தான் மீது கல் எறியும் திருவிழா ஆரம்பம்

சவுதி அரேபியாவில் ஹஜ் யாத்திரை மேற்கொண்டுள்ள முஸ்லிம்கள் மினா நகரில் சாத்தான் மீது, கல்லெறியும் சடங்கை நேற்று துவக்கினர். முஸ்லிம்கள் தங்கள் வாழ்நாளில் ஒருமுறையாவது மெக்காவுக்கு புனித பயணம் மேற்கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளனர். பக்ரீதையொட்டி ஐந்து நாள் புனித பயணம் சவுதியில் நேற்று துவங்கியது.

189 நாடுகளைச் சேர்ந்த முஸ்லிம்கள், சவுதியில் குவிந்துள்ளனர். இவர்களின் எண்ணிக்கை, 20 லட்சம். நேற்று முன்தினம், முஸ்தாலிபா நகரில் கற்களை சேகரித்த ஹஜ் பயணிகள் நேற்று மினா நகரில் சாத்தான் மீது கல்லெறியும் சடங்கை நிறைவேற்றத் துவங்கினர்.



சாத்தான் மீது கல்லெறியும் நிகழ்ச்சியின் போது, கடந்த ஆண்டுகளில் நெரிசலின் காரண மாக அசம்பாவிதங்கள் நடந்தன. யாத்திரிகர்கள் பலர் பலியாகினர்.

இந்த அசம் பாவிதங்களை தவிர்க்க சவுதி அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

சாத்தான்களாகக் கருதப்படும் ஐந்து தூண்கள் உள்ள பகுதியில் பக்தர்கள் ஒவ்வொருவராக வரிசையில் அனுப்பப்படுகின்றனர். கூடாரங்களும் தீப்பிடிக்காத வகையில் அமைக்கப் பட்டுள்ளன. இந்த கூடாரங்களில் தீப்பிடிக்கும் பொருட்களை வைத்திருக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.


# மகாத்மா காந்தி "தேசத் தந்தை" அல்ல, ஆறாம் வகுப்பு மாணவிக்குப் பதிலளித்தது

**- உள்துறை அமைச்சகம்**

நாட்டு விடுதலைக்காகப் போராடிய மகாத்மா காந்திக்கு "தேசத் தந்தை" என்ற பட்டம் அளிக்க அரசியல் சட்டத்தில் இடம் இல்லை என்று உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

உத்தரப்பிரதேச மாநிலம் லக்னோவைச் சேர்ந்த 6ஆம் வகுப்பு மாணவி ஐஸ்வர்யா, மகாத்மா காந்தி பற்றிய தகவல்களைத் தருமாறு தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் மனு அனுப்பியிருந்தார்.

அதில் மகாத்மா காந்திக்கு தேசத் தந்தை என்று பட்டம் வழங்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. பின்னர் மகாத்மாவைத் தேசத் தந்தை என்று முறைப்படி அறிவிக்க கோரி குடியரசுத் தலைவருக்கும், பிரதமருக்கும் ஐஸ்வர்யா கடிதம் எழுதினார். இது தொடர்பாக மீண்டும் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் மனு தாக்கல் செய்தார். இதற்குப் பதிலளித்த உள்துறை அமைச்சகம், மகாத்மா காந்தியை தேசத் தந்தை என



குடியரசுத் தலைவர் அறிவிப்பது தொடர்பாக எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.


அரசியல் சாசன சட்டம் பிரிவு 18(1)-ன்படி யாருக்கும் எந்தவித மான பட்டத்தையும் அளிக்க இயலாது. கல்வித் துறை மற்றும் இராணுவத்தைச் சார்ந்தோருக்கு மட்டுமே பட்டங்களைக் கொடுக்க முடியும் என்று கூறியுள்ளது.

# இந்திய செய்திகள்

## பத்திரிக்கையாளர்களை 'நாய்' என்று திட்டினாராம்

### விஜயகாந்த் மீது வழக்குப் பதிவு

சென்னையில் பத்திரிகையாளர்களை நாய் என்று தரக்குறைவாகப் பேசியதாக தே.மு.தி. தலைவர் விஜயகாந்த் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. தே.மு.தி.க.,வைச் சேர்ந்த எம்.எல்.ஏ.,க்கள் சுந்தர்ராஜன், மைக்கேல் ராயப்பன், அருண் பாண்டியன் உட்பட நான்கு பேர் முதல்வர் ஜெயலலிதாவை சந்தித்துப் பேசினர்.




இது குறித்து கேள்வி கேட்ட பத்திரிகையாளர்கள் மீது ஆவேசமடைந்த தே.மு.தி.க., தலைவர் பத்திரிகையாளர்களைத் திட்டியதுடன் தரக்குறைவாக நடந்துக் கொண்டுள்ளார். மேலும் அவருடன் இருந்த ஒரு எம்.எல்.ஏ.,க்கள் பத்திரிகையாளர் மீது தாக்குதல் நடத்தியதாகவும் கூறப்படுகிறது.

இதனையடுத்து விஜயகாந்த் மீதும் அவருடன் இருந்த எம்.எல்.ஏ.,மீதும் பத்திரிக்கையாளர்கள் வழக்குப் பதிவு செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

## ஆதீனம் - நித்தியானந்தா மோதல் தங்க கீரீடம், செங்கோல் யாருக்கு?

மதுரை ஆதீனம், நித்யானந்தா இடையே தங்கக் கிரீடம், செங்கோல் யாருக்கு என்பதில் மோதல் ஏற்பட்டுள்ளது. இதனால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. பாலியல் குற்றச்சாட்டுகளுக்கு ஆளான நித்யானந்தாவை கடந்த 19ஆம் திகதி இளைய மடாதிபதி பொறுப்பில் இருந்து டிஸ்மிஸ் செய்து மதுரை ஆதீனம் அதிரடி நடவடிக்கை எடுத்தார். இதைத்தொடர்ந்து இருவரும் சேர்ந்து உருவாக்கிய அறக்கட்டளை கலைக்கப்பட்டு, ஒப்பந்தங்களும் இரத்து செய்யப்பட்டது. இளைய ஆதீனமாக நியமிக்கப்பட்ட போது பெங்களூரில் இருந்து நித்தியானந்தா கொண்டு வந்திருந்த அனைத்து ஆடம்பரப் பொருட்களும் மூலையில் தூக்கி போடப்பட்டது. அதை நித்தியானந்தா ஒரு வாரத்தில் எடுத்து செல்லும்படி ஆதீனம் கெடு விதித்து இருந்தார். அதன்படி ஆதீன மடத்தில் மதுரை விளக்குதூண் போலிசார் முன்னிலையில் நித்தியானந்தாவின் பொருட்கள் அனைத்தும் மூட்டை கட்டி மூன்று லொறிகளில் ஏற்றிச் செல்லப்பட்டன. இந்நிலையில் நித்தியானந்தாவின் சீடர் ரிஷி உட்பட சிலர் ஆதீன மடத்திற்கு வந்து



நித்யானந்தாவின் தங்கக் கிரீடம், வெள்ளி செங்கோல் உள்ளிட்ட விலை உயர்ந்த பொருட்கள் மடத்தில் உள்ளது. அதை ஒப்படைக்க வேண்டும் என அருணகிரிநாதரிடம் கேட்டனர். அதற்கு அவர், எனக்கு கனகாபிஷேகம் நடந்த போது, 162 தங்கக் காசுகள் அபிஷேகம் செய்யப்பட்டது. அதை மடத்திலிருந்து செல்லும் போது நித்தியானந்தா எடுத்துச் சென்றுவிட்டார். பென்ஸ் காரும் அவர் வசம் உள்ளது. அதை கோவையில் உள்ள சர்வீஸ் சென்றில் நிறுத்தி வைத்துள்ளார். அது தொடர்பான ஆவணங்களை என்னிடம் ஒப்படைக்கவில்லை. இது தவிர அவரை ஆதீன வாரிசாக நியமித்த சில ஆவணங்களும் அவரிடம் உள்ளன. அதையும் ஒப்படைக்க வேண்டும். அதன் பிறகு தங்க கிரீடமும், செங்கோலும் திரும்ப வழங்கப்படும் என ஆதீனம் சார்பில் தெரிவிக்கப்பட்டது. இதை நித்யானந்தா சீடர்கள் ஏற்கவில்லை. இது தொடர்பாக விளக்குத்தூண் காவல் நிலையத்தில் நித்யானந்தா சீடர்கள் புகார் செய்தனர். இதனால், பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

## 14 மணி நேர மின்வெட்டு 40 ஆயிரம் ஆலைகள் மூடல்

14 மணி நேர மின்வெட்டை கண்டித்து கோவையில் நேற்று 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறு மற்றும் குறுந் தொழிற்சாலைகள் மூடப்பட்டன. கோவையில் தினசரி 14 மணி நேரம் வரை மின் வெட்டு ஏற்படுவதால் சிறு மற்றும் குறுந்தொழில் துறையினர் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். ஏற்கனவே 15 சதவீத தொழில் துறையினர் நிரந்தரமாக தொழிற்சாலைகளை மூடிவிட்டனர்.

மின்வெட்டு பிரச்னைக்கு தீர்வு காண வலியுறுத்தி கடந்த 6ஆம் தேதி உற்பத்தி நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டனர். 2ஆம் கட்டமாக நேற்று கோவை யை சேர்ந்த 19 தொழில் அமைப்புகள் இணைந்து பொது வேலை நிறுத்தத்திற்கு (பந்த்) அழைப்பு விடுத்திருந்தது. இதற்கு சிறு மற்றும் குறுந்தொழில் அமைப்பினர் மத்தியில் ஆதரவு காணப்பட்டது. பீளமேடு, கணபதி, ஆவரம்பாளையம், சிங்காநல்லூர், பாப்பநாயக்கன்பாளையம், இடையர்பாளையம், சுந்தராபுரம் குறிச்சி சிட்கோ, மலுமிச்சம்பட்டி ஆகிய பகுதிகளில் சிறு மற்றும் குறுந்தொழில் நிறுவனங்கள் 90 சதவீதத்துக்கும் மேல் அடைக்கப்பட்டிருந்தன. சிறு பம்ப் உற்பத்தி நிறுவனங்கள் முழுமையாக மூடப்பட்டன. இந்த வேலை நிறுத்தத்தால் ஒரே நாளில் மட்டும் சுமார் ரூ75 கோடிக்கு உற்பத்தி பாதிக்கப்பட்டது.

## தீபாவளி நெருங்குகிறது பட்டாசு விலை உயர்ந்தது



தீபாவளி நெருங்குவதையொட்டி பட்டாசு கடைகளில் விறுவிறுப்பான விற்பனை தொடங்கியுள்ளது. பட்டாசு விலை கடந்த ஆண்டை விட 40 சதவீதம் வரை உயர்ந்துள்ளது.

கம்பி மத்தாப்பை பொறுத்தவரை 10 கம்பிகள் கொண்ட ஒரு டப்பா ரூ.12.50இல் தொடங்கி ரூ.160 வரை உள்ளது. குருவி வெடி, லட்சுமி வெடி, ஜம்போ வெடி, டபுள் சவுண்டு வெடி போன்றவை (10 வெடிகள் கொண்ட பாக்கட்டுகள்) ரூ.9ல் தொடங்கி ரூ.225 வரை உள்ளன.

அணுகுண்டுகளை பொறுத்தவரை ஒன்று ரூ.6 இல் தொடங்கி ரூ.38 வரை உள்ளது. சரவெடிகளை பொறுத்தவரை 1000 சரம் கொண்ட வெடி ரூ.565க்கும், 2 ஆயிரம் சரம் கொண்டது ரூ.1100க்கும், 3 ஆயிரம் சரம் கொண்டது ரூ.1600க்கும், 5 ஆயிரம் சரம் கொண்டது ரூ.2650க்கும், 10 ஆயிரம் சரம் கொண்டது ரூ.5 ஆயிரத்துக்கும் விற்கப்படுகிறது. பூச்சட்டிகளை பொறுத்தவரை 10 பூச்சட்டி கொண்ட பெட்டி ஒன்று ரூ.50ல் தொடங்கி ரூ.275 வரை உள்ளது. 10 சங்கு சக்கரம் கொண்ட பெட்டி ரூ.38 ல் தொடங்கி ரூ.140 வரை உள்ளது.

சாட்டைகள் 10 கொண்ட பெட்டி ரூ.55 ல் தொடங்கி ரூ.110 வரை உள்ளது. ராக்கெட் வகைகளை பொறுத்தவரை 10 ராக்கெட் கொண்ட பெட்டி ரூ.45 ல் தொடங்கி ரூ.145 வரை உள்ளது.

## இந்திய விமானப்படைக்கு இத்தாலி ஹெலிகாப்டர் வாங்கப் போடப்பட்ட ஒப்பந்தத்தில் ஊழல்?

இந்திய விமானப்படைக்கு இத்தாலியில் இருந்து வாங்க உத்தேசிக்கப்பட்ட ஹெலிகாப்டர் ஒப்பந்தத்தில், ஊழல் எதுவும் நடந்துள்ளதா என்பது குறித்த அறிய, இது குறித்த தகவல்களை அளிக்கும்படி, அந்நாட்டை இந்தியா கேட்டுக்கொண்டுள்ளது.

இந்திய விமானப்படையில் தற்போது பயன்பாட்டில் உள்ள சேதக் ரக ஹெலிகாப்டர்கள் மிகவும் பழமையானது. இந் திய வி.ஐ.பி.,க்களின் பயன்பாட்டிற்காக பின்மெக்கானிகாவின் துணை நிறுவனமான அகஸ்டா வெஸ்ட்லாண்ட் நிறுவனத்திடமிருந்து 12 ஹெலிகாப்டர்கள் வாங்குவதற்கு கடந்த 2010ம் ஆண்டு ஒப்பந்தம் போடப்பட்டது. இதன் மொத்த மதிப்பு 720 மில்லியன் டாலர் ஆகும்.

இந்நிலையில், இத்தாலியின் பின்மெக்கானிகா நிறுவனம், உலகளவில் இது போன்ற டெண்டர்களை பெற கோடிக்கணக்கில் லஞ்சம் அளிப்பதாக சமீபத்தில் நடந்த விசாரணையில் தெரிய வந்தது. இதையடுத்து இந்தியா வாங்கவிருந்த ஹெலிகாப்டர் பேரத்திலும் வார்த்தையிலும் முறைகேடுகள் நடந்துள்ளதா என்பது குறித்தத் விசாரணை நடத்த இந்திய பாது காப்பு துறை முடிவு செய் துள்ளது. இதற்காக இத்தாலி நடத்திய விசாரணையின் தகவல் களை தங்களுடன் பகிர்ந்து கொள்ளும்படி, அந்நாட்டை இந்தியா கேட்டுக் கொண்டுள்ளது. இத்தாலி ஹெலிகாப்டர் ஒப்பந்தத்தில், ஹெலிகொப்டர்களை பரிசோதித்த இந்திய விமானப் படை பிரிகேடியர் ஒருவர் 5 மில்லியன் டாலர் வரை இலஞ்சம் பெற்றுள்ளதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. தற்போது இது குறித்து தீவிர விசாரணை நடந்து வருகிறது. இந்நிலையில், இத்தாலியுடனான டீல் கிடப்பில் போடப்பட்டு, தற்போது ரஷ்யாவின் கமோவ் மற்றும் ஐரோப்பாவின் யூரோகாப்டர் ரக ஹெலி கொப்டர்களை வாங்க இந்தியா முடிவு செய்துள்ளது.

# செவிப்புலனற்றோர் வலைப்பந்தாட்ட போட்டியில் மட்டக்களப்பு அணி சாம்பியன்

வடக்கு, கிழக்கு, மேல்மாகாண செவிப்புலனற்றோரின் மும்முனை வலைப்பந்தாட்டி போட்டியில் மட்டக்களப்பு வாழ்வோசை செவிப்புலனற்றோர் பாடசாலை சாம்பியனாகியது.

ரத்மலான செவிப்புலனற்றோர் பாடசாலை இரண்டாமிடத்தினையும் கைதடி பாடசாலை மூன்றாம் இடத்தினையும் பெற்றுக்கொண்டன.

மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் (கைதடி), ரத்மலான ஆகிய செவிப்புலனற்ற இல்லங்களின் மாணவர்களிடையேயான முக்கோண வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி கடந்த 26ஆம் திகதி மட்டக்களப்பு இந்துக்கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

பரிசளிப்பு விழாவில் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி. எஸ்.எம்.சார்ள்ஸ் பிரதம அதிதியாகவும் சமுக சேவைகள் திணைக்கள கிழக்கு மாகாண பணிப்பாளர் என்.மணிவண்ணன் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

# 3 பிரிவுகளில் கால்பந்தாட்ட போட்டி



மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்குமிடையில் 3 பிரிவுகளிற்குமான கால்பந்தாட்டப் போட்டி நேற்று நடைபெற்றது.

14 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி இரண்டு கோல்களை அடித்தது.

பதில் கோல் எதனையும் மானிப்பாய் இந்துக் கல்லூரி அடிக்கவில்லை. 16 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 1 கோலினைப் போட்டு வெற்றிபெற்றது.

18 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

# கண்ணகி சிறுவர் கழகம் சம்பியன்

வவுணதீவுப் பிரதேச செயலகமும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புத் திணைக்களமும் இணைந்து நடாத்திய வவுணதீவுப் பிரதேச சிறுவர் கழகங்களுக்கிடையிலான கிறிக்கெட் சுற்றுப் போட்டியில் கன்னன்குடா கண்ணகி சிறுவர் கழகம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

நேற்று கன்னன்குடா மகாவித்தியாலய மைதானத்தில் சிறுவர் மேம்பாட்டு உத்தியோகஸ்தர் ரி.மதிராஜ் ஏற்பாட்டில் சிறுவர் நன்னடத்தை உத்தியோகஸ்தர் எம். வரதராஜன் தலைமையில் நடை-பெற்ற இப் போட்டியில் பிரதம விருந்தினராக பிரதேச செயலா-ளர் வெ.தவராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இச்சுற்றுப் போட்டியில் கன்னன்குடா கண்ணகி சிறுவர் கழகம் முதலாமிடத்தைப் பெற்று சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டதுடன் கொத்தியாபுலை சூரிய உதயம் சிறுவர் கழகம் இரண்டாமிடத்தினையும் மண்டபத்தடி மலைம-கள் சிறுவர் கழகம் மற்றும் குறிஞ்சாமுனை சக்தி சிறுவர் கழகம் என்பன இரண்டாமிடங்களைப் பெற்றுக் கொண்டது.

இப் போட்டியில் கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்தர் அரசகுமார் மற்றும் ஒஸ்கா சிறுவர் அமைப்பின் தலைவர் அ.பஞ்சலிங்கம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# புனிதர்களின் போர் கால்பந்தாட்ட முடிவுகள்

புனிதர்களின் போர் என்று அழைக்கப்படும் சென்.ஹென்றியரசர் கல்லூரிக்கும் சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையிலான கால்பந்தாட்ட போட்டி இன்று வெள்ளிக்கிழமை சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெற்றது.

14 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் இரு அணிகளும் ஆட்டம் முடியும் வரை எந்தவித கோல்களினையும் அடிக்கவில்லை. இதனால் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

16 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் இரு அணிகளும் தலா ஒரு கோல்களைப் அடித்து, ஆட்டத்தினை சமநிலைப்படுத்தினர்.

18 வயதுப் பிரிவு ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி ஒரு கோலினை அடித்தது. பதில் கோல் எதனையும் ஹென்றியரசர் கல்லூரியினால் போடமுடியவில்லை.

20 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.


# ரஞ்சிக் கிண்ணப் போட்டிகளில் சச்சின், ஷகீர் கான்



இந்தியாவின் உள்ளூர்ப் போட்டி களான ரஞ்சிக் கிண்ணப் போட்டி யொன்றில் இந்தியாவின் நட் சத்திர வீரர்களான சச்சின் டென்டுல்கர், ஷகீர் கான் இருவரும் பங்குபற்றவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இருவரும் மும்பை அணி சார்பாகவே அவர்களிருவரும் பங்குபற்றவுள்ளனர். ரஞ்சிக் கிண்ணப் போட்டிகள் எதிர்வரும் நவம்பர் 2ம் திகதி ஆரம்பிக்கவுள்ளன. இந்தியாவில் டெஸ்ட் அணிகளுக்கு வீரர்களைத் தெரிவுசெய்வதற்கான மிக் அடிப்படையான தொடராகக் கருதப்படும் ரஞ்சிக் கிண்ணத் தொடரில் சர்வதேச வீரர்கள் பங்குபற்றுவது குறைவானதாகும். இந்நிலையிலேயே மும்பை அணியில் இடம்பெறுவதற்கு சச்சின் டென்டுல்கரும், 'கீர் கானும் விருப்பம் தெரிவித்துள்ளதாகவும், அதன் காரணமாக இருவரும் ரஞ்சிக் கிண்ணப் போட்டிகளில் மும்பை அணியின் முதலாவது போட்டியில் புகையிரத அணிக்கெதிரான போட்டியிலேயே இருவரும் பங்குபற்றவுள்ளனர்.

இங்கிலாந்து, இந்திய அணிகளுக்கிடையிலான டெஸ்ற் தொடர் எதிர்வரும் நவம்பர் மாதம் 15ம் திகதி ஆரம்பிக்கவுள்ள நிலையில் அதற்குத் தங்களைத் தயார்படுத்தும் விதமாகவே சச்சின் டென்டுல்கர், 'கீர் கான் இருவரும் இப்போட்டியில் பங்குபற்றவுள்ளனர்.

# இங்கிலாந்திற்கு சுழலும் ஆடுகளங்கள் வழங்க வேண்டும்: விராத் கோலி



இந்தியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி பங்குபற்றும் டெஸ்ற் போட்டிகளில் சுழற்பந்து வீச்சாளர்களுக்கு அதிக சுழற்சியை வழங்கக்கூடிய ஆடுகளங்களை வழங்குவதில் தவறில்லை என இந்திய அணியின் இளம் துடுப்பாட்ட வீரர் விராத் கோலி தெரிவித்தார்.

இங்கிலாந்தில் 3 டெஸ்ட்போட்டிகளில் பங்குபற்றுவதற்காக இந்தியாவைச் சென்றடைந்துள்ளது.

இங்கிலாந்து அணி வழக்கமாக சுழற்பந்து வீச்சுக்குத் தடுமாறும் வழக்கத்தைக் கொண்டுள்ளதன் காரணமாக இத்தொடரிலும் சுழற்பந்து வீச்சைக் கொண்டே இந்திய அணி இங்கிலாந்தை வெற்றிகொள்ள முயற்சிக்கும் எனக் கருதப்படுகிறது.

கடந்த முறை இந்திய அணி இங்கிலாந்து, அவுஸ்ரேலியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்ட போது பயிற்சிப் போட்டிகளில் துடுப்பாட்டத்திற்குச் சாதகமான ஆடுகளங்கள் வழங்கப்பட்டதோடு, டெஸ்ட் போட்டிகளின் போது பந்துவீச்சிற்குச் சாதகமான ஆடுகளங்கள் வழங்கப்பட்டதாகக் குற்றஞ்சாட்டிய விராத் கோலி, அதேபோல் இம்முறையும் இங்கிலாந்து அணிக்கு டெஸ்ட் போட்டிகளில் அதிக சுழலும் ஆடுகளங்களை வழங்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்நிலையில் இங்கிலாந்திற்கெதிரான பயிற்சிப் போட்டியில் பங்குபெறவுள்ள இந்திய "ஏ" அணியில் ஒரு சுழற்பந்து வீச்சாளரும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்காத நிலையில், கருத்துத் தெரிவித்த விராத் கோலி, டெஸ்ட் போட்டிகளில் இங்கிலாந்து அணிக்கு அதிக சுழலும் தன்மைகொண்ட ஆடுகளங்களே வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

இங்கிலாந்து அணியின் சி[illegible] வீரர்கள் இந்திய ஆடுகளங்க[illegible]குப் பழக்கமானவர்களாக இருக்கலாம், ஆனால் போட்டிகளில் ஆடும் போதே அதன் க'டம் புரியும் எனத் தெரிவித்த விராத் கோலி, இந்திய ஆடுகளங்களைக் கணித்து ஆடுவது இலகுவதானதல்ல எனத் தெரிவித்தார்.

# திருடப்பட்ட ஒலிம்பிக் பதக்கங்களில் ஒன்று மீட்பு



லண்டனில் நடந்து முடிந்த ஒலிம்பிக் போட்டியில் வெல்லப்பட்டிருந்த பதக்கங்களில் இரண்டு பதக்கங்கள் அண்மையில் திருடப்பட்டன.

அவற்றில் ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு பொலிஸார் அறிவித்துள்ளனர்.

லண்டனில் அண்மையில் இடம்பெற்ற ஒலிம்பிக் போட்டியின் போது பதக்கங்களை வென்ற இங்கிலாந்து வீரர்களை கௌரவிக்கும் வகையில் அந்நாட்டு மகாராணி எலிசபெத் ஏற்பாடு செய்திருந்த விருந்துபசார நிகழ்வொன்றின் போது இரு பதக்கங்கள் திருடப்பட்டிருந்தன.

துடுப்புப் படகு மற்றும் ஹொக்கி போட்டிகளில் பங்கேற்ற அலெக்ஸ் பார்டிரிட்ஜ் மற்றும் ஹன்னா மெக்லியோட் ஆகியோரால் வென்றெடுக்கப்பட்ட வெண்கலப் பதக்கங்களே இவ்வாறு திருடப்பட்டிருந்தன.

இதனையடுத்து, திருடப்பட்ட தங்களது பதக்கங்களை திருப்பி ஒப்படைக்குமாறு மேற்படி இரு வீரர்களும் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இந்நிலையில், ஹொக்கி போட்டியில் பங்குபற்றிய ஹென்னாவின் வெண்கலப் பதக்கம் மீட்கப்பட்டுள்ளது: அலெக்ஸின் பதக்கம் தொடர்பில் லண்டன் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# காயமடைந்த அஜந்த மெண்டிஸ் மலேசியாவில் கிரிக்கெட் விளையாடுகிறார்

இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் அஜந்த மெண்டிஸ் மலேசியாவில் கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்றியுள்ளார்.

அஜந்த மெண்டிஸ் காயமடைந்துள்ளதாக இலங்கைக் கிரிக்கெட் சபை அறிவித்துள்ள நிலையிலேயே அவர் கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

கிரிக்கெட் போட்டிகளில் கழக மட்டத்தில் விளையாடுவதற்காக இலங்கை இராணுவத்தில் இணைந்திருந்த அஜந்த மெண்டிஸ், மற்றொரு வீரரான சீக்குகே பிரசன்னா ஆகியோர் இலங்கை இராணுவ அணிக்காக மலேசியாவில் கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்றியுள்ளனர்.இலங்கை இராணுவ அணி சிநே கபூர்வ கிரிக்கெட் போட்டிகளுக்காக மலேசியா சென்றுள்ளதுடன், அங்கு சென்ற இராணுவ அணியின் தலைவராக அஜந்த மெண்டிஸ் செயற்பட்டுள்ளார்.

3 போட்டிகளில் அங்கு இராணுவ அணி போட்டிகளில் பங்குபற்றியுள்ளது. இராணுவ அணி பங்குபற்றிய 3 போட்டிகளில் 2 போட்டிகளில் வெற்றியையும், மற்றைய போட்டி மழை காரணமாகக் கைவிடப்பட்டு முடிவு பெறப்படாத போட்டியாகவும் மாறியிருந்தது.

இலங்கை அணி ரோயல் மலேசியன் விமானப்படை அணியை 7 விக்கெட்டுக்களால் வெற்றிகொண்டதோடு, மலேசிய கிரிக்கெட் சபையின் ஜனாதிபதி அணியை 170 ஓட்டங்களால் வெற்றிகொண்டிருந்தது. மலேசியப் படை வீரர்களுக்கெதிரான போட்டி மழை காரணமாகக் கைவிடப்பட்டிருந்தது.

அண்மையில் அறிவிக்கப்பட்டிருந்த நியூசிலாந்து அணிக்கெதிரான டுவென்டி டுவென்டி போட்டி மற்றும் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான அணியில் அஜந்த மெண்டிஸ் காயம் காரணமாக சேர்த்துக் கொள்ளப்படவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 29.10.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது